

அரசியர் மூவர்

அ. ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

அரசியர் மூவர்

பேராசிரியர்
அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 600 017.

கங்கை முதற்பதிப்பு : பிப்ரவரி 1997
கங்கை இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 2000

விலை : ரூ. 27.00

Laser Typeset at : JIJO GRAPHICS, Chennai - 17. ☎ 485 13 19
Printed at : M.S. Printing Works Chennai - 14.

முன்னுரை

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'அரசியர் மூவர்' என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்நூலில் 'கேகயன் மடந்தை' என்ற தலைப்பில் கைகேயி பற்றி ஒரு கட்டுரை வரையப்பெற்றது. அன்று இருந்த என் மனநிலை, அனுபவம் என்பவற்றின் அடிப்படையில் அக்கட்டுரை அமைந்தது. ஏறத்தாழ அனைவரும் ஏற்றுக்கொள்ளும் முறையில் அப்பாத்திரப் படைப்பை ஆராய்ந்து எழுதியுள்ளேன். காலம் செல்லச் செல்ல, கம்பன் பாடல்களில் மனம் தோயத் தோய அப்பாடல்களில் வரும் சொற்கள் பல்வேறு நிலைகளில் பல்வேறு வகையாகப் பொருள் தந்து நிற்றலை உணர முடிந்தது. தெளிந்த ஆற்றில் நீரோட்டத்தின் கீழேயுள்ள மணல் மிக அண்மையில் இருப்பது போல் தோன்றினாலும் இறங்கிப் பார்க்கும்போது அதன் உண்மையான ஆழம் வெளிப்படுகிறது. இதை மனத்தில் கொண்டுதான் கவிஞனும் 'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' என்று பேசுகிறான்.

'கேகயன் மடந்தை' என்ற அந்தக் கட்டுரை கைகேயி பற்றிக் கவிஞன் கூறிய சொற்கள், பாத்திரங்கள் பேசிய சொற்கள், இறுதியாகக் கவிஞன் கூறும் சொற்கள் ஆகிய மூன்று நிலைகளில் ஆய்வு செய்து எழுதப்பெற்றது.

இந்த இடைக்காலத்தில் கவிஞன் சொற்களுக்கெல்லாம் மறைந்துள்ள புதிய பொருளுமுண்டு என்ற எண்ணம் உறுதிப்படலாயிற்று. அந்த அடிப்படையில் ஓடிய சிந்தனையின் வடிவந்தான் 'நாடக மயில்' என்ற இப் புதிய கட்டுரை.

'கேகயன் மடந்தை' யின் பின் இதனைப் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளேன்.

கூனியை விளங்கிக்கொண்டால் ஒழியக் கைகேயியை நன்கு அறிய முடியாதென்பதால் கூனியைப் பற்றிய கட்டுரை முதற்கண் 'சூழ்ந்த தீவினை'யாக இடம் பெற்றுள்ளது.

இப்புதிய கட்டுரையை இடையே சேர்க்காமல் முதலில் சேர்க்க வேண்டுமென்று முடிவுசெய்து அதற்கு ஏற்ற முறையில் அதனைச் செப்பம் செய்து தந்த திரு. தமிழப்பன் எம்.ஏ,எம்.பில்., அவர்கட்கு நன்றி உரியதாகும்.

ஆசிரியன்.

உள்ளுறை

1. சூழ்ந்த தீவினை

படைப்பு இரு வகை

கம்ப நாடன் காப்பியமாகிய அரிய பூங்காவில் அனைத்து வகையான பூக்களையும் காணலாம். அவற்றுள், மணத்தால் சிறந்தவை சில; நிறத்தால் சிறந்தவை சில ; இனிய தேனுடைமையாற் சிறந்தவை சில; மருந்தாகி நிற்பதாற் சிறந்தவை சில; பெரிய வடிவு பெற்றமையாற் சிறந்தவை சில; சிறிய வடிவு பெற்றும் சிறந்தவை சில.

இத்தொகுப்பினுள் அடங்காமல் உள்ள மலர்களும் சில உள. அவை விடத்தன்மை நிரம்பியவை ; கண்டாலும் தீமை பயக்கும் இயல்பு வாய்ந்தவை. என்றலும் என்ன? ஏனைய வகைகளிற் சிறந்து விளங்கும் பூங்காவில் இருப்பதாலும், ஏனைய மலர்களின் நன்மையையும் மணத்தையும் எடுத்துக் காட்ட ஏதுவாய் இருப்பதாலும் இவையும் சிறந்து விளங்குகின்றன எனலாம்.

உயர்வும் தாழ்வும் உடைய இம்மலர்கள் அனைத்தும் அக்கவிஞனுடைய படைப்புகளே என்பதைக் கண்ட பிறகு ஒரு பாத்திரத்திடத்து விருப்பும், மற்றொரு பாத்திரத்திடத்து வெறுப்பும் காட்டுதல் அறிவுடைமையாகாது. இராமனும் சீதையும் கம்பனுடைய படைப்புகள்; அப்படியே இராவணனும் கூனியும் அவனுடையவர்களே. இப்பாத்திரங்களைப் பற்றி நாம் காணும்பொழுது கவிஞனின் ஆற்றலைத்தான் காண வேண்டும்.

கவிஞன் படைப்பின் சிறப்பு

மனித மனம் ஆழங்காண முடியாத அளவு விரிந்தும், ஆழ்ந்தும் இருக்கிறது ; மேலும், அதில் சுழியிட்டுத் தோன்றும் சுழற்சிகளுக்குக்

காரண காரியத் தொடர்பு கற்பித்தல் என்பது ஏறத்தாழ இயலாத காரியம். அச்சுழல்களில் சிலவற்றை எடுத்துக்கொண்டு கவிஞன் தன்னுடைய பாத்திரங்களைப் படைக்கிறான். அவனுடைய வெற்றியை அளவிடச் சுலபமான ஒரு வழி உண்டு. எவ்வளவு தூரம் நம் அனுபவத்திற்கு இப்பாத்திரம் பொருத்தமாக இருக்கிறது என்று காணும் பொழுது இவ்வுண்மை வெளிப்படும் ; யாரோ நாம் அறிந்த ஒருவரிடம் இப்பண்பாடு இருப்பதுபோல ஒரு நினைவு உண்டாகிறது; ஆழ்ந்து பார்த்தால், நம்மிடங்கூடச் சில சமயங்களில் இக்குறை பாட்டைக் காண்டல் கூடும். நம்மிடமே காணப்படும் காரணத்தால், இவ்வளவு வெறுக்கத் தகுந்தது என்றோ நாம் நினைத்ததில்லை. ஆனால், இதே பண்பைப் பிறரிடம் காணும் பொழுதுதான் இதன் முழுத்தன்மையையும் நாம் அறிய முடிகிறது. இத்தகைய பண்பாடுகள் சிலவற்றை ஒன்றுசேர்த்துத்தான் கவிஞன் தன் பாத்திரங்களைப் படைக்கிறான். உதாரணமாக ஒன்றைக் காண்போம்.

காரணமின்றித் தீமை புரிவோர்

காரணமில்லாமல் பிறருக்குத் தீமை செய்பவர்களை நீங்கள் வாழ்க்கையில் கண்டதுண்டா? இல்லையானால், நீங்கள் அதிருஷ்ட சாலிகள். ஆனால், உலகில் சிலர் இவ்வாறு இருக்கின்றனர். கூடுமான வரையிற் பிறருக்குத் தீமை செய்வதே இவர்கள் தொழில். தீமை செய்யப்படுபவர் இவருக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாதவ ராகக்கூட இருக்கலாம். அதுபற்றித் தீமை செய்பவருக்குக் கவலை இல்லை. முடிந்த அளவு தீமையைப் பிறருக்குச் செய்வதில் பெருமகிழ்ச்சி கொள்ளும் சீலர்கள் இவர்கள். தாம் நேரே பிறருக்குத் தீமை செய்ய இயலவில்லையாயினும், கவலை இல்லை; பிறர் படும் வருத்தம் கண்டேனும் அதற்கு மகிழ்வர்; “வேணும் சார்! எனக்கு அப்பவே இவர் இவ்வாறு துன்பப்படுவார் என்பது தெரியும்! ” என்று கூறித் தம் மகிழ்ச்சியை வெளியிடுவர். பிறர் துன்பங்கண்டு இன்ப மடையும் இப் ‘பெரியோர்’ உலகில் மிகச் சிலர் உண்டு. மிகச் சிலர்

என்றாலும், வாழ்ந்துகொண்டிருக்கும் இக்கூட்டத்தாருக்குக் கவிஞன் ஒரு வடிவு கொடுக்க முனைகிறான். அம்முயற்சியின் பயன் தான் ‘கூனி’ என்னும் பாத்திரம்.

இராம காதையின் கட்டுக்கோப்புக்கு ‘மந்தரை’ எனப்படும் கூனி மிக இன்றியமையாதவள். அவள் இல்லையானால், இராமன் காடு செல்லப்போவதில்லை; இராவணன் கொல்லப்படப் போவதில்லை. இவை இரண்டுந்தாம் இராமாயணத்தில் உயிர் நாடிகள் என்றால், இவை நடைபெற நேரடியாகக் காரணமாக இருப்பவள் கூனிதான் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே, அவளைப் பற்றி ஆராயும்பொழுது இந்த எண்ணம் நம்முடைய மனத்தின் அடிப்படையில் இருந்தாதல் வேண்டும். ஆனால், இத்தகைய நன்மை கடைசியில் விளையப்போகிற காரணத்தால் அவள் செய்த காரியத்தைச் சிறந்தது என்று யாருங் கூறிவிட மாட்டார். தவறான வழிகளைக் கடைப்பிடித்து நற்பயன் விளைவிப்பதைச் சிறந்த வழிகளுள் ஒன்றாகச் சில ‘சயமவாதி’கள் கருதினும், இந்த நாட்டார் இதனை நல்ல முறை என்று ஒத்துக்கொள்வதில்லை. இறுதியில் எத்துணை நன்மை விளைவதாயினும், தவறு தவறுதான்.

கசப்பான மருந்தை உட்கொள்ளுகிறோம், பல சமயங்களில். அம்மருந்து நோயைப் போக்குவது உண்மைதான். எனினும். அக் கசப்பும் மெய்ம்மையானது என்பதை மறுக்க முடியாதே. கூனியின் செயலால் நன்மை விளையினும், அவள் செய்தது தீமைதான்.

> “குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்.”

என்ற குறளை அடிப்படையிற் கொண்டே ஆராய்ச்சி நடைபெற வேண்டும். இவை அனைத்தும் நம் மனத்தில் தோன்றுமாறு கவிஞன் கூனியை அரங்கத்திற்குக் கொணர்கிறான்.

முரண் அழகு

மந்தரையை நமக்கு அறிமுகம் செய்துவைக்கு முன் ஏறத்தாழ நாற்பது பாடல்கள் மூலம் ஒரு நிலைக்களத்தை அமைக்கிறான் கவிஞன். அயோத்தி மக்கள் இராமன் முடி சூடப் போகிறான் என் பதைக் கேட்டு எல்லை மீறி மகிழ்கின்றார்கள். அவர்கள் மகிழ்ச்சி மிகுதியால் வழியில் கண்டவர் அனைவருக்கும் பொருளை வாரி வழங்குகின்றார்கள்; நாட்டை அலங்கரித்தார்கள் ; வீட்டை அலங்கரித்தார்கள்; தம் வீடுகளில் ஏதோ விழா நடப்பது போலவே ஒவ்வொருவரும் நினைத்தனர். அயோத்தியைப் பார்த்தால்,

'பொன்னகர் இயல்பெனப் பொலியும்.' (1445)

நகர மக்களோ எனில்,

"ஆர்த்தனர் ; களித்தனர் ; ஆடிப் பாடினர் ;
வேர்த்தனர் ; தடித்தனர் ; சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் ; மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்."
(1433)

எல்லை மீறிய இந்த மகிழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்கு, 'இது ஏதோ ஒரு பேராபத்தின் அறிகுறி!' என்ற எண்ணம் தோன்றத்தான் செய்கிறது. எல்லை மீறிய மகிழ்ச்சியில் திளைக்கும் பொழுது இன்றுங்கூட நம் மனத்தில் இத்தகைய எண்ணம் தோன்று தல் இயல்பு. பல சமயங்களில் இவ்வச்சம் மெய்ம்மையாக நடைபெற் றும்விடுகிறது. அதே நிலைமையை உண்டாக்கவே கவிஞன் நகர மக்களின் இவ்வாரவாரத்துடன் கூடிய மகிழ்ச்சியை அறிவித்துவிட்டு, உடனே கூனியைக் கொண்டுவந்து நிறுத்துகிறான். அவளை எவ்வளவு அழகாகக் கவிஞன் அறிமுகஞ்செய்கிறான் என்று நினைக்கிறீர்கள்!

"இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்." (1445)

என்ற அடிகள் மூலம் இராவணன் செய்யப்போகும் தீமைக்கு முன்னறிவிப்புச் செய்யப்படுகிறது. அதிலும் 'இழைத்த' என்ற சொல்லின் ஓசை நயம் ஆய்ந்து கோடற்குரியது. ஒரு தீமையை 'நடந்தது, நிகழ்ந்தது' என்று கூறுவது பொருத்த முடையது. ஆனால், இங்கு நடைபெறப் போகும் தீமை பிறர் அறியா வகையில், முன்னறிவிப்பு இல்லாமல், மெள்ள ஓசைப் படாமல் நடைபெறப் போகிறது. கூனியின் சூழ்ச்சியை, அவளும் அவளாற் கெடுக்கப்பட்ட கைகேயியும் தவிர வேறு யாரும் இறுதிவரை அறியவில்லை; அறியக் கூடவில்லை. ஆகலின், ஆசிரியன் 'இழைத்த' என்ற அழகிய சொல்லை இங்குப் பயன்படுத்தினான்.

காரணப் பெயர்

மேலும், ஒரு பாத்திரத்தை முதன் முதலில் அறிமுகஞ்செய்து வைக்கும்பொழுது அப்பாத்திரத்தின் இயற்பெயரையே கூற வேண்டும். அவ்வாறு கூறாமல், அம்பாத்திரம் பெற்றுள்ள காரணப் பெயரை முதன்முதலில் கூறுவதென்றால், அதற்குத் தக்க காரணம் ஒன்றிருக்க வேண்டும். அக்காரணப் பெயரைக் கூறுமுகமாகவே அப்பாத்திரத்தைப்பற்றி நம் எண்ணத்தைத் தூண்ட முயல்கிறான் கவிஞன். சாதாரணமான நிலைமையில் ஒரு பாத்திரத்தை முதன் முதலில் சந்திக்கும்பொழுது விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் சந்திக்கிறோம். பின்னர் அப்பாத்திரம் செய்யும் செயல்களை வைத்துத்தான் விருப்பு வெறுப்புக் கொள்கிறோம். இதுதான் முறை. ஆனால், இம்முறையை மாற்றி, எடுத்த எடுப்பிலேயே நாம் வெறுப்புக் கொள்ள வேண்டும் என்று கவிஞன் நினைப்பதாலேதான் முதலிலேயே 'கொடுமனக் கூனி' என்ற அடையடுத்த காரணப் பெயரால் அவளை நமக்கு அறிமுகஞ்செய்து வைக்கிறான். கூனி கொடுமை நினைக்கிறாள். ஆனாலும், அதனை நிறைவேற்றும் ஆற்றல் அவள்பால் இல்லை. ஆனால், அக்கொடுமையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் நிறைவேற்றி வைப்பவளாகிய கைகேயியைக் கவிஞன் எவ்வாறு அறிமுகஞ்செய்கிறான், தெரியுமா?

"நாற்கடல் படுமணி நளினம் பூத்ததுஓர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண் அளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாள்." (1448)

என்று அவளைமட்டும் இவ்வாறு உயர்ந்த நிலையிற் கூறக் காரணம் யாது? இவ்விருவரும் இழைத்தது தீமையேயாயினும், இருவர்க்கும் இடையில் கடலனைய வேற்றுமையைக் காண்கிறான் கவிஞன். கைகேயியின் மனம் முதலில் மாறாமல் இருந்து, இறுதியில் மாற்றம் அடைந்தது உண்மைதான். அதற்காகவும் அவளை ஓரளவு போற்று கிறான் கவிஞன். இயற்கையாகவே அவள் மனம் தூய்மையானது என்பதையும், கூனி மிகவும் முயன்று கெடுத்த பின்னரே அவள் மனந் திரிந்தது என்பதையும் நமக்கு எடுத்துக்காட்டக் கவிஞன் பெரிதும் முயல்கிறான். "ஆழ்ந்த பேரன்பினாள்" (1454) என்றும், "தெய்வக் கற்பினாள்" (1450) என்றும், "வாய் கயப்புற மந்தரை வழங்கிய வெஞ் சொல்"(1469) கைகேயியை ஒன்றுஞ் செய்யவில்லை என்றும் கவிஞன் கூறிப் பரதன் தாயினுடைய பண்பட்ட தன்மையை நன்கு எடுத்துக் காட்டுகிறான்.

ஒப்பு நோக்குக

அவ்வாறு முதலில் தூய உள்ளத்தளாய் இருந்த கேகயன் மகள், இறுதியில் மனம் மாறினாலும், அதற்குத் தக்க காரணங்கள் உண்டு. ஆகலின், அவளை முற்றிலும் கெட்டவள் என்று கூறுவதற் கில்லை. மைந்தன்மேற் கொண்ட பாசத்தாலும் அறியாமையாலுமே அவள் தவற்றைச் செய்கிறாள். மேலும், தான் செய்யும் தவறு இத் துணைப் பெரிய இராமாயணத்திற்கு இடமாகிவிடும் என அவள் கன விலும் கருதியவள் அல்லள். எனவே, அவளை நல்லவளாகவே ஆசிரியன் அறிமுகஞ்செய்துவிடுகிறான். ஆனால், கூனியைப் பொறுத்த வரை, அவள் தான் செய்யும் கொடுமையை நினைந்து பார்த்து அதனால் விளையப்போகும் தீமையையும் ஆராய்ந்து

வேண்டும் என்றே செய்கிறாள் ஆகலின், அவளை அறிமுகம் செய்து வைக்கும்பொழுதே கொடுமனம் உடையவளாக அறிமுகஞ்செய்து வைக்கிறான். அன்றியும், அவளால் தீமை செய்யப்படும் இராமனோ, அவளுக்கு ஒரு தீங்குஞ் செய்தவன் அல்லன். அப்படி இருக்கவும், அவனுக்குத் தீமை செய்யத் துணிந்த அவள் மன நிலையை என் னென்று கூறுவது! கட்டுரையின் தொடக்கத்தில் கூறியபடி, காரணம் இன்றியும் பிறருக்குத் தீமை செய்ய முற்படும் இழிகுணம் உடைய வர்களுள் தலையாயவள் கூனி. எனவே, அவளுடன் பிறந்த இந்த இழிதகைமையை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதிய கம்பநாடன்,

'கொடுமனக் கூனி'	(1445)
'மூன்றுலகினுக்கும் ஓர் இறுதி மூட்டுவாள்'	(1446)
'காலக்கோளனாள்'	(1449)
'வெவ்விடம் அனையவள்'	(1452)
'சூழ்ந்த தீவினை'	(1454)
'வேதனைக் கூனி'	(1460)
'தீய மந்தரை'	(1483)

என்ற தொடர்களால் கூனிக்கு ஓர் 'அருச்சனை' செய்துவிடுகிறான். இவ்வாறு தொடர்ந்து அவளை ஏசியது போதாதென்று கருதிப் போலும் 'உள்ளமும் கோடிய கொடியாள்' (1487) என்று இறுதியாகச் சொல்லித் தீர்த்துவிட்டான். உள்ளமும் என்ற உம்மையால், உடலும் வளைந்த கூனி என்பதைப் பெற வைத்தான்.

பல வகை முயற்சி

இக்கொடுமனக் கூனி கைகேயியின் மனத்தைத் திரிக்கப் பல வழிகளைக் கையாண்டாள்; முதன்முதலாகக் கைகேயியின் 'தாய்மைக்கு' முறையிடுகிறாள்.

"மறந்திலள் கோசலை உறுதி மைந்தனும்
சிறந்த நல் திருவினில் திருவும் எய்தினான்
இறந்திலன் இருந்திலன் என்செய்து ஆற்றுவான்
பிறந்திலன் பரதன்நீ பெறுத லால்,' என்றாள்". (1462)

என்ற முறையில் கைகேயின் தாய் மனம் இளகுமோ என்று கூறிப் பார்த்தாள் ; அம்முறை பயன்படாது என்று கண்டவுடன் சகக்களத்தி யாகிய கோசலை பெறப்போகும் வாழ்வைப் பெரிதுபடுத்திக் காட்டி னாள். அதனைச் சொல்லும்பொழுதே கைகேயியின் அகங்காரத் தீக்கு எண்ணெய் விடுகின்றாள். 'இராமன் முடி சூடிய பிறகு நீ வறுமை யடைவாய். நின்னை வந்து இரந்தவர்க்குக் கொடுக்கவும் நின்பால் ஒன்றும் இராது. அந்நிலையில் நீ கோசலையைச் சென்று பணிந்து, அவள் தருவதைப் பெற்றுத்தான் வாழ வேண்டும்,' என்று கூறுகிறாள். இதிலும் கைகேயி மனம் மாறுபடவில்லை. இவ்விரு வகையிலும் கேகயன் மகள் மனம் மாறவில்லை என்பதைக் கண்ட கூனி, இறுதியாக ஒரு 'பிரமாஸ்திர'த்தைப் பயன்படுத்திவிட்டாள்; என்றைக்குமே பெண்களுக்குரிய ஒரு குணத்தைப் பயன்படுத்த முடிவு செய்துவிட்டாள். எந்தப் பெண்ணும் தாய் வீட்டைப் பிறர் குறை கூறப் பொறுத்திருக்கமாட்டாள். அதிலும், சாதாரண இடத்தில் பிறந்து, உயர்ந்த இடத்தில் வாழ்க்கைப்பட்ட பெண்களுக்கு ஒரு வகையான 'தாழ்மை உணர்ச்சி' Inferiority Complex இருந்து கொண்டேயிருக்கும். அதை யாரேனும் எடுத்துக் காட்டிவிட்டால், புலிபோலச் சீறும் இயல்புடையவர்கள் பெண்கள். பெண்ணாகிய கூனிக்கு இது தெரியாதா? எனவே, இது வரை திரியாத கைகேயி யின் மனத்தைத் திரிக்க இம்முறையைக் கையாண்டுவிட்டாள்.

பிரமாஸ்திரம்

சக்கரவர்த்தியாகிய தசரதனை நோக்கக் கேகயன் சாதாரண மான சிற்றரசன்தான். தசரதன் ஒரு புறம் இருக்க, ஜனகன்கூடக் கேகயனை நோக்கப் பெரிய அரசன்தான். மேலும், ஜனகனுக்கும்,

கேகயனுக்கும் பகைமை வேறு உண்டு. என்றாலும், கேகயன்மேல் படையெடுத்தால் அவன் மருமகனாகிய தசரதன் மாமனாருக்கு உதவியாக வருவான் என்று அஞ்சிய ஜனகன், இதுவரை சும்மா இருந்துவிட்டான். இப்பொழுது இராமன் மன்னனாகிவிட்டால், ஜனகனுக்குக் குளிர்விட்டுவிடும். இராமன் அரசனாகி விட்ட பிறகு ஜனகன் கேகயன் மேல் படையெடுத்தால், அவனுக்கு யார் உதவிக்கு வருவார்கள்? ஆகவே, 'உன் தகப்பன் வாழ வேண்டுமானால், இராமன் அரசனாகக் கூடாது,' என்று தருக்க முறைப்படி கூனி கூறுகிறாள்.

"காதல் உன்பெருங் கணவனை அஞ்சிஅக் கனிவாய்ச்
சீதை தந்தைஉன் தாதையைத் தெறுகிலன் ; இராமன்
மாது லன்அவன் ; உந்தைக்கு வாழ்வினி யுண்டோ?
பேதை உன்துணை யாருளர் பழிபடப் பிறந்தார்?

"மற்று நுந்தைக்கும் வான்பகை பெரிதுள மறத்தார்
செற்ற போதுஇவர் சென்றுஉத வாரெனில் செருவில்
கொற்றம் என்பதுஒன்று எவ்வழி உண்டது கூறாய் ;
சுற்ற முங்கெடச் சுடுதுயர்க் கடல்விழத் துணிந்தாய்!"

(1480, 1481)

என்ற முறையில் விரிவாகவும் மனத்திற் பதியும் வகையிலும் கேகயன் படப்போகும் துயரத்தைக் கூனி கூறினாள். தன் தாய் வீட்டுக்கு நேரிடப் போகும் இழிவைக் கற்பனையில் காணத்தொடங்கி விட்டாள் கைகேயி. எந்தப் பெண்ணும் பொறுக்க இயலாத ஒரு காட்சியாகலின், அவள் மனம் உடனே மாறிவிட்டதாம். இதைக் கவிஞன் அழகாக,

"தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது." (1483)

என்று கூறுகிறான்.

அறிவுத் திறம்

எதனை எவ்வாறு கூறினால் பயன் விளையும் என்பதை நன்கு அறிந்து கூறும் திறம் படைத்த கூனியின் அறிவுத் திறத்தை நாம் பாராட்டாமல் இருக்க இலயாது. என்றாலும், அவள், அறிவைத் தீமை புரியவே செலவிட்டாள் என்பதை நினைக்க, வருந்தாமல் இருக்கவும் முடியவில்லை. அவளுடைய ஆழ்ந்த தீமை, தனியே காணும் பொழுதும் ஆத்திரம் ஊட்டுவதாகவே உளது. என்றாலும், வஞ்சகத்தை நேர்மையின் அருகிலும் தீமையை நன்மையின் அருகிலும் வைத்துக் கண்டால் தான் உள்ளவாறு அவற்றின் கொடுமையை அறிய முடியும். எனவே, கவிஞன் கூனியின் கொடுமையைக் கைகேயியின் நன்மையின் எதிரே நிறுத்தி, இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் காட்டுகிறான்.

கைகேயியின் அரண்மனையை அடைந்த கூனி, அவள் உறங்குவதைக் கண்டு, அவள் கால்களைத் தொட்டு, அவளுக்கு விழிப்பு உண்டாகுமாறு செய்தாள். விழித்து எழுந்த கைகேயி, முற்றிலும் துயில் நீங்கப்பெறாதவளாய், கூனி எழுப்பியதன் காரணத்தை அறிய இயலாதவளாய், விழிக்கிறாள். அந்நிலையில் கூனி பேசுகிறாள். "மிகு நஞ்சு பொருந்திய பாம்பு, தன்னை விழுங்குவதற்காக அருகில் வரவும், அதுபற்றிக் கவலை கொள்ளாமல் ஒளி விட்டு விளங்குகின்ற சந்திரனை ஒத்து, பெரிய துன்பம் உன்னை வந்து அணுகவும் இப்படிக் கவலை இல்லாமல் உறங்கலாமா?" என்ற கருத்துப்பட,

"'அணங்குவாள் விடஅரா அணுகும் எல்லையும்
குணங்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லைநீ உறங்கு வாய்,' என்றாள்."(1451)

இதனைக் கேட்ட கைகேயி சிறிதும் பதற்றம் அடையவில்லை. "அரசிற் பிறந்து பின் அரசில் வளர்ந்து அரசில் புகுந்து பேரரசி

யான" கைகேயி இதற்கெல்லாம் பதற்றம் அடைவாளா? எனவே, கூனியின் இந்தக் கூப்பாட்டைச் சிறிதும் மதியாதவளாய்,

"தெவ்வடு சிலைக்கைஎன் சிறுவர் செவ்வியர் ;
அவ்வவர் துறைதொறும் அறம்தி றம்பலர் :
எவ்விடர் எனக்குவந்து அடுப்பது ஈங்கு?" (1452)

என்று கேட்கிறாள். இருவரும் நின்று பேசும் இச்சொற்களால் கவிஞன் தீமையின் பதற்றத்தையும் நன்மையின் பொறுமையையும் நமக்கு எடுத்துக் காட்டிவிடுகிறான். கைகேயியின் எதிரே கூனியை வைத்துக் காணும்பொழுது அவள் கொடுமை பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. அடுத்து, 'இராமன் முடி சூடப் போகிறான்,' என்கிறாள் கூனி. இச்சொல்லைக் காதாற் கேட்டதும் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்த கைகேயி, சிறந்த ஒரு நவமணி மாலையைக் கூனிக்குப் பரிசாக நல்கினாள். மகிழ்ச்சியில் திளைத்து மாலையைத் தருகின்ற கைகேயியின் எதிரே கூனி என்ன செய்கிறாள் பாருங்கள்.

"தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீயுக
விழித்தனள் வைதனள் வெய்து உயிர்த்தனள்
அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தைஅக் கொடிய கூனியே." (1459)

பிறர் அடைகின்ற இன்பத்தைப் பொறாமல் அவர்கட்குத் தீங்கு செய்ய நினைக்கும் கயவர் அனைவரும் கூனியின் இனத்தைச் சேர்ந்தவர். அவர்கள் பிறர் மகிழும் பொழுது அடையும் மனவருத்தத்தைத் தான் இப்பாடல் கூறுகிறது.

இராமனுக்குப் பட்டங்கிடைத்தாலும் பரதனுக்குப் பட்டங் கிடைத்தாலும் கூனியைப் பொறுத்தவரை ஒன்றுதான். தனிப்பட்ட முறையில் அவளுக்கு ஒன்றும் பயன் ஏற்படாது என்று அறிந்திருந்தும் ஏன் இவ்வாறு சூழ்ச்சி செய்கிறாள்? கூனி செய்யும் இத்துணைப் பெரிய சூழ்ச்சிக்கு ஏதாவது ஒரு காரணம் இருத்தல் வேண்டும். ஒன்று, பரதன்மேல் கொண்ட அன்பினால் அவள் இதனைச் செய்

திருத்தல் கூடும். ஆழ்ந்து நோக்கினால் இக்காரணம் நிலை பெறுமாறு இல்லை. பரதன்மேல் கொண்ட அன்பால் தூண்டப்பட்டு இதனைச் செய்தாள் எனில், இறுதிவரை பரதனுக்குப் பட்டம் கிடைக்க அவள் முயன்றிருத்தல் வேண்டும். தன் வேலை முடிந்ததும் அவள் யாதொரு முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. மேலும், பரதன்மேல் கொண்ட அன்பால் இது செய்தாள் எனில், இராமனை ஏன் காட்டிற்கு அனுப்பச் சூழ்ச்சி செய்ய வேண்டும்? பரதனுக்குப் பட்டத்தைப் பெறுவதுடன் அவள் நிறுத்தி இருக்கலாமன்றோ? இராமன் காடு செல்வதற்கும், பரதன் பட்டம் அடைவதற்கும் தொடர்பு யாது? ஒன்றுமில்லை. எனவே, அவள் இராமனைக் காட்டுக் கனுப்பவே இப்பெருஞ் சூழ்ச்சியைச் செய்தாள் என்று நினைய வேண்டி உளது. அச்சூழ்ச்சியை நிறைவேற்றவே கைகேயியையும் பரதனையும் பயன்படுத்திக்கொண்டாள் என்றும் நினைய வேண்டி யுளது.

எவ்விதமான காரணமும் இல்லாமல் இராமன் மேலும் கோசலை மேலும் கூனிக்குத் தீராப் பகை மூண்டுவிட்டது. கைகேயி யின் தோழி என்பதற்காக ஒரு வேளை கோசலையாவது கூனியை இழித்துப் பேசியிருக்கலாம். ஆனால், இராமன் மறந்தும், கூனிக்குத் தவறு இழைக்காதவன். இருந்தும், இவ்விருவருக்கும் தீங்கிழைக் கவே கூனி இவ்வடாத செயலைச் செய்தாள் ஆகலின், அவள் கொடுமனம் உடையவளே.

□

2. கேகயன் மடந்தை

கம்பன் கட்டிய கலைக் கோவிலில் ஓர் இன்றியமையாத பாத்திரமாவாள் கைகேயி. அவளாலேதான் இராம காதை நடைபெறுகிறது. இராமன் உலகில் தோன்றிய பயன் விளைய, அவள் ஒருத்தியே காரணமாகிறாள்.

தேவர் துயரைப் போக்குவதற்காக இராமபிரான் தோன்றியது மட்டும் போதாது. அவன் நாடிழந்து காடு நோக்கிச் சென்றிராவிடின், அவன் அவதாரத்தால் யாதொரு பயனும் விளைந்திராதன்றோ?

கவிஞன் முறை

இவ்வளவு நன்மை செய்த ஒருத்தியைக் கெட்டவள் என்று எவ்வாறு கூறுவது? என்றாலும், உலகம் அவளைக் கெட்டவள் என்றும் பழி சூடியவள் என்றுந்தான் கூறுகிறது. உண்மையில் கைகேயி தீயவளா? காப்பியம் செய்த கவிஞனுக்கும் இக்கேள்வி பெரிய இடர்ப்பாட்டைத்தான் விளைவித்துள்ளது போலும்! ஒரு காப்பிய ஆசிரியனுக்கு இரண்டு வகைக் கடமைகள் உண்டு. ஒன்று, அவன் படைக்கும் பாத்திரங்களின் பண்பை அவனே விளக்குவது. இதில் அப்பாத்திரத்தைப்பற்றி அவன் என்ன கருதுகிறானோ, அக்கருத்தே இடம் பெறும். மற்றொரு வகையில் அவனுக்கு ஒன்றும் வேலை இல்லை. அவனால், படைக்கப்பட்ட ஏனைய பாத்திரங்கள் தம்முள் பேசுகின்றன. அங்ஙனம் பேசுகையில் ஒவ்வொரு பாத்திரம் பற்றியும் பேச நேரிடுகிறது. இவ்வகைப் பேச்சுக்களில் ஒரு பாத்திரத்தைத் தீயதென்றோ நல்லதென்றோ கூற நேரிடும். இவ்வாறு ஒரு பாத்திரம் பிறிதொரு பாத்திரத்தைத் தீயதென்று கூறிய காரணத்தால் மட்டும்

அதனைத் தீயதென்று முடிவு கூறக்கூடாது. காப்பியத்தில் காணப் பெறும் ஒரு பாத்திரத்தின் குண ஆராய்ச்சி செய்வதற்கு நடுவு நிலைமை வேண்டும். ஒரே ஆசிரியன் இயற்றிய ஒரு காப்பியத்தில் சில பாத்திரங்களை விரும்பியும், சிலவற்றை வெறுத்தும் முடிவு கூறல் தவறாகும்.

தீயோர் இரு வகையினர்

கேகயன் மடந்தையாகிய கைகேயியைப்பற்றி ஆசிரியனே பலவிடங்களிற் பேசுகிறான் ; ஏனைய பாத்திரங்களும் பேசுகின்றன. இந்த இரண்டு கூற்றுக்களையும் படிக்கின்ற நாம் நடுவு நிலைமை யுடன் இக் கூற்றுக்களை ஆய்ந்து, கைகேயியின் குறைவு நிறைவு களை முடிவு கட்ட வேண்டும். குறைவு இல்லாதவர் யாரும் இல்லை. அவ்வாறே முற்றிலும் குறைவேயுடைய நிறைவு இல்லாத மாந்தரும் இல்லை. ஆதலின், கைகேயியினிடத்தும் குறைவு உண்டு. ஆனால், அக்குறைவும் இரு வகைப்படும். இயற்கையாய் அமைந்த ஒரு பண் பாட்டால் வரும் குறைவு ஒன்று ; ஏனையது, வேண்டுமென்றே தவற்றைச் செய்து குறைவடைவது. ஒரு மனிதன் குறைவடைய வேண்டுமாயின், தவறு செய்ய வேண்டும். அவ்வாறு இழைக்கப்படும் தவறும் இரு வகைப்படும் : வேண்டுமென்றே இழைக்கப்படும் தவறு ஒரு வகை ; இரண்டாம் வகையில் சூழ்நிலை காரணமாகவும் சில சமயங்களில் தவறு இழைக்க நேரிடுகிறது. முதலாவது வகை மிகக் கொடியது. கருணை இன்றி இவர்கள் செயலைக் கண்டிக்க வேண்டுவது தவிர வேறு வழி இல்லை. தமக்கு ஒன்றும் நன்மை இல்லை என்பதறிந்திருந்தும் தவறு இழைக்கும் இவ்வினத்தார், மந்தரையாகிய கூனியின் இனத்தைச் சேர்ந்தவர்.

இரண்டாவது கூறப்பெற்ற இனமே, கைகேயியின் இனம். இவ்வகையினர் சூழ்நிலை அல்லது சந்தர்ப்பம் காரணமாகவே தீங் கிழைப்பர். இதுவும் குற்றம் எனினும், மன்னிக்கக் கூடிய குற்றமாகும் என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வகையினர் வேண்டுமென்று

பிறர்க்குத் தீங்கு புரிபவரல்லர். எப்பொழுதும் நல்லெண்ணம் இவர்களைச் சூழ்ந்திருக்கும். பிறர்க்குத் தீதுசெய்தறியாத இவர்கள், சூழ்நிலை காரணமாகச் சில சமயங்களில் தீங்கிழைப்பார்கள். இவ்வாறு இழைக்கும் தீமையும் இவர்களே செய்ததாய் இராது; பிறர் தூண்டுதலின்மேல் தவறான செயலைச் செய்வார்கள். இவர்களிடம் குற்றங் காணவேண்டுமாயின், தவறுடையார் நட்பைப் பெரிதாக மதித்துப் போற்றுகின்றவரே என்றுதான் கூற வேண்டும். கேகயன் புதல்வியும் தசரதன் மனையாட்டியுமாகிய கைகேயி இந்த இனத்தாருக்கு ஓர் எடுத்துக்காட்டாவாள்.

இயற்கையிலேயே பல நற்பண்புகளும் உடைய பெருமாட்டி அவள். 'தெய்வக் கற்பினாள்', 'ஆழ்ந்த பேரன்பினாள்', 'கேகயர்க் கிறை திருமகள்'; 'தேவி', என்பன அவளுக்குக் கவிஞன் தரும் சில பட்டங்கள். இவை அனைத்தும் அவளது நற்பண்பை நமக்கு அறிவிக்கக் கவிஞன் கையாண்ட சொற்கள். ஏன்? தான் ஆக்கும் ஒவ்வொரு பாத்திரத்தையும் நாம் நன்கு அறிய வேண்டும் என்பதும், அப்பாத்திரத்தின் குணநலன்களையும் நன்கு அறிய வேண்டும் என்பதும் அவனுடைய குறிக்கோளாகும். இம்மட்டோடல்லாமலும், சில சந்தர்ப்பங்களில் சில பாத்திரங்களைப் பற்றி நாம் தவறான முடிவைச் செய்துவிட நேரிடுகிறது. அம்மாதிரி முடிவைச் செய்யாமல் இருப்பதற்கும் கவிஞன் அதிக முயற்சி செய்ய வேண்டி உளது. கைகேயியைப் பற்றிச் சில சமயங்களில் இவ்விடர்ப்பாடு தோன்றக் கூடும். அவள் செய்த செய்கையால் ஒரு பெரிய அரசு கேடுற்றது; அரசன் உயிரை இழந்தான் ; அவளும் கணவனை இழந்தாள். ஆனாலும், இறுதியில் அவள் நினைத்த நினைவு கைகூடவில்லை. எனவே, வீண் துயரத்திற்கும் பழிக்கும் ஆளான அவளை நாம் கொடியளாக முடிவு செய்துவிடக்கூடாது.

உறங்கும் அழகி

இவ்வளவையும் மனத்தில் வைத்துக்கொண்டுதான் கவிஞன் அவளை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறான். கொடுமனக் கூனி,

பெரிய சூழ்ச்சி ஒன்றை மனத்தில் வைத்துக்கொண்டு, கைகேயியைத் தேடி வருகிறாள். அவள் வரவையும் அதன் கொடுமையையும் கவிஞன் பெரியவாக்கிக் காட்டுவதெல்லாம் கைகேயியை அறிமுகம் செய்வதற்கேயாம். கூனியின் தடபுடல் வருகைக்கு ஏற்ற நிலையில் கைகேயி இல்லை. அவள் உறங்கிக்கொண்டிருக்கிறாள். கூனி உள்ளே நுழையும்பொழுது. அந்த உறக்கத்தில் அவளை நமக்கு அறிமுகம் செய்யும் கவிஞன், ஒரு பெரிய பயனைப் பெற்றுவிடுகிறான். எவ்வளவு அழகில் சிறந்தவர்கள் என்று நம்மால் கருதப் பெறுகிறவர் களும் உறங்கும் பொழுது அழகுடன் விளங்க மாட்டார்கள். இதைப் பற்றிச் சந்தேகம் கொள்ளுகிறவர்கள் அனுபவத்தில் பார்த்தே தெரிந்துகொள்ளலாம். இதற்கொரு காரணம் உண்டு. நாம் விழித் திருக்கும் பொழுது மனத்தில் தோன்றும் தவறான எண்ணங்களை எல்லாம் அடக்கிவிடுகிறோம். எனவே, இந்த எண்ணங்களால் தோன்றும் முகக் குறிப்பும் மறைக்கப்பட்டுவிடுகிறது. எவ்வளவு உயர்ந்த மனப்பண்புடையவர்கட்கும் ஓரளவு தீய பண்புகளும் இருந்தே தீரும். எனினும், அறிவுடையவன் மனத்தில் தோன்றும் இத்தீய பண்புகள் வெளிப்பட வாய்ப்பு அளிப்பதில்லை. ஆனால், உறங்கும் பொழுது இவ்விதத் தடை யாதும் இல்லை. எனவே, மனத் தில் விளையாடும் இவ்வெண்ணங்கள் முகக்குறிப்பிலும் வெளியா கின்றன. இதனாலேயே ஒருவர் தூங்கும் பொழுது அவரது முகத்தில் பல விதமான கோணல்கள் தோன்றக் காண்கிறோம். ஆனால், இளங்குழந்தைகள் உறங்கும் பொழுது அவர்கள் விழித்திருந்த பொழுது தவழ்ந்த அழகு குறையாமல் இலங்கக் காண்கிறோம்.

இந்நிலைக்கு மாறாக யாரேனும் ஒருவர் உறங்கும் பொழுதும் மிக்க அழகுடன் விளங்கினார் என்றால், அதனால் வெளிப்படும் ஓர்உண்மையுண்டு. அதாவது, அம்முகத்தையுடையவர் யாவரா யினும், அவர் மிகச் சிறந்த எண்ணமும் பண்பும் உடையவர் என்பதே யாகும். இவ்வுண்மை மனவியலார் (Psychologists) அறிந்த ஒன்று. இது கருதியே போலும் பொதுமறை தந்த பெரியார்,

"அடுத்தது காட்டும் பளிங்குமோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்." (706)

என்று கூறிப் போனார்! இந்த அடிப்படை உண்மைகளை மறவாமல் கம்பநாடன் காட்டும் கேகயன் மடந்தையைக் காண்போம்.

அருள் வழியும் கண்கள்

"நாற்கடல் படுமணி நளினம் பூத்தது ஓர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண் அளி—அருள் பொழியப்
பொங்குஅணை
மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினாள்." (1448)

அழகிய பாற்கடல் நடுவில் பவளக்கொடி ஒன்று தாமரை பூத்து விளங்குவது போலக் கடைக்கண் வழியே அருள் பொழியக் கிடந்து உறங்கினாளாம் அப்பெண் கொடி போல்வாள். உறங்குகிற ஒருத்தியைக் கவிஞன் வருணிக்கிற நிலையைச் சற்றுக் கூர்ந்து கவனிக்கக்கத்தான் வேண்டும். முதல் இரண்டு அடிகள் உவமை யாகலின், அவற்றை விட்டுவிட்டு, மூன்றாம் அடியின் முதற்பகுதி யைச் சற்று உற்று நோக்குவோம். அவ்வழகிய முகத்திற்குப் பேரழகு செய்துகொண்டு விளங்குவன அவளுடைய கண்கள். விழித்திருக் கும் பொழுது அந்தக் கண்கள் எந்த உணர்ச்சியை மிகுதியாகக் கொண்டு விளங்கினவோ, அந்த உணர்ச்சியைத்தானே உறங்கும் பொழுதும் தாங்கி விளங்கும்? விழித்திருக்கும் பொழுது கண்களின் வழியே வெளிப்படும் உணர்ச்சி அக்கண்கள் மூடியிருக்கும் பொழுது குறைந்துதானே காணப்படும்? எனவே, குறைந்த உணர்ச்சிக்குக் கவிஞன் அளவு கூறுகிறான்: 'கடைக்கண் அளி பொழிய' என்ற சொற்களால் உறங்குகையிற்கூட அருள் வழிந்து ஓடினதாகக் கூறுகிறான். அவ்வாறாயின், அவள் விழித்திருக்கும் பொழுது எவ்வளவு அருள் உடையவளாய்த் திகழ்வாள் என்பதை நம் கற்பனைக்கு விட்டு விடுகிறான், கவிஞன். தன் கணவன், பிள்ளை

கள் என்பவர்களிடம் மட்டும் அவள் அன்புடையவளாய் வாழ்ந் திருப்பின், அதனைக் கவிஞன் 'அளி' என்ற சொல்லால் குறிப்பிட் டிருக்க மாட்டான். தொடர்பில்லாதார் மாட்டுஞ் செல்லும் மன நிலையைத்தானே 'அளி' என்று பெரியோர் குறிக்கின்றனர்? எனவே, பெருங்குடிப் பிறந்து பெருவாழ்விற் புகுந்தவளாகிய இம்மாதரசி, பெருங்குடி மகளாகவே உள்ளாள் என்பதை நினைவூட்டவே போலும் 'அளி' பொழிந்தது என்று கவிஞன் கூறுவானாயினன்! "கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்," (575) என்றும் "கண்ணிற்கு என்னாம் கண்ணோட்டமில்லாத கண்?" (573) என்றும் பொதுமறை கூறியதற் கேற்ப, இவ்வரசமாதேவியின் கண்கள் அருளைப் பொழிந்தன என்றே கூறுகிறான்.

இவ்வடியால் கேகயன் மடந்தையின் மனத்தையும், முகவழகை யும் நமக்குக் காட்டிய கவிஞன், அடுத்த பாடலில் அவளுடைய கால் அழகையும் காட்டுகிறான். வேதனை விளைவிக்கும் கூனி சென்று, உறங்குகிற கைகேயியின் கால்களைத் தொட்டு எழுப்பினளாம். இந்நிலையில் கவிஞன் அக்கால்களுக்கு உவமை கூறுகிறான்.

காற்கமலம்

"எய்திஅக் கேகயன் மடந்தை ஏடுஅவிழ்
நொய்துஅலர் தாமரை நோற்ற நோன்பினால்
செய்தபே ருவமைசால் செம்பொன் சீறடி
கைகளின் தீண்டினாள் காலக் கோள்அனாள்." (1449)

மென்மையாக மலருந் தன்மையுடைய தாமரை பல நாள் தவஞ் செய்ததாம். ஏன் தெரியுமா? பூக்களிற் சிறந்தது தாமரை என்றுமட் டும் இருந்தது போதாதாம். அனைவர் முகங்களுக்கும் தன்னை உவமையாகக் கூறியதும் போதாதாம். ஆனால், அழகிற் சிறந்தவ ளான கைகேயியின் முகத்திற்குத் தான் உவமையாகாவிடினும், அவ ளுடைய கால்களுக்காவது (பாதம்) உவமையாகிவிட வேண்டுமே என்றுதான் தவஞ்செய்ததாம். இதனைத்தான் கவிஞன் 'நோற்ற

நோன்பினால் உவமை சால் சீறடி' என்று குறித்தான். அவள் கால்கள் இத்தகையன எனின், முகம் எத்தகையதாய் இருந்திருக்கும் என்பதை நம் கற்பனைக்கு விட்டுவிட்டான் கவிஞன்.

இங்ஙனம் கூனி அவள் கால்களைத் தொட்டவுடனே கைகேயி எழுந்துவிட்டாளாம். இதிலும் ஓர் அழகைக் காண்கிறான் கவிஞன். ஒருவர் காலைத் தொட்ட மாத்திரத்தில் விழித்துவிடுதல் என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. மேலும், உறக்கம் நீங்குகையில் ஏதோ ஒன்றை உணர்ந்துகொண்டு எழுந்தாள் என்றல்லவா கவிஞன் குறிக்கிறான்?

"தீண்டலும் உணர்ந்தஅத் தெய்வக் கற்பினாள்" (1450)

என்ற அடியால் விழிக்கும் அம்மாதரசியின் மன நிலையை நமக்கு விளக்குகிறான். விழிப்பு வரும்பொழுது ஏதாவது ஓர் உணர்ச்சி வரும் என்று கூறுவதற்கில்லை. ஒரு வேளை உறக்கம் கெட்டு விட்டதே என்ற வருத்தங்கூடச் சில சமயங்களில் தோன்றலாம். அவ்வாறாயின், இங்குக் கைகேயி பெற்ற உணர்ச்சி யாது? பேரரசி யான அவள் உறங்கும் பொழுது யார்தாம் அவளை எழுப்ப அதிகாரம் பெற்றவர்? அவள் அருமைக் கணவன் அவ்வாறு செய்யலாம். ஆனால் அவன் அவளுடைய கால்களைத் தொட்டு எழுப்ப வேண்டிய கட்டுப்பாடு இல்லையே! ஒரு வேளை மிக மிக இன்றியமையாத காரணத்திற்காக வேறு யாரேனும் எழுப்பினார்களோ? அவ்வாறு தான் நினைத்துக்கொண்டு அவள் எழுந்தாள். 'பிறர் ஒருவருடைய கைகள் தன்னுடம்பில் பட்ட மாத்திரத்தில் கற்புடைய மாதரசி ஒருத் திக்கு ஒரு வகைப் பயிர்ப்பு ஏற்படும். வேறு தன்னை ஒத்த பெண்கள் தொட்டாற்கூட இவ்வாறு உண்டாகுமா?' எனில், 'ஆம்' என்றே கூறல் வேண்டும். ஏன் எனில், பெண்களை அல்லாமல் பிறர் தொடுதல் என்பது இல்லாத ஒன்று. எனவே, கால்களை ஒருத்தி தொட்டாள் என்பதைத்தான் கைகேயி உணர்ந்துகொண்டு எழுந்தாள் என்று கூறுகிறான் கவிஞன். அவ்வாறல்லாமல் தசரதனே ஒரு வேளை தொட்டிருக்கலாமே எனின், அவன் அவள் காலைத் தொட வேண்டிய

இன்றியமையாமை இல்லை என்க. நல்ல உறக்கத்திலுங் கூடத் தன்னைத் தொட்டவர் தன் கணவனையல்லாத பிறர் என்பதை அவள் உணர்ந்துகொண்டு எழுந்தாள் என்பதை அறிவுறுத்தவே, கவிஞன் 'தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்' என்று கூறினான்.

இத்துணைச் சிறப்புடைய ஓர் அரச மாதேவி உறக்கத்தில் எழுப்பப்பட்டால், அவளை எழுப்பியவர் தண்டனை அடையவுங் கூடுமன்றோ? எனவே, தன் உறக்கம் கலைக்கப்பட்டமை காரணமாக அந்நங்கை கூனியின்மேல் சீற்றங் கொண்டிருந்தால் எவ்வளவு நன்மை விளைந்திருக்கும்? அவள் சீற்றத்தை அஞ்சிய கூனி திரும்பியிருப்பின், இராமகாதையே நடைபெறாமற் போயிருக்குமன்றோ? அவ்வாறெல்லாம் நிகழ விதி இடந்தரவில்லை என்று கவிஞன் கூறுகிறான். "மூண்டு எழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை, தூண்டிடக் (கூனி) கட்டுரை சொல்லலல் மேயினாள்" (1450) என்று கூனியின் பேச்சுக்கு அவன் அடைமொழி கூறுவது, பின்னர்க் கைகேயிமேல் வரப்போகும் பழியின் கொடுமையைக் குறைப்பதற்கே அன்றோ? 'பெரியதோர் இடர் உன்னை நோக்கி வந்துகொண்டிருக்கவும், நீ அது பற்றிக் கவலை கொள்ளாமல் உறங்குகிறாயே!' என்று கூனி கூறிய சொற்களுக்குக் கைகேயி கூறிய விடை அவள் மனநிலையை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

நன்மைந்தர்ப் பெற்றவள்

"வெவ்விடம் அனையவள் விளம்ப, வேற்கணாள்
'தெவ்வடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர் ;
அவ்வவர் துறைதொறும் அறம்தி றம்பலர் ;
எவ்விடர் எனக்குவந்து அடுப்பது ஈங்கு?' எனா

"'பராவரும் புதல்வரைப் பயந்த யாவரும்
உராவரும் துயரைவிட்டு உறுதி காண்பரால்
விராவரும் புவிக்குஎலாம் வேத மேயன
இராமனைப் பயந்தஎற்கு இடர்உண் டோ?' என்றாள்."

(1451,1452)

பெரியதொரு துன்பம் வருகிறதென்று அச்சுறுத்திய கூனிக்குத் தக்க விடையன்றோ இது! "பகைவரை வெல்லும் வில்லேந்திய என் மக்கள் அவரவர்கள் நெறி தவறாமல் இருக்கும் பொழுது எனக்கு எவ்வாறு இடர் வர முடியும்?" என்கிறாள் அத்தாய். இற்றை நாளில் எத்தனை தாய்மார்கட்கு இவ்வளவு துணிச்சலுடன் தம் பிள்ளைகளைப் பற்றிப் பேச வாய்ப்பு இருக்கிறது? எனவே, தக்க பிள்ளைகளைப் பெற்ற தாய் தந்தையர் கவலையின்றி வாழ்ந்து வீடு பேற்றையும் அடைவர் என்ற பழைய அகநானூற்றுப் பாடல் முற்றிலும் உண்மையாதலை அறிகிறோம்.

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோர்." (அகம்.66)

பிள்ளைகள் என்று பெயரளவில் இருந்துவிட்டால் மட்டும் இத்தகைய பெருமிதத்தைத் தாய் பெற முடியாதென்பதையும் கைகேயியின் சொற்கள் குறிக்கின்றன. "அவரவர்கள் கடமைகளில் தவறாதவர்கள்," என்று குறிப்பதால், இக்கருத்து விளங்கும். பொதுவாக எல்லா மைந்தர்களிடத்தும் அத்தாய் கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையுமே முதற்பாடல் குறிக்கிறது. நால்வரிடத்தும் அன்பு செலுத்தும் நற்பண்பைப் பெற்றவளாயினும், கைகேயி இராமன்பால் தனியன்பு பூண்டு ஒழுகினாள் என்பதும் அறிதற்பாலது. கோசலை வயிற்றிற் பிறந்த இராமன் கைகேயியிடம் வளர்ந்ததும், இவள் வயிற்றிற்பிறந்த பரதன் கோசலையிடம் வளர்ந்ததும் அனைவரும் அறிந்தனவே. இராமன் கைகேயியிடம் வளர்ந்தது மட்டுமன்றி, அவளும் அவனைத் தான் பெற்ற மகனாகவே மதித்தாள்; பேசினாள்; அன்பும் செய்தாள். இக்கருத்தை வலியுறுத்தவே ஆசிரியன் இரண்டாம் பாடலில் "இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ?" என்று அவளைக் கேட்க வைக்கிறான். இத்துணைப் பெருமையும் சிறப்பும்

படைத்த மகனைப் பெற்ற எந்தத் தாய்தான் வருந்த வேண்டும்? தம்மையும் உயர்த்திக்கொண்டு தம்மைப் பெற்றவர்களுக்கும் 'என்ன தவம் செய்தார்களோ இத்தகைய பிள்ளைகளைப் பெறுவதற்கு!' என்ற நற்பெயரையும் வாங்கித்தரும் இச்சீரிய மைந்தர், அவரவர் வினையால் தோன்றுபவர் அல்லரோ? இவர்களை நோக்கித்தானே பொதுமறை,

> "மகன்தந்தைக் காற்றும் உதவி 'இவன்தந்தை
> என்னோற்றான் கொல்!' என்னும் சொல்." (70)

என்று கூறுகிறது? இதுவரை கண்டவற்றிலிருந்து கைகேயியின் உயர்ந்த பண்பாடு எத்தகையது என்பதை உணர்ந்தோம். இனி அவளுடைய மனம் மாறும் வழியைக் காண்போம்.

கூனியின் சினம்

கோசலை பெற்ற இராமனிடம் எல்லையற்ற அன்பு பாராட்டித் தன் புதல்வனாகவே கருதிப் பேசிய கைகேயிக்குக் கூனி கூறும் விடை மிக அழகாய் அமைந்துள்ளது.

எந்த இராமனைப் 'புவிக்கெலாம் வேதமேயன இராமன்' என்று கைகேயி கூறினாளோ, அந்த இராமனைப் பற்றிக் கூனி யாது கூறுகிறாள் தெரியுமா?

'ஆண்கள் வெட்கித் தலை குனியவும், ஆண்மை என்ற பண்பாடு மாசுறவும் 'தாடகை' என்ற பெயரையுடைய பெண்ணரசியைக் கொன்றவனாகிய இராமன்' என்று அவள் குறிக்கிறாள்.

> "ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
> தாடகை எனும்பெயர்த் தைய லாள்படக்
> கோடிய வரிசிலை இராமன்" (1456)

இதில் வியப்பு என்னையெனில், கூனிக்கு இராமன்மேல் இருந்த விரோதத்தால் அவள் தாடகையைக்கூட நல்ல பெண் என்று கூறத் தொடங்கிவிட்டாள். இதுபற்றிக் கைகேயி கவலைப்படுவ

தாகவே தெரியவில்லை. இராமனுக்கு மறுநாள் முடி சூட்டப் போகிறார்கள் என்ற உண்மையைக் கைகேயிக்கு முதல் முதல் அறிவித்தவள் கூனியே. இதைக் கேட்டதும் கேகயன் மடந்தையின் மனம் மகிழ்ச்சியால் எக்களிக்கிறது. உடனே இந்த நல்ல செய்தியைக் கூறியதற்காக மந்தரைக்கு 'நாயகம் அனையதோர்' நவரத்தின மாலை நல்கினாளாம்.

புது முறை எதிர்ப்பு

அந்த மாலையை எடுத்துத் தரையில் வீசி எறிந்துவிட்டுக் கூனி, பாட்டன் வீட்டுக்குச் சென்றுள்ள பரதனை நினைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். இதனாலும் கைகேயியின் மனத்தை மாற்ற முடியாது என்பதைக் கண்ட கூனி, உடனே தனது சூழ்ச்சியை மாற்றிக்கொள்கிறாள். நேரே கைகேயியை நோக்கிப் பேசத் தொடங்கி, அப்பெண்ணரசியின் அகங்காரத்தைக் கிளறிவிடுகிறாள்.

**"அரசரில் பிறந்துபின் அரச ரில்வளர்ந்து
அரசரில் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற்கு அருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை! உணர்தி யோ? என்றாள்."**

(1467)

இவ்வாறு கூனி கூறுவதன் நோக்கம் யாது? தான் பிறந்து வளர்ந்த இடம் அரச குடும்பம் என்பதையும் புகுந்த இடம் பேரரசன் வீடு என்பதையும் கைகேயி அறியாதவளா? அப்படி இருக்க, இவற்றைக் கூறுவதால் யாது பயன்? அரசர் வீட்டிலேயே எப்பொழுதும் ஏவல் செய்து பழகிய கூனிக்குச் சில உண்மைகள் தெரியும். அதாவது, ஒரு பெரிய அரசனுடைய வாழ்வில் அவன் கண் எதிரிலேயே அவன் அறியாதபடி பல சூழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. இதனை அவன் கவனித்துப் பரிகரிக்காவிடின், பெருந்தீங்காய் முடிவதுண்டு. தான் காண்பன அனைத்தையுமே நம்பிக்கொண்டு ஓர் அரசன் அமைதியுடன் வாழ்வானேயாகில், அவன் நிலை வருந்தத்தக்கதாய்

முடிந்துவிடும். பரம்பரையாக அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கட்கு இந்த அரண்மனைச் சூழ்ச்சி பற்றி நன்கு தெரியும். எனவே, இத்தகைய சூழ்ச்சி ஒன்று இங்கு நடைபெறுகிறதென்பதைக் கைகேயியின் நினைவுக்குக் கொணர விரும்புகிறாள் கூனி. 'ஏனையோராய் இருந்தால், குறிப்புணரும் ஆற்றல் பெற்றிருக்கவியலாது. ஆனால், இங்ஙனம் அரசவாழ்விலேயே பிறந்து அதிலேயே புகுந்துள்ள உனக்குமா இது விளங்கவில்லை?' என்று அவள் அகங்காரத்தைக் குத்திக்காட்டுகிறாள். அம்மட்டோடில்லை. 'பேரரசி ஆன நீ' என்று அவள் கூறும் பொழுது கைகேயி தனது ஆற்றலால் ஏனைய மூத்த அரசிகளிடம் தசரதன் அன்பு செல்லவொட்டாமல் தடுத்துத் தன்பால் அவனை இழுத்துக்கொண்டதையும் குறிப்பிடுகிறாள். 'அத்துணைப் பேராற்றல் பெற்ற நீ, இப்பொழுது உன் நிலைமைக்கு இடையூறு வரவும் சும்மா உறங்கலாமா?' என்றுங் கூறுகிறாள்.

இந்தப் புது முறை எதிர்ப்பாலும் மந்தரை ஏதும் பயனைப் பெற்றதாகத் தெரியவில்லை. இதனைக் கேட்ட கைகேயியின் சீற்றம் மிகுதியானது தவிர, வேறு பயன் ஒன்றும் இல்லை. மேலும், தனக்கெதிராக ஒரு சூழ்ச்சி நடைபெறுகிறதென்று கூனி கூறியதை நம்ப மறுத்துக் கூனியே சூழ்ச்சி செய்வதாகவும் குறிப்பித்தாள்.

"எனக்கு நல்லையும் அல்லை நீ ; என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை ; அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையும் அல்லை ; வந்து ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்!"
(1471)

என்ற கேகயன் மடந்தை கூற்று, இன்னும் அவள் மனம் மாறவில்லை என்பதனையே அறிவிக்கிறது. "இன்னும் என் எதிர் நிற்றியேல், உன் அற்பத் தன்மையுடைய நாவைத் துண்டித்துவிடுவேன்!" (1473) என்றும் அவள் அச்சுறுத்தினாள்.

இங்ஙனம் கூனியை அச்சுறுத்திய கைகேயி, வாய் தவறி மற்றொரு குறிப்பையும் கூறிவிட்டாள். ஒரு மனிதன் அடைய வேண்டு

வது புகழ். முறை தவறி நடப்பவர்க்குப் புகழ் கிட்டாது. மூத்தவன் இருக்க இளையவன் பட்டம் பெறுதல் முறை கேடானது. எனவே, அவள்,

"பிறந்தி றந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழேல்,
நிறம்தி றம்பினும் நியாயமே திறம்பினும் நெறியின்
திறம்தி றம்பினும் செய்தவம் திறம்பினும் செயிர்தீர்
மறம்தி றம்பினும் வரன்முன்றை திறம்புதல் வழக்கோ?"
(1472)

(நிறம்–குணம் ; மறம்–வீரம்)

எனக் கூறினள்.

அடிப்படை ஆடிவிட்டது

அரசிற் பிறந்து வளர்ந்து அரசியான கைகேயி இதுவரை மூத்தவனுக்கே அரச உரிமை உண்டு என்பதை நம்பி வந்தாள். ஆனால், இவ்வெண்ணத்தை அடிப்படையில் தகர்த்துவிடுகின்றாள் கூனி. "அரச உரிமை மூத்தவனுக்கே உரியதென்றால், தசரதனைக் காட்டிலும் இராமன் இளையவன்தானே? அப்படி இருக்கத் தசரதன் உயிருடன் இருக்கும்பொழுது இராமனுக்கு ஏன் முடி சூட்ட வேண்டும்? அங்ஙனம் முடி சூட்ட அரசன் முடிவு செய்ததே 'மூத்தவற்கே அரசு' என்ற சட்டத்தைப் புறக்கணித்துத்தானே? ஆகலின், ஏன் பரதனுக்கு அப்பட்டம் வரக்கூடாது?" என்பதே அவள் வாதம். தசரதனை நோக்க இராமனும் பரதனும் இளையவர்கள்தாம். இரண்டு இளையவர்களுள் இராமனுக்கு உரிய ஒன்று ஏன் பரதனுக்கு உரிமையாகக் கூடாது?

"மூத்த வற்குஉரித்து அரசெனின் முறைமையின் உலகம்
காத்த மன்னனில் இளையவன்அன் றோகடல்
வண்ணன்?" (1474)

இவ்வாதம் ஓரளவு கைகேயியை மருட்டிவிட்டது உண்மைதான்.

இதனால் கைகேயியின் நம்பிக்கை தளர்ந்துவிட்ட தென்பதைக் கண்ட கூனி, தன் கட்சி வெற்றி பெறும் என்ற உறுதி யுடன் மேலும் கூறத் தொடங்கிவிட்டாள். ஆனால், இளையவனுக்கும் முடி சூட உரிமையுண்டு என்ற அதையே திருப்பிக் கூறுவதால் பயனொன்றும் இல்லை. எனவே, இரண்டு இளையவர்களுள் இராமன் பட்டம் ஏற்பதால் ஏற்படும் கேடுகளைப்பற்றியே பேசுகிறாள். ஒரேயடியாக இராமனைக் குறைகூற இன்னம் கூனிக்கு மனத் திடம் வரவில்லை. தன் தலைவியின் மனம் எவ்வளவு தூரம் மாறிற்று என்பதை அறிய முடியவில்லையாகலின், மெள்ளப் பொது நீதி ஒன்றைக் கூறுகிறாள்.

"அறன்நி ரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல்அ ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம் ;
அறம்நி னைந்துமை வலிகிலர் ஆயினும், மனத்தால்
இறல்உ றும்படி இயற்றுவர் இடையறா இன்னல்." (1476)

"எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
வேறாகும் மாந்தர் பலர்." (514)

என்ற அரிய திருக்குறளின் கருத்தே முதலிரண்டு அடிகளிற் கூறப்படுகின்றது. 'உமை வலிகிலர்...இயற்றுவர்...' என்று கூனி பன்மையில் குறிப்பிடுவது நோக்கற்குரியது. இப்பாடலிற் கூறப் பெற்றவர் யார்? யார் பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்ற பின் மனம் மாறுவர்? யார் அறத்தைக் கருதிக் கைகேயிக்குத் துன்பஞ் செய்யா விட்டாலும், சிறு சிறு தொல்லைகளாகத் தந்து உயிரை வதைப்பவர்? இந்த வினாக்களுக்கு விடை பாடலில் இல்லை. இதுவரை இராமனைப் பற்றிக் கூறிக்கொண்டு வந்த கூனி, இப்பொழுது இன்னுஞ் சிலரையும் குறிக்கிறாள் என்பதைமட்டும் அறிய முடிகிறது. இது வரை ஒருமையில் பேசினவள் இப்பொழுது 'இயற்றுவர்' என்று பன்மையில் குறிப்பது ஒருவருக்கு மேற்பட்டவர்களை என்பது நன்கு விளங்குகிறது.

புதிய கோணம்

கூனி பன்மையில் குறிப்பிட்டது யார் யாரை என்று கைகேயி எண்ணத் தொடங்கிவிட்டாள். இப்புதிய புதிருக்கு விடை கூறுபவள் போலக் கூனி கோசலையைப் பற்றிக் கூற முற்படுகிறாள். மீட்டும் மீட்டும் இராமன் பெயரைக் கூறிக்கொண்டு அவனால் இடர் விளை யும் என்று கூனி கூற விரும்பவில்லை. அதற்கொரு தக்க காரணமும் உண்டு எவ்வளவு தூரம் கைகேயி மனம் மாறினாள் என்பதைச் செவ்வையாக அறிந்துகொள்ளு முன்னர்க் கூனி இதனைச் செய்ய விரும்பவில்லை. பிறந்த நாள்தொட்டு இராமன் சிற்றன்னையால் வளர்க்கப்பெற்றவன். அவள் அவன்பாற் கொண்ட தாயன்பு சாதாரணமான தன்று என்பதற்கு "இராமனைப் பயந்த எனக்கு இடருண்டோ?" என்று அவள் கூறியதே சான்று. தசரதனும் இதனை நன்கு அறிந்தவனாகலின், "வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை" (1450) என்று கூறுகிறான். எனவே, அந்தத் தாயன்பை அதிகம் கிளறிவிட்டு, அதனால் தான் வெற்றி பெறமுடியும் என்று நினைக்கவில்லை கூனி ; அது மிகுதியும் நினைவுறுத்தப்பட் டால் அதனால் என்ன தீங்கு விளையுமோ என்றும் அஞ்சினாள். ஆகலின், இராமனை விட்டுவிட்டுச் சுற்றி உள்ளவர்களால் விளையும் தீங்கு பற்றியே பேசுகிறாள் உள்ளமும் கோடிய அக்கொடியாள்.

கூனியின் பிரமாஸ்திரம்

இதனை அறியாத கேகயன் மடந்தை, மெள்ள மெள்ளக் கூனி வீசிய வலையில் வலுவாக அகப்பட்டுக்கொள்கிறாள். இறுதியாக அவள் தாய் வீட்டுக்கும் தீங்கு நேரிடும் என்று கூறினாள் கூனி. இதுவே அவள் இறுதியாக வைத்திருந்த 'பிரமாஸ்திரம்'. எந்தப் பெண்ணும் தப்ப முடியாத இந்த அம்புக்குப் பால் போன்ற பளிங்கு மனம் படைத்த கைகேயி இரையானதில் வியப்பில்லை. தன் தந்தையாகிய கேகயனுக்குத் தீங்கு நேரும் என்றதைக் கேட்டவுடன் கைகேயி மனம் முற்றிலும் மாறிவிட்டது. இந்த நிலையில் செய்யப்பட

வேண்டுவது ஒரு காரியந்தான். தசரதனாகிய கணவன்மேல் அவள் கொண்டிருக்கும் எல்லையற்ற அன்பையும் நம்பிக்கையையும் தகர்க்க வேண்டுவது ஒன்றுதான் எஞ்சியுளது. அதுவும் நேரடியாகச் செய்யப்படும் செயலன்று. கணவன்மாட்டுக் கழிபெருங் காதல் கொண்ட அக்கற்புக்கரசியின் எதிரே அவள் கணவனைக் குறை கூறுவது இடையூறாகவும் முடியலாமன்றோ? ஆகலின், கூனி மறை முகமாக அவனைத் தாக்குகிறாள். தசரதன் அன்பு பொய்யான தென்று காட்டிவிட்டால், இது எளிதில் முடிந்துவிடும், ஆனால், அவ்வளவு எளிதில் அவன் அன்பைப்பற்றிக் குறை கூறவும் இயலாது. ஏனைய மனைவியர் அனைவரையும் மறந்துவிட்டு இரவு பகல் எந்நேரத்திலும் கைகேயியின் அரண்மனையிலேயே இருக்கும் அவன் அன்பை எவ்வாறு மறுப்பது? புதியதொரு வழியை மேற்கொள்கிறாள் கூனி.

கணவன் அன்பா?

தசரதனுக்கு மைந்தர் அனைவரிடமும் அன்பு உண்டென்றும் இராமன்மேல் அதிக அன்பு செலுத்துகிறான் என்றும் நம்பியிருக் கிறாள் கைகேயி. ஆனால், தசரதன் பரதனை வெறுக்கிறான் என்று எடுத்துக்காட்டினால், அவள் தாயுள்ளம் திடுக்கிடும். எவ்வளவு தான் அவளும் இராமனிடம் அதிக அன்பு பாராட்டிச் சீராட்டினாலும், பரதனைப் பத்து மாதம் சுமந்து பெற்றவள் என்பதை மறந்துவிடக் கூடாது. மேலும், கோசலையிடம் பரதன் வளர்ந்துவருவதால் தசரத னும் கோசலையிடம் காட்டும் அன்பின் அளவு பரதனிடமும் காட்டு வான் என்று கருதினாள். இந்த நிலை மாறித் தசரதன் பரதனை ஒதுக்க முற்படுகிறான் என்று தெரிந்தால், கைகேயி என்ன நினைப்பாளோ? இம்முறையைக் கையாண்டு பார்த்துவிட உறுதி கொண்ட கூனி, குறிப்பாக இதைக் கூறுகிறாள். இந்நிலையில் கம்பனுக்கு ஓர் இடையூறு தோன்றுகிறது. வால்மீகி காட்டியபடி தசரதன் இழைத்த தீமையை முற்றுங் காட்ட விரும்பவில்லை கம்பநாடன். எனவே, அவன் குறிப்பிட விரும்பாத நிகழ்ச்சியைச் சற்று

அறிய வேண்டும். நீண்ட நாள் பிள்ளைப் பேறில்லாத தசரதன் கேகயனிடம் கைகேயியைத் தனக்கு மணமுடிக்குமாறு வேண்டி னான். ஆனால், முன்னரே பல மனைவியர் உளராகலின், தன் மகள் வயிற்றில் பிறக்கும் குழந்தைக்குப் பட்டம் கிடைக்காதென்று எண்ணிய கேகயன், மகளைத் தர மறுத்துவிட்டான். எவ்வாறாயினும் கைகேயியை மணக்க விரும்பிய தசரதன், பின் விளைவை அறியாமல், கைகேயியின் வயிற்றில் பிறக்கும் மகனுக்குப் பட்டம் தருவதாக வாக்களித்துவிட்டு அவளை மணந்துகொண்டான். இராமன் முதற்பிள்ளையாகப் பிறந்ததிலிருந்தே தசரதனுக்கு இவ்வாக்குறுதி மனவருத்தத்தைத் தந்துவந்தது. என்றாலும், பட்டாபிடேகச் சமயத்தில் பரதன் அங்கு இல்லாமற் செய்துவிட்டால் பாதிக் கவலை குறையும் என்று நினைந்து, முடி சூட்டு விழாவுக்குச் சில காலம் முன்னர் ஒரு காரியம் செய்தான். பிறந்ததிலிருந்து பாட்டன் வீடு சென்றறியாத பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பி விட்டான் தசரதன். தாய்ப் பாட்டனாரைப் பார்க்கப் பரதனை அனுப்பியதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், அவனை அனுப்பிய வுடன் முடிசூட்டு விழாப் பற்றிய மந்திர் ஆலோசனை செய்து மறு நாளே நாளும் குறித்தது கூனிக்குப் பழைய ஐயத்தைக் கிளப்பி விட்டது. மேலும், அவள் கைகேயியின் நாட்டிலிருந்து அவளுடன் சீதனமாக வந்தவள் ஆதலின், இந்தப் பழைய வரலாற்றை அறிந் திருந்தாள். அவள் அறிந்திருந்து இதனைத் தக்க சமயத்தில் பயன் படுத்த விரும்பினாள். என்றாலும், இதனை வெட்ட வெளிச்சமாகக் கூறினால் கைகேயி நம்புவாளோ என்ற ஐயம் வேறு இருந்தது அவளுக்கு. ஏன் எனில், கைகேயி அறியாத ஒரு நிகழ்ச்சியன்று இது. அவள் அறிந்திருந்தும், ஏன் இதுபற்றி ஒன்றும் செய்யவில்லை என்ற ஐயம் வேறு கூனிக்கு உண்டு. ஆதலின், நேரடியாக இதனைக் கூறாமல் மறைமுகமாகவும் குறிப்பாகவும் கூறுகிறாள். பெண் களுக்கே உரிய குறிப்பு மொழியால் அவள் இதனைக் கூறுவது அறிந்து ஆராய்தற்குரியது. "அரசனுடைய ஆணையாலே, தேக்கு

மரங்கள் நிறைந்ததும், கல் நிறைந்ததும், நீண்ட தூரம் உடையதுமான கேகய நாட்டுக்குப் பரதனைக் கொண்டு சென்றுவிட்டதன் கருத்து எனக்கு இப்பொழுதுதான் வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறது!" என்ற பொருள்பட அவள் கூறுகிறாள்.

"பாக்கியம் புரிந்திலன் பரதன் தன்னைப்பண்டு
ஆக்கிய பொலங்கழல் அரசன் ஆணையால்
தேக்குஉயர் கல்அதர் கடிது சேண்இடைப்
போக்கிய பொருள்எனக்கு இன்று போந்ததால்." (1465)

அதாவது, "பாட்டனைப் பார்த்துவிட்டு வரட்டும் என்ற நல்ல எண்ணத்தால்தான் தசரதர் அனுப்பினார் என்று அன்று கருதினேன். ஆனால், உண்மை வேறு விதமாகவன்றோ இருக்கின்றது! அவனை அப்புறப்படுத்திவிட்டுச் சூழ்ச்சி செய்வதற்கன்றோ தசரதர் அவனை அனுப்பியுள்ளார்! இது எனக்குத் தெரியவில்லை. ஆனால், இன்று தெரியத் தொடங்கிவிட்டது," என்பதே இதன் பொருள்.

இமயம் சாய்ந்தது

வரிசையாகவும் அடுக்கியும் கூறப்பெற்ற இவ்வாதங்களின் முன்னர்க் கைகேயி நிலை குலைந்துவிட்டாள். அவளுடைய தாய்மை, பிறந்த வீட்டுப் பற்று, எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கம், சகக்களத்தியின் செல்வாக்கில் ஏற்பட்ட காழ்ப்பு, கணவன் அன்பில் கொண்ட ஐயம் என்ற இத்தனையுஞ் சேர்ந்து அவள் தூய சிந்தையையும் திரித்துவிட்டன.

சாயக் காரணம்

இத்துணைக் காரணங்களும் கூடிய வழியே மனந்திரிந்தாள் எனினும், ஆழ்ந்து நோக்கினால், ஓர் உண்மை விளங்காமற் போகாது. இத்துணைக் காரணங்களிலும் ஒன்றையாவது அவள் தானே நினைந்து பார்க்கவில்லை. எல்லாவற்றையும் ஒன்றுகூட விடாமல் எடுத்துக் காட்டியவள் கூனியல்லவா? எடுத்துக்காட்டியதோடல்

லாமல் அவற்றின் உட்பொருளையும் கருத்தையும் விளக்கியவள் அவள் அல்லளோ? அவள் காட்டிய இக்காரணங்கள் உண்மை யானவைகளா என்று நினைந்துபார்க்கவும், ஆராயவும் அந்த அரசிக்குப் பொழுது இல்லையே! அப்படியானால், அவள் கூறிய அனைத்தையும் தசரதன் தேவி அப்படியே நம்பிவிட்டாள் என்று தானே பொருளாகிறது? நம்பினதோடு மட்டுமன்றி, அந்நம்பிக்கை யின்மேல் செயலாற்றவும் தொடங்கிவிட்டாளே! ஆய்ந்து ஓய்ந்து பாராத இச்செயல்களால் யாது பயன் விளையும் என்று நினையாத இவள், அரசியாய் இருக்கத் தகுதியுடையவளா? கேவலம் ஒரு வேலைக்காரியாகிய கூனியின் சொற்களில் வைத்த நம்பிக்கையால் இவ்வளவு கேட்டையும் விளைக்கப்போகும் இவளை எவ்வாறு அரசியென்று கூறுவது? பேரறிவுடையவனாகிய தசரதன் கேவலம் வேலைக்காரிக்குச் செவிசாய்க்கும் ஒருத்தியை நம்பியா அரசியாக்கினான்? "அரசில் பிறந்து, அரசில் வளர்ந்து, அரசில் புகுந்து பேரரசி ஆன"வள் செய்கை அல்லவே இது!

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள், 433)

என்றும்,

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள், 365)

என்றும் சாதாரண மக்களுக்குக்கூட அறநூல் சட்டம் விதிக்கிறதே! அனைவருக்கும் உரிய இச்சட்டத்தை, நாட்டை ஆளும் மன்னனும், அம்மன்னன் ஏற்றுக்கொண்ட மனைவியும் மறந்துவிடுவார்களாயின், இவ்வுலகம் என்ன ஆகும்? இங்ஙனம் மறந்த அவர்கள் அரசன், அரசி என்று எவ்வாறு மதிக்கப்படுவர்?

கைகேயி செய்த செயலை நோக்கினால், அவள் இச்சட்டத்தை மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது. அவ்வாறாயின், இக்குற்றம் அவளை மட்டும் சாராமல், அவளைப் பெற்று வளர்த்த கேகயனையும், அவளை மணந்துகொண்ட தசரதனையும் அல்லவோ சாரும்!

ஆனால், இவ்வாறு மூன்று பேரையும் தவறு செய்தவர்களாகக் காட்டக் கம்பநாடன் விரும்பவில்லை. எனவே, கைகேயியின் மனம் மாறுபட்டமைக்கு வேறு காரணங்களும் உண்டு என்று கூறுகிறான். "கேவலம் கூனியின் மொழிகளால் கைகேயி மனம் மாறினாள் என்று கருதிவிட வேண்டா. அவள் மாறுவதற்குப் பின் வரும் காரணங்களும் துணை புரிந்தன. தேவர்கள் சூழ்ச்சி, அவர்கள் பெற்றுள்ள வரங்கள், அந்தணர்கள் இயற்றிய அருந்தவம், அரக்கர் பாவம், அல்லாதவர்கள் இயற்றிய அறம் இவை யாவும் கூடியே இவ்வாறு செய்தன." எனக் கூறுகிறான்.

இங்குக் கூறப்பெற்ற காரணங்களால் கைகேயி மனம் மாறி னாள் என்ற வாதத்தை விடுத்து அவள் மாற்றத்திற்கு மற்றோர் காரணத்தை ஆய்ந்து எழுதப்பட்டதே 'நாடக மயில்' என்ற கட்டுரை.

"தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயை யும்அவர் பெற்றுள வரம்உண்மை யாலும்
ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்அறம் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்கம் இன்மையன் றோஇன்றுஇவ் வுலகங்கள்
இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே!"
(1483, 1484)

பரிவுடன் காண்க

இத்துணைப் பேர்களும் கூடி இயற்றிய தவமும் அறமும் வாளா இருந்துவிடுமா? அவை அனைத்தும் பயன் தர வேண்டுமாயின், இராமன் காட்டுக்குப் போக வேண்டுமன்றோ? அவன் காடு செல்ல வேண்டுமாயின், யாராவது ஒருவர் அதற்குரிய பழியையும் சுமந்து தானே ஆகவேண்டும்? எனவே, கைகேயியின் மனம் திரியக் காரண

மும் கூறி, அதன் அடிப்படையையும் கவிஞன் கூறிவிட்டான். இங்குக் கூறப்பெற்றவை அனைத்தும் இரு பிரிவினுள் அடங்கும். ஒன்று தவமும் அறமும்; ஏனையது அரக்கருடைய பாவம். அறமும் பாவமும் சேர்வதில்லை. ஆனால், இப்பொழுது இவை இரண்டும் சேர்ந்தே ஒரு தொழிலைச் செய்துவிட்டன என்கிறான் கவிஞன். இந்நிலையில் புறப்பாடல் ஒன்று நினைவிற்கு வருகிறது : குமண வள்ளலைப் பாடிய பெருஞ்சித்திரனார் என்ற புலவர், தாம் குமணனைத் தேடி வந்தமைக் குக் காரணங் கூறுகிறார் : "என்னுடைய வறுமை பின்னே இருந்து தள்ளியது; ஆனால், அதே சமயத்தில் உன் புகழ் முன்னே இருந்து இழுத்தது. ஆதலின், இவண் வந்தேன்," என்ற கருத்துப்பட, "இன்மை துரப்ப இசைதர வந்து நின்"...(புறம். 161) என்று பாடிச் செல்கிறார். பின்னே இருந்து ஒருவர் தள்ளினால் முன்னே எங்காவது ஓரிடத்தில் போய் விழ நேரிடும். ஆனால், அதே சமயத்தில் முன்னிருக்கும் ஒருவர் இழுத்தால் உறுதியாக ஓரிடம் செல்ல முடியுமன்றோ? அதேபோலத் தேவர் சூழ்ச்சியாலும், அந்தணர் தவத் தாலும், அல்லவர் இயற்றிய அறத்தாலும் தள்ளப்பட்ட இராமன், எங்கோ சென்று பயனற்றுப் போய்விடாமல் இருப்பான் வேண்டி, அரக் கர்கள் பாவம் முன்னே இருந்து இழுத்தது என்றும் கவிஞன் கூறு வது எத்தனை சுவை பயப்பதாய் உளது! இவ்வாறு முன்னும் பின்னும் உந்தப் பெற்றதால் இராமன் காடு செல்வதைக் 'கைகேயியின் சொற்களால் அவன் வனம் புகுந்தான்' என்று கூறுவது எவ்வளவு அறியாமை என்று கூறுவான் போலக் கூறிக் கைகேயியின் குறையை ஓரளவு குறைக்கிறான் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடன்.

அயோத்தி அடைந்த தவ்வை

இனி இக்கவிஞனே அத்தேவியை இழித்துப் பேசுவதையும் அதற்குரிய காரணங்களையும் காண்போம். 'தேவி' என்றும், 'தூய சிந்தை உடையாள்' என்றம் எந்தக் கைகேயியைக் கவிஞன் பாராட்டினானோ, அந்தக் கைகேயியையே இப்பொழுது ஏசத் தொடங்குகிறான்.

மந்தரை சூழ்ச்சியால் மனந்திரிந்த அம்மங்கை நல்லாள், அரசன் வரவை எதிர்பார்த்து அந்தப்புரத்தில் இருக்கிறாள். எவ்வாறு எதிர்பார்க்கிறாள் என்று நினைக்கிறீர்கள்? காதல் மனைவி கணவன் வரவைக் கருதிக் காத்திருப்பது போல இருப்பாள் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. சூழ்ச்சி என்பதை அறியாத வெள்ளை உள்ளம் படைத்த அப்பெண்ணரசி, இப்பொழுது பெரிய சூழ்ச்சிக்கு அடிகோலிவிட்டாள்.

கூனி சென்றுவிட்ட பின்னர்க் கைகேயி அருமையான மலர்ப் படுக்கையினின்றும் இறங்கிவிட்டாள். மேகம் போலத் திரணட் கரிய கூந்தலிற் சுற்றிய பூக்களைப் பிய்த்து எறிந்தாள்; மேகலையை அறுத்து வீசினாள்; கைகளில் அழகு பெற்று விளங்கிய வளையல் களை உடைத்து எறிந்தாள். இவை அனைத்தையும் விடக் கொடுமை யான ஒரு செயலையும் செய்யத் துணிந்துவிட்டாள். கணவனுடன் வாழும் அவள் நெற்றியில் மங்கலக் குறியாக வைக்கப்பட்டிருந்த அழகிய பொட்டையும் துடைத்துவிட்டாள். எந்த நேரத்தில் தன் திலகத்தை அழித்தாளோ, தெரியவில்லை! அடுத்து அதனை வைக்கக்கூடிய வாய்ப்பையே இழந்துவிட்டாள்! சீரிய கலன்கள் அனைத்தையும் சிந்திய அவள், புழுதியே பாயலாகக் கூந்தலைப் பரப் பிக் கொண்டு புரளத் தொடங்கிவிட்டாள். அவள் கிடக்கும் இந்நிலை மையைக் கவிஞன் இதோ நமக்குப் படம் எழுதிக் காட்டுகிறான்:

'மான் ஒன்று கீழே விழுந்து கிடந்ததுபோலவும், கலாபம் விரித்து ஆடின மயில் ஒன்று களைத்துத் தோகை விரித்தபடியே படுத்துவிட்டது போலவும் கைகேயி கிடந்தாள்,' என்று கூறத் தொடங்கிவிட்டான். ஆனால், அவள் புறத் தோற்றத்தில் ஈடுபட்டு இங்ஙனம் உவமைகளை அடுக்கிவிட்ட கவிஞனுக்கு, 'ஏன் இவ்வாறு இவள் வீழ்ந்து புரள்கிறாள்?' என்ற கேள்வி உடனே எழுகிறது. 'இராமனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற கொடிய நினைவால் அல்லவா இவ்வாறு படுத்திருக்கிறாள்?' என்று அந்த வினாவிற்கு உடனே விடையும் கிடைத்துவிடுகின்றது. இந்த விடை

கிடைத்தவுடன் கவிஞன் மதிப்பில் கைகேயி வீழ்ந்துவிடுகிறாள். அவள் நல்லவள் அல்லள் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. மான் என்றும் மயில் என்றும் அவளைப் புகழ்ந்த கவிஞன், அதே பாடலில் 'மூதேவி' என்றும் ஏசத் தொடங்கிவிடுகின்றான். இது சற்று வியப் பாகவே இருக்கிறது. ஒரே மூச்சில் மான், மயில் என்று தொடங்கி மூதேவி என்று முடிப்பது முறையா? இவ்வாறு கவிஞன் கூற வேறு காரணம் கூறவியலாது. அவள் புறத்தோற்றத்தில் ஈடுபட்டு நின்ற கவிஞன் அடுத்து அவள் மனத்தில் கை வைத்தவுடன் தன் ஈடு பாட்டை இழந்துவிடுகிறான்.

அம்மட்டோடு நிற்கவில்லை. அவளை 'மூத்தவள்' என்று பழிப் பதற்குக் காரணமும் காட்டுகிறான் அதே பாடலில். இலக்குமியாகிய சீதை வனம் புகுந்து விடப் போகிறாள் ஆகலின், அவள் இருந்த அயோத்தி வெறுமையாய் இருக்கக் கூடாது என்று நினைத்து இங்கு வந்து சேர்ந்த மூதேவி போலக் கிடந்தாள் என்றும் கூறுகிறான்.

"நவ்வி வீழ்ந்தென நாடக மயில்துயின்று என்னக்
கவ்வை கூர்தரச் சனகியாம் கடிகமழ் கமலத்து
அவ்வை நீங்குமென்று அயோத்திவந்து அடைந்தஅம்
மடந்தை
தவ்வை யாம்எனக் கிடந்தனள் கேகயன் தனையை."
(1494)

கைகேயி இவ்வாறு படுத்திருக்கும் நிலையில் உள் நுழைந்த தசரதன், யானை ஒன்று மானைத் துதிக்கையால் அள்ளி எடுப்பது போல எடுக்கவும், அவள் அவன் கையினின்றும் வழுவி வீழ்ந்தாள். அவன் மிகுதியும் வேண்டிக்கொண்ட பின்னர் அவன் தருவதாக முன் னர்க் கூறிய ஒன்றை இப்பொழுது தர வேண்டுமென்று கேட்டாள். சாதாரணமாகக் கேட்கக்கூடிய ஒன்றைக் கேட்பதற்கு இத்துணை முகவுரை ஏன் என்பதை மன்னன் ஆராய்ந்திருந்தால், ஒருவேளை சற்றுத் தாமதித்திருப்பான். ஆனால், அவன் மனம் இன்று மகிழ்ச்சிக் கடலில் திளைத்து நிற்கிறது. நீண்ட நாளாக அவன் கொண்டிருந்த

கருத்தை இன்று முடித்துவிட்டான். எவ்வித இடையூறும் இன்றி இவ்வளவு எளிதாக முடிசூட்டு விழா முடிவாகிவிடும் என்று அவன் கருதவில்லை.

தந்திடுக மன்னரே!

எனவே, பொழுது விடிந்தவுடன் தன் எண்ணம் நிறைவேறி விடும் என்று நம்பியிருக்கும் அவன் மனத்தில் மகிழ்ச்சியைத் தவிர கவலைக்கோ ஐயத்திற்கோ இடம் ஏது? தன்னிடம் என்றுமே அன் பாக நடந்துகொள்ளும் காதலி, இன்று தான் மிக்க மகிழ்ச்சியோடு இருக்கும் வேளையில் கவலையுடன் இருப்பது அவன் மனத்தைப் பிளந்துவிட்டது. என்ன காரணமோ என்று வருந்திய மன்னனுக்கு அவள் வாய் திறந்து முன்னர்த் தருவதாகக் கூறிய இரண்டை இப் பொழுது தருக என்று கேட்டவுடன் பெரிய பாரம் நீங்கினதுபோல ஆகிவிட்டது. பெரியதொரு வெடிச் சிரிப்புடன், "நீ எது வேண்டினும் தருகிறேன்! உன் மைந்தன் இராமன்மேல் ஆணை!" என்றான்.

"கள்அவிழ் பேதை கருத்துஉண ராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்;
'உள்ளம் உவந்துஉள செய்வேன் ஒன்றும் லோபேன்;
வள்ளல் இராமன்உன் மைந்தன் ஆணை,' என்றான்."
(1501)

இவ்வாறு மன்னன் கூறியவுடன் கைகேயி மீண்டும் பெரிய தொரு முகவுரையுடனேயே பேசத் தொடங்குகிறாள். "என் கவலையை நீர் போக்குவதானால், முன்னர்த் தேவர்கள் சான்றாக இரண்டு வரங்கள் தருவதாகக் கூறினதுண்டல்லவா? அவற்றை இப்பொழுது தந்திடுக மன்னரே!"

"சான்றுஇமை யோர்குலம் ஆகு மன்ன நீஅன்று
ஏன்ற வரங்கள் இரண்டும் ஈதி' என்றாள்." (1502)

கணவனிடம் மனைவி கேட்கும் நிலையில் அவள் பேச விரும்ப வில்லை என்பதை இறுதியில் உள்ள 'மன்ன' என்ற சொல் அறிவிக்

கிறது. இதற்கு ஒரு காரணமும் உண்டு. மனைவி கணவனிடம் கேட்கும் அனைத்தையும் கணவன் தந்து தீரவேண்டும் என்ற இன்றி யமையாமை இல்லை.

முன்னரே தருவதாக உறுதி கூறப்பெற்ற பொருளாயினும், கணவன் மனைவி என்ற உறவுமுறை பற்றிக் கணவன் இப்பொழுது அதனைத் தர மறுத்துவிடினுந் தவறு இல்லை. ஆனால், மன்னன் நிலை வேறு. சொன்ன சொல்லை எவ்வாறாயினும் காக்க வேண்டிய கடப்பாடு அரசனுக்கே உண்டு. எனவே, கைகேயி தசரதனுக்கு இக் கடமையை நினைவூட்ட வேண்டிப்போலும் 'மன்ன' என்று விளித் தாள்! இதையும் அம்மன்னன் அறிந்து கொண்டதாகத் தெரிய வில்லை. "வரங்கொள இத்துணை மம்மர் அல்லல் எய்தி இரங்கிட வேண்டுவதில்லை,"(1502) என்று அவன் கூறும் அடுத்த வார்த்தை கள் அவன் பைத்தியக்காரத் தனத்தை நன்கு விளக்குகின்றன.

சீதை கேள்வன்

இவ்வளவு நம்பிக்கையையும் அன்பையும் தன் மாட்டுக் கொண்டுள்ள அரசனுக்குப் பெரியதொரு வருத்தத்தைத் தரப் போகிறோமே என்ற கவலை கைகேயிக்கு இருந்ததாகவே தெரிய வில்லை. கவலைப்படுபவளாக இருப்பின், அவள் மெள்ளத் தயங்கித் தயங்கியே தன் கருத்தை வெளியிட்டிருப்பாள். ஆனால், அவ்வா றல்லாமல் மிக விரைவில் தன் கருத்தை ஒரே வாக்கியத்தில் முடித்து விடுகிறாள்.

"'ஏய வரங்கள் இரண்டில் ஒன்றி னால்என்
சேய்உலகு ஆள்வது; சீதை கேள்வன் ஒன்றில்
போய்வனம் ஆள்வது' எனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னும்சி றந்த தீயாள்." (1504)

என்ற இப்பாடலில் முதல் மூன்று அடிகளே அவளுடைய சொற்கள். 'ஒரு வரத்தால் என் பிள்ளை உலகாளவும், மற்றொன்றால் சீதை கணவன் வனம் ஆளவும் வேண்டும்,' என்றாள். இராமனைப்

பொறுத்தவரை அவள் மனம் எவ்வளவு மாறிவிட்டது என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

"விராவரும்புவிக்கெலாம் வேதமேயன இராமன்" என்று கூறிய அதே கைகேயியா இவள்? ஆம்! அவ்விதஞ் சொல்லிய சில நாழிகைக்குள் அவன் பெயரைக் கூடக் கூற விருப்பம் இல்லாமல் 'சீதை கேள்வன்' என்று கூறும் மனநிலை ஏன் வந்தது? இவ்வாறு இவள் வெறுப்படைய இராமன் என்ன தீங்கிழைத்தான் இவளுக்கு?

அவன்மாட்டுப் பரிவு காட்டும் முதல் வாக்கியம் கூறிய பிறகு இவள் இன்னும் இராமனைச் சந்திக்கக் கூட இல்லையே! ஏன் இவ் வளவு காழ்ப்பு அவன் மேல்? கூனிக்காவது இராமன்மேல் ஒரு பழைய பகைமை உண்டு. அவன் இளையனாய் இருக்கையில், விளையாட் டுத் தன்மையால் அவள் கூன் முதுகின் மேல் வில் உண்டையால் அடித்தானாம். யானையை ஒத்த கூனி இச்செயலைப் பிள்ளை விளையாட்டு என்று கருதாமல், அவன்மேல் தீராப்பகை கொண்டு விட்டாள். எனவே, வாய்ப்பு நேர்ந்த பொழுது தன் பகை முடித்துக் கொள்ள வேண்டிக் கைகேயியை ஏவி விட்டுவிட்டாள். ஆனால், இராமன் மேல் பகை கொள்ளக் கைகேயிக்கு என்ன காரணம் வந்தது? கேவலம் வேலைக்காரி கூறியதை நம்பிக்கொண்டு அவன் மேல் வைரம் கொள்வதா? அப்படித்தான் அவ்வேலைக்காரி இராமன் கெட்டவன் என்பதற்குரிய காரணம் ஏதாவது காட்டினாளா? அவனுக்குப் பட்டம் கிடைத்தால் அதனால் ஏற்படும் விளைவுபற்றிக் கூறிப் பரதனுக்கு அப்பட்டத்தைப் பெறுமாறு அறிவுறுத்தினாள். இதைக் கூறிவிட்டு அரசனிடம் இதற்கு உறுதி பெறும் முறையை எடுத்துக் காட்டுகையில் போகிற போக்கில் இராமனைக் காட்டுக்கு அனுப்பும் வரம் ஒன்றையும் பெறுமாறு கூறினாள்.

என்னே கொடுமை!

இவை இரண்டில் பரதனுக்கு முடி பெற வேண்டிய இன்றி யமையாமை பற்றிக் கூனி கூறிய காரணங்கள் கைகேயிக்கு

ஏற்புடையனவாகப் பட்டிருப்பின், தாராளமாக அவள் தன் மகனுக்கு முடியைப் பெற்றிருக்கலாம். அதோடு இராமனைக் காட்டுக்கு அனுப்ப வரம் கேட்டது, காரணமில்லாமல் கொடுமை செய்யும் பண்பல்லவா? அதிலும், தான் போற்றி வளர்த்த மகனை இவ்வாறு செய்யச் சொல்லுவது கலப்பற்ற கொடுமையன்றோ? அதனால் தனக்கு ஏதாவது பயன் விளைவதாக இருந்தாலும், 'தன்னலம்' என்றாவது கூறிவிடலாம். தனக்கும் நன்மை பயவாது பிறருக்கும் தீங்கு புரியும் இச்செயலை ஏனோ கைகேயி செய்யத் துணிந்தாள்! துணிந்ததைக் காட்டிலும் கொடுமை, அவன் பெயரைக் கூடக் கூற விருப்பம் இல்லாதவள் போல, 'சீதை கேள்வன்' என்று அவனைக் குறிப்பிட்டதாகும். "இராமனைப் பெற்ற எனக்கு இடருண்டோ?" என்று கேட்ட அதே கைகேயி, சில நாழிகை நேரத்துள் இப்படி மாறுவாளானால், அவளை என்னவென்று குறிப்பது? இதை நன்கு ஆய்ந்த கவிஞன், இதோ விடை கூறுகிறான்; அவளுக்கு அடைமொழிகளைப் பாட்டின் நான்காம் அடியில் தருகிறான். "தீயவை யாவையினுஞ் சிறந்த தீயாள்" என்று அவன் கூறும்பொழுது இதே கவிஞன் சென்ற படலத்தில் கைகேயியை நமக்கு அறிமுகம் செய்து வைக்கையில், அவளைப் பற்றிக் கூறிய சொற்களை நினைவில் கொண்டு பார்க்க வேண்டும். அவ்வளவு உயர்ந்த முறையில் அவளைக் கூறியவன் ஏன் இவ்வாறு கூறுகிறான்? காரணம் விளக்கப்பட்டிருக்கிறது முன்னிரண்டு பத்திகளிலும்.

மன்னிக்க முடியாது

இந்த இடத்தில் தொடங்கி வரிசையாக அவளுக்கு வசை மாரி பெய்து செல்கிறான் கவிஞன். காரணம் இந்த ஒன்று மட்டும் அன்று. ஆய்ந்து பார்த்தால், இதுவே மன்னிக்க முடியாத பெரும்பிழை. காரணமின்றி அவள் கேட்ட இரண்டாவது வரம் எத்தனை பேருக்குத் துன்பம் விளைவிக்கிறது என்பதை நினைக்கையில், அவளை எவ்வளவு பழித்தாலும் தகும் என்றே தோன்றுகிறது. ஆனால், குற்றம் இம்மட்டோடு நிற்கவில்லை.

பல சமயங்களில் மனிதன் பிழை செய்ய நேரிடுகிறது. இவற்றுட்சில அறிந்தும், சில அறியாமலும் செய்யப்படுகின்றன. அறியாமல் செய்யப்படும் பிழை வேண்டுமென்று செய்யப்படுவதன்று. எனவே, அதை எடுத்துக் காட்டினால் உடனே செய்தவர்கள் அப்பிழையைப் போக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு போக்க முன் வரவில்லையாயின், அது இரண்டாவது பிழை. இராமனை ஒரு குற்றமும் செய்யாதிருக்கையில் காட்டுக்குப் போக வேண்டும் என்று கைகேயி விரும்பியது முதலாவது பிழை. இது பிழை என்று அவள் அறிந்து செய்தாளா, அன்றி அறியாமல் செய்தாளா என்பதை நாம் அறியோம். கவிஞனும் இது பற்றி ஒன்றுங் குறிக்கவில்லை. எனவே, நமது ஐயத்தின் பயனை (Benefit of the doubt) கைகேயிக்குத் தந்து அவளை மன்னித்துவிடலாம் எனில், உடனே இரண்டாவது பிழையைச் செய்துவிடுகிறாள். எவ்வளவு தாழ்ந்து பணிந்து அவள் கால்களில் வீழ்ந்து தசரதன் கெஞ்சுகிறான்! எதற்காக? அவள் கேட்டவற்றுள் ஒன்றைப் பெற்றுக்கொண்டு மற்றொன்றை விட்டுத் தருவதற்காகவே.

தசரதன் வேண்டல்

“ ‘கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன்என்
உண்ணேர் ஆவி வேண்டினும் இன்றே உனதுஅன்றோ?
பெண்ணே! வண்மைக் கேகயன் மாதே! பெறுவாயேல்
மண்ணே கொள்நீ; மற்றையது ஒன்றும் மற,’ என்றான்.”
(1522)

இந்தப் பாடலில், ‘கண்ணை வேண்டினும், தருவேன்; என் உயிரையே வேண்டினும், அது உன்னுடையதாகும். வள்ளலாகிய கேகயன் மகளே, இந்த அரசை வேண்டுமாயினும், பெற்றுக்கொள். ஆனால், மற்றொன்று கேட்டாயே, அதை மட்டும் மறந்துவிடு!’ என்று மன்றாடுகிறான் அந்த மன்னன். இராமனைக் காட்டுக்கு அனுப்புதல் என்பதுதான் ‘மற்றையதொன்று’ என்று குறிக்கப்பட்டது. தசரதன்

தன் வாயாற்கூட இதனைக் கூற அஞ்சி 'மற்றையதொன்று' என்று குறிக்கிறான் எனில், இராமன் மாட்டு எத்தகைய அன்பு பாராட்டி னான் அவன் என்பதைக் கூறவும் வேண்டுமா? தசரதனைப் பற்றிக் கூறவந்த கவிஞன், "மைந்தன் அலாது உயிர் வேறு இலாத மன்னன்" என்று குறிக்கிறான். இவ்வளவு வேண்டியும் கேகயன் மடந்தை மனம் மாறவில்லை எனில், அது, இரண்டாவது குற்றம் அன்றோ? இனி மூன்றாவது ஒரு குற்றமும் இழைக்க முற்பட்டு விட்டாள் அவள்.

எந்தக் குலப் பெண்ணுக்கும் கணவன் தெய்வமாவான் என்பது பண்டையோர் கொண்ட கொள்கை. அவனைத் தெய்வம் என்று வழிபடாவிடினும், அவளுக்குச் சிறந்தவர்கள் பட்டியலில் அவனே முதலிடம் பெறுபவன் என்பதில் ஐயமின்று. மறுமணம் செய்துகொள்ளும் பழக்கம் இல்லாத நாட்டில் அவளுடைய நல்வாழ்வின் ஆணிவேராய் அவன் இருக்கிறான் என்பதிலும் ஐயமின்று. எனவே, எந்தப் பெண்ணும் கணவனுக்குத் தீங்கு நேர விட்டுக்கொண்டிருக்கமாட்டாள். அவ்வாறு இருக்க, தானே தன் கணவன் உயிரை வாங்க ஒருத்தி முற்படுவாளா? மாட்டாள் என்பது அனைவரும் உறுதியாக ஒப்பக்கூடியதொன்று. ஏனைய பெண் களைப் பொறுத்த வரை இதுவே முறையாய் இருப்பினும், கைகேயி யைப் பொறுத்த வரை இது மாறுபடுதலைக் காண்கிறோம். தான் கேட்ட இரண்டு வரங்களையும் உறுதியாகப் பெற்றுவிடுவதாயின், அதனால் தசரதன் உயிருக்குத் தீங்கு நேரும் என்று அறிந்திருந்தும், அவள் பிடிவாதம் செய்தது வெறுக்கத்தக்க செயலேயாகும். அவன் உயிருக்கு இறுதி நேரும் என்பதை அவள் அறியவில்லை என்றும் சொல்வதற்கில்லை. ஏன் எனில், அவனே பன்முறை அதைக் குறிப்பிடுகிறான்.

"................................'நளினம்போல்
கையான் இன்றுஎன் கண்எதிர் நின்றுங் கழிவானேல்
உய்யேன் நங்காய்! உன்அப யம்என் உயிர்,' என்றான்."

(1527)

"ஒன்றாய் நின்ற ஆருயி ரோடும் உயிர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றினர் என்னும் புகழ்அல்லால்
இன்றோர் காறும் எல்வளை யார்தம் இறையோரைக்
கொன்றார் இல்லை; கொல்லுதி யோநீ? கொடியாளே!"
(1531)

"நா அம்பால்என் ஆர்உயிர் உண்டாய்!" (1532)

"விண்ணோர் காறும் வென்ற எனக்குஎன் மனைவாழும்
பெண்ணால் வந்தது அந்தரம் என்னைப்
பெறுகேனோ?" (1534)

என்று வரும் அடிகள் அம்மன்னனே அவள் வரத்தால் விளையப் போகும் கேட்டைப்பற்றிக் கூறியதை அறிவிக்கின்றன. இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தும் ஒருத்தி மனங் கலங்க வில்லை எனில், அவளை எவ்வாறு பெண் என்று கூறுவது?

உரங்கொள் மனத்தவள்

தசரதன் கூறிய இத்துணை அடைக்கல அரற்றல்களுக்கும் அவள் செவி சாய்க்கவில்லை என்பது மட்டும் அன்றி, மேலும் அவனைத் துன்புறுத்தவே தொடங்குகிறாள். தன்னை மறந்த நிலையில் அவன் தரையில் விழுந்து புரள்கின்ற அந்த நேரத்தில் சிறிதும் கருணை காட்டாமல், அவள், "இவ்வரங்களை இப்பொழுது தரப் போகிறீரா? அல்லாவிடின் யான் உயிரை விடட்டுமா?" என்கிறாள்.

"ஊழின் பெற்றாய் என்று உரை இன்றேல் உயிர்
மாய்வென்."

என்றும்,

"அரிந்தான் முன்ஓர் மன்னவன் அன்றே அருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரம்நல்கிப்
பரிந்தால் என்னை?' என்றனள் பாயும் கனலேபோல்
எரிந்துஏ றாதே இன்னுயிர் உண்ணும் எரியன்னாள்."
(1536,1537)

என்றும் கூறும் மனநிலை, எல்லாப் பெண்களுக்கும் வரக் கூடிய ஒன்றன்று.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்." (56)

என்ற குறளுக்கு முற்றும் எதிராக நடக்கத் தொடங்கிவிட்டாள் கைகேயி. இந்நிலையில் அரசன் யாது செய்வான்!

" 'வீந்தா ளேஇவ் வெய்யவள்,' என்னா மிடல்வேந்தன்,
'ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம்; என்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வான்அரசு ஆள்வன்; வசை
வெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிது,' என்றான்."
"ஊறா நின்ற சிந்தையி னாளும் துயில்வுற்றாள்."
(1538,1539)

அரசன் 'வரத்தைத் தந்தேன்,' என்று கூறினவுடன் அவள் உறங்கிவிட்டாள். என்னே அவள் நெஞ்சின் உறுதி இருந்தவாறு! எத்துணைக் கொடுமை படைத்த நெஞ்சினளாய் இருப்பினும், அரசன் படும் பாட்டைப் பார்த்து எவ்வாறு கவலையற்று இருக்க முடியும்? அதனினும் மேலாக, எவ்வாறு உறங்க முடியும்?

தீர்ந்த கொலையாளருங்கூடத் தம்மால் அன்பு செய்யப்பட்டாரிடத்தும், தமக்கு வேண்டியவர்களிடத்தும் அன்பு பாராட்டுகின்றனர் என்று கூறுவார்களே! இயற்கையிலேயே இத்தகைய மனப் பண்பு உடையவர் அல்லளே இவள்! சேர்க்கையால் வந்த குணக்கேடா? ஆம்! மந்தரை கூறிய சொற்களால் மனந்திரிந்துவிட்டாள் என்றால், இவ்வளவு எதிர்ப்பையும் தாங்கி நிற்கக் கூடிய பண்பாட்டை யாண்டுப் பெற்றாள் இவள்? இது ஒரு புதிராகவே இருக்கிறது. எனவே, முற் கூறியபடி மூன்று குற்றங்களை இழைத்துவிட்டாள் இம்மாதரசி.

சிந்தை கலங்கியவள்

அடுத்து நாம் கைகேயியைச் சந்திக்கின்ற இடம், கணவன் இறந்து, இராமன் காடு சென்ற பிறகு, பரதன் மீண்ட நிலையிலே தான். பாட்டன் வீட்டிலிருந்து வந்த பரதன் நேரே தாயைச் சென்று வணங்குகிறான். அவனைத் தழுவிய அவள், தன் தந்தை, தாய், சோதரிமார் அனைவரும் நலமா என வினவுகிறாள். அக்கேள்விகள் அனைத்திற்கும் ஒரே மொழியில் விடை தந்துவிட்டுத் 'தந்தையார் எங்கே இருக்கிறார்?' என்று கேட்கிறான் அவன். அதற்கு அவள் தரும் விடை நமக்குக்கூட வெறுப்பைத் தருகிறது.

"'தானவர் வலிதவ நிமிர்ந்த தானைஅத்
தேனமர் தெரியலான் தேவர் கைதொழ
வானகம் எய்தினான் ; வருந்தல் நீ,' என்றாள்." (2145)

இவ்விடையால் நடுங்கி மயக்குற்று வீழ்ந்த பரதன், ஒருவாறு மனந்தேறிய பின்னர், "அம்மா, நீயலது பிறர் இவ்வாறு உரை செய நினைப்பரோ!" என்று கூறக் கேட்டுவிட்டான். இந்நிலையில் கைகேயின் மனம் கல்லாகிவிட்டதையும், அது எந்த உணர்ச்சியையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிற நிலையையுங் காண்கிறோம். தான் விளைத்த செயலின் எதிர்பார்த்ததும் எதிர்பாராததுமான பயன் களைக் கண்டு அவளே நடுங்கிவிட்டாள். அந்நடுக்கத்தால் ஓரளவு உணர்ச்சியைக்கூட அவள் இழந்துவிட்டாள் என்றே எண்ண வேண்டியுள்ளது. அன்றேல், கணவன் இறந்துவிட்ட செய்தியை இவ்வாறு கூற எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் வரும்! பரதனுடன் பேசுகிற நிலையிலும், அடுத்து அவளை இன்னார் என்று பரதன் குகனிடம் அறிமுகம் செய்து வைக்கும் நிலையிலும் கைகேயி நிற்கும் நிலை நம்முடைய பரிவையே தூண்டுகிறது. தன் செயலின் விளை வறியாமல் குடி இருந்த வீட்டிற்குத் தீ வைத்து விட்ட குழந்தை போலச் செயலற்று நிற்கிறாள் அவள். அனைவரும் அவளை ஏசுகின்றனரே தவிர, அவள் அடையுந் துயரத்தில் பங்கு கொள்வார் எவரும் இலர்.

அவளே தேடிக்கொண்ட துன்பந்தானே இது என்று மட்டும் கூறி விடுவதால் பயன் இல்லை. தவற்றை இழைத்தவளாயினும், இப் பொழுது நெஞ்சு கலங்கி நிற்கிறாள். தனக்கு முடி வேண்டா என்று மறுக்கும் பரதனைக்கூட அவள் வலியுறுத்தி முடியைப் பெற்றுக் கொள்ளுமாறு தூண்டவில்லை. ஏன்? அவள் கதி கலங்கி அறியாமல் நிற்கிறாள் என்பதற்கு அதுவே எடுத்துக்காட்டாகும். மூன்றாம் மனிதனைப் பற்றிக் கூறுவது போல, 'வானகம் எய்தினான்; வருந்தல் நீ,' என்று தசரதன் இறந்ததைப் பற்றிக் கூறும் பொழுது கைகேயியின் தன்னை மறந்த நிலையைக் காண்கிறோம்.

தந்தைக்காகப் பெரிதும் வருந்திய பரதன், அடுத்தபடியாகக் கேட்கும் வினா, "அண்ணன் எங்கு உளான்?" என்பதேயாகும். இவ்வாறு வினாவாக அவன் அவளை நோக்கிக் கேட்கக்கூட வில்லை. தானே தனக்குக் கூறிக்கொள்பவன்போல, அண்ணனைப் பார்த்தால் ஒழியச் "சிந்தை வெங்கொடுந்துயர் தீர்கலாது," என்றான். இவ்வாறு அவன் கூறிக்கொண்ட சொற்களைக் கேட்ட அவள் கூறுகிறாள்.

"அவ்வுரை கேட்டலும் அசனி ஏறுஎன
வெவ்வுரை வல்லவள் மீட்டுங் கூறுவாள் ;
'தெவ்வடு சிலையினாய்! தேவி தம்பிஎன்று
இவ்விரு வோரொடுங் கானத் தான்,' என்றாள்."

கைகேயி கூறிய இவ்வார்த்தைகள் பரதனைப் பெரிதும் மருட்டி விட்டன. இப்பொழுதுதான் அவன், அவளையே ஐயங்கொள்ளத் தொடங்கினான். கிழவனான தந்தை இறந்தான் என்றால் இதில் அவளை ஐயுறக் காரணம் யாதுமில்லை. ஆனால், இராமன் ஏன் காடு செல்ல வேண்டும்? ஒரு வேளை அவன் பெருங்குற்றம் இழைத்து அதற்காக அரச தண்டனையாகக் காட்டுக்கு அனுப்பப் பெற்றானா? "தீயவை இராமனே செய்யும்?" என்று கூறி, "அப்பெருமகன் செய்யு மேல், அவை, தாய் செயல் அல்லவோ தலத்துளோர்கட்கு எலாம்?"

என்று கூறும் பொழுது தாய்மீது குற்றஞ்சாட்டுவது வெளிப்படை. இப்பொழுது வெளிப்படையாகவே கைகேயி,

"வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடை ; போக்கிப் பார்உனக்கு
ஆக்கினேன் ; அவன்அது பொறுக்க லாமையால்
நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்து,' என்றாள்." (2166)

இப்பாடலில் அவள் இராமனைப்பற்றி 'மைந்தனை' என்றும், பரதனைப்பற்றி 'உனக்கு' என்றும் கூறுதல் அறிதற்குரியது. இராமன், பரதன் என்ற இருவருமே அவளுடைய செயலை அறிந்தவர்களே. நெஞ்சு அறிந்து அவள் இராமனுக்குத் தீமை புரிந்தாள். பரதனுக்கு நன்மை புரிய வேண்டும் என்று வரம் கொண்டது ஒன்று. ஆனால், அதற்காக இராமனைக் காட்டிற்கு அனுப்பியிருக்க வேண்டியதில்லை. அவ்வாறு இருந்தும், அவளால் கொடுமை செய்யப்பட்டவனான இராமன் சிறிதும் அவள்பால் வருத்தம் கொள்ளவில்லை; அதற்கு மறுதலையாகப் பணிவுடனும் அன்புடனும் 'எந்தையே ஏவ, நீரே அருள் செய,' (1600) என்றும் 'மன்னவன் பணியன்று ஆகில் நும்பணி மறுப்பனோ?' (1604) என்றும் கூறிவிட்டுக் காடு சென்றுவிட்டான். ஆனால், யாருக்காகக் கைகேயி இத்தனை பாடுகளும் பட்டாளோ, அந்தப் பரதன் இப்பொழுது அவளைக் 'கொன்று விடுகிறேன்!' என்கிறான். இதைவிட அவள் மனத்தை ஒடிக்கக்கூடிய செயல் வேறு யாது? எனவே, காடு சென்றவனும் தன்னால் தீங்கிழைக்கப் பெற்றவனும் ஆன இராமனையும், வீட்டில் இருப்பவனும் தன்னால் முடிவாங்கித் தரப்பட்டவனும் ஆன பரதனையும் அவள் ஒப்பிட்டு பார்க்கிறாள். பழைய மனநிலையை அடைந்தவளாய், இராமனை மீட்டும் தன் மைந்தன் என்று பேசுகிறாள். தசரதனிடம் அஞ்சாமல் "உரங்கொள் மனத்துடன்" வரங்கேட்ட கைகேயி, இப்பொழுது தான் பெற்ற பிள்ளையிடம் அஞ்சுவதைக் காண்கிறோம்! ஏன்? தசரதன் தானும் ஒரு தீமை அவளுக்குப் புரிந்துவிட்டானாகலின், அவளை எதிர்த்துப் போராட அவனால் இயலவில்லை. அவளும் அவன் எதிரே

அஞ்சவில்லை. ஆனால், தூய்மையே வடிவான பரதன் முன் அவள் இப்பொழுது நடுங்குகிறாள். வாய் பேசாது நிற்பதைத் தவிர அவள் செய்யத்தக்க செயல் ஒன்றும் இல்லை. பரதன் தன் பிழைக்காகத் தன்னைக் கொன்றாலும் கொன்றுவிடுவான் என்று எதிர்பார்த்தே அவள் நிற்கிறாள். அவளைக் கொல்லத் துணிந்துவிட்ட அவன்கூட, "தாய் என்ற பாசத்தால் நான் உன்னைக் கொல்லாமல் விடவில்லை. ஆனால், நெடியவன் முனியும்" என்று அஞ்சி நின்றனன், (2171) என்றே கூறுகிறான். ஒரு வேளை பரதனே அவளைக் கொன்றிருந் தாலும், அவள் துன்பத்திற்கு ஓர் அமைதிகிட்டி இருக்கும். ஆனால், இன்னும் இருந்து பெரிய தண்டனையை அடைவாள் வேண்டிப் போலும் அவனும் அவளை விட்டுவிட்டான்! எனவே, இதுவரை கைகேயியை மூன்று நிலைகளிற் கண்டோம். தூய்மையே வடிவான கைகேயி, தீயினும் கொடிய கைகேயி, தன் செயலிழந்து நிற்கும் கைகேயி என மூன்று நிலைகளில் ஒருத்தியைக் காட்டிக் கவிஞன் மனிதன் தன் செயல்களால் எவ்வாறு உயர்வையும் தாழ்வையும் தானே தேடிக்கொள்ள முடியும் என்பதை அழகுற எடுத்துக் காட்டுகிறான்.

□

3. நாடக மயில்

கம்பநாடன் தன் காப்பியத்தில் இரண்டு பெண்களை 'மயில்' என்று கூறுகிறான். இவ்வாறு கூறுவதால் குழப்பம் ஏற்படாமல் இருக்க ஒவ்வொரு மயிலுக்கும் ஓர் அடைமொழி தருகிறான். ஒருத்தியை 'நாடக மயில்' என்றும், மற்றொருத்தியை 'மலைக்குல மயில்' என்றும் பேசுகிறான். மலைக்குல மயில் என்று அவன் பேசுவது வாலியின் மனைவியாகிய தாரையை ஆகும். இவ் அடைமொழி பொருத்தமானதேயாகும். கிட்கிந்தை என்பதே மலைப்பிரதேசமாகும். எனவே மலைக்குல மயில் என்று கூறுவதில் உள்ள பொருத்தத்தைக் காணலாம். நாடக மயில் என்று அவன் குறிப்பிடுவது கைகேயியை ஆகும். மயில் ஆடுவது இயல்பு. 'தண்டலை மயில்கள் ஆட' என்று கம்பனே பேசுகிறான். சங்கப் பாட்டிலும் 'ஆடுகள விறலியின் தோன்றும்' என்று மயிலின் ஆட்டம் பேசப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய ஞானசம்பந்தரும் திருக்கேதாரப் பதிகத்தில் 'வண்டு பாட மயில் ஆட' என்று பாடுகிறார். நாட்டியமாடுவது மயிலுக்கு இயல்பாதலால் ஆடு மயில் என்றோ நாட்டிய மயில் என்றோ கூறியிருந்தால் அதில் புதுமை ஒன்றுமில்லை. அவ்வாறில்லாமல் நாடக மயில் என்ற அடை கொண்ட பிரயோகம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. நாடகம் நடிப்பவர்கள் யாராய் இருப்பினும் தாம் யார் என்பதை மறைத்துக் கொண்டு எந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு நடிக்கப் போகிறார்களோ அந்தப் பாத்திரத்திற்குரிய வேடத்தைப் புனைந்து நடிப்பது இயற்கை. கம்பநாடன் ஒரு பாத்திரத்தை முக்கியமான இடத்தில் நாடக மயில் என்று குறிப்பிடுவானேயானால் அதில் ஆழ்ந்த பொருட்சிறப்பு இருக்க வேண்டும்.

மயில் என்று உருவகிக்கப்பட்ட பாத்திரம் கேகயன் மடந்தை ஆவாள். உருவகத்திற்குக் கொடுக்கப்பட்ட அடை, பொருளுக்கும்

சென்று அடங்கும். மயில் தன்னுடைய இயல்பான மென்மை, சாயல், அழகு ஆகியவற்றை மறைத்துக்கொண்டு நாடகத்தில் நடிப்பதற்காக ஏதோ ஒரு வேடத்தைப் புனைந்துகொண்டு நடிக்கத் தொடங்கி விட்டது என்ற பொருளைப் பெற வைக்கிறான். எனவே எந்தப் பாத்திரத்தை நாடக மயில் என்று உருவகித்தானோ அந்தப் பாத்திரம் தன் சுயரூபத்தை மறைத்துக் கொண்டு ஏதோ ஒரு பாத்திரத்தின் வேடத்தை ஏற்றுக்கொண்டு நடிக்கத் தொடங்கிவிட்டது. இப் பொழுது அந்தப் பாடலை விரிவாகக் காணலாம்.

மந்தரை என்ற கூனி கைகேயியின் மனத்தை பேதலிக்கச் செய்து கணவனிடம் இரண்டு வரங்களைப் பெறுமாறு துர்ப்போதனை செய்து விட்டுப் போய்விட்டாள். அவள் போன பிறகு நீண்ட நேரம் கழித்துத் தசரதன் கைகேயிடம் வருகின்றான். அவன் வருவதற்குச் சற்று முன்னர் நீண்ட ஆலோசனைக்குப் பிறகு கைகேயி தன் அணிகலன்களை எல்லாம் களைந்துவிட்டு நெற்றிப்பொட்டையும் அழித்து விட்டுக் கூந்தலை அவிழ்த்து விரித்தபடி தரையில் கிடக்கிறாள். இக்காட்சியைக் கம்பன் வருணிக்கும் முறை வருமாறு:

. . . நவ்வி வீழ்ந்தென, நாடக மயில் துயின்றென்ன
'கவ்வை கூர்தரச் சனகி யாம்கடி கமழ்கமலத்து
அவ்வை நீங்கும்' என்று அயோத்தி வந்து அடைந்து
அம்மடந்தை
தவ்வை ஆம்என, கிடந்தனள், கேகயன் தனையை.
(1494)

இப்பாடலின் முதலடியைச் சற்றுச் சிந்திக்க வேண்டும். நவ்வி என்றால் பெண் மான் என்று பொருளாகும். தலைவிரி கோலமாகக் கீழே கிடக்கும் கைகேயியை உருவகம் செய்கிறான் கவிஞன். ஒரு பெண் மான் கீழே விழுந்து கிடப்பது போலவும் நாடகத்திற்குரிய வேட மணிந்த மயில் உறங்குவது போலவும் கிடந்தாள் என்று பேசுகிறான் கவிஞன்.

கைகேயியை நவ்வி (பெண் மான்) என்று உருவகிப்பதும் சிந்தனையைத் தூண்டுவதாகும். மான்கள் இயல்பாகவே மருண்ட பார்வையும் குறிக்கோள் அற்ற முறையில் இங்கும் அங்கும் ஓடித் திரியும் இயல்பும் உடையவனவாம். மருண்ட பார்வை எதனால் வருகிறது? எங்கே ஆபத்து மறைந்து கொண்டிருக்கிறதோ என்ற அச்சம் காரணமாக பார்வையில் மருட்சி ஏற்படுகிறது. இன்னது செய்வது என்ற முடிவிற்கு உறுதியுடன் வர முடியாமையால் இங்கும் அங்குமாக ஓடுகின்ற இயல்பைப்பெற்றுள்ளது. உருவகிக்கப்பட்ட மானுக்கு உள்ள இந்த இரண்டு இயல்புகளையும் கைகேயிக்கு ஏற்றிப் பார்க்கலாம். இதுவரை கைகேயியின் வாழ்க்கை அமைதியான நீரோட்டம் போல் சென்று கொண்டிருந்தது. மன்னர் மன்னனாகிய தசரதன் தன் அருமைக்கணவன். 'புவிக்கெலாம் வேதமே' என்று சொல்லத்தக்க இராகவன் மைந்தன். இதனால் ஏற்பட்ட மன அமைதியில் அவள் வாழ்க்கையில் மருட்சிக்கு இடமேயில்லை. ஆனால் இப்பொழுது ஒரு தலைகீழ் மாற்றம் நிகழ்ந்துள்ளது. கணவன் எண்ணத்திற்கு மாறுபட வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. அருமை மைந்தன் இராமனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டிய இக்கட்டான நிலை. இவை இரண்டையும் செய்வது சரியா தவறா என்ற எண்ணம் மனப்போராட்டமாக அமைந்து விடுகிறது. எந்த முடிவிற்கும் வரமுடியாத போராட்டமாகும் இது. உறங்கும் போதுங் கூட கடைக்கண்ணில் அருள் வழியும் அதே கண்களில் இப்பொழுது மருட்சி தோன்றக் காரணமென்ன? தான் மேற்கொண்ட முடிவினால் யாருக்கு என்ன விளையுமோ என்ற அச்சங் காரணமாகக் கண்களில் மருட்சி தோன்றலாயிற்று. அவளுடைய மனப்போராட்டத்தையும் கண்ணிலுள்ள மருட்சியையும் விரிவாக எடுத்துக் கூறாமல் அவள் வீழ்ந்து கிடப்பதை 'நவ்வி வீழ்ந்தென' என்ற ஒரு சொல் மூலம் கவிஞன் பெற வைத்து விடுகிறான்.

மனப்போராட்டம், கண்ணில் மருட்சி என்ற இவ்விரண்டும் கூனி அவளைவிட்டுப் போனதிலிருந்து தசரதன் வருவதற்குச் சிறிது

நேரம் முன்னர் வரை அவளை ஆட்கொண்டிருந்தது. இதன் முடிவில் கைகேயி ஒரு முடிவிற்கு வந்துவிடுகிறாள். செய்யலாமா வேண்டாமா என்ற குழப்பம் நீங்கிச் செய்தேயாக வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறாள். இங்கே ஒரு பிரச்சனை. அவளுடைய உடல்வாகு, மென்மைத்தன்மை, அருள் நிரம்பிய மனம் ஆகிய அனைத்தும் அவளுடைய இயல்பான தன்மைகளாகும். அவற்றின் எதிராக அவள் முடிவை நிறைவேற்ற வேண்டுமான்றால் வலிமை பொருந்திய உடலும், மென்மைக்கு மாறுபட்ட கடினமான உறுதிப்பாடும், அருளை மறந்து கருமமே கண்ணாகி இருக்கும் கரந்த உள்ளமும் வேண்டும். தசரத னிடம் வரம் பெற்றுப் பரதனை அரசனாக்கி இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றால், அது உடல் திண்மையும் உறுதி கொண்ட கண்ணும் அருளை மறைத்து வன்கண்மையோடு நடந்து கொள்ளும் ஒரு பாத்திரமாக அவள் மாறவேண்டும். மயில் போன்ற சாயலையுடைய கைகேயி இந்த வன்கண்மையுடைய பாத்திரத்தை ஏற்று நடிக்கவேண்டும். அதனைத் தான் கவிஞன் 'நாடக மயில்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறான். நடைபெறப் போகும் நாடகத்தில் மயில் போன்ற சாயலையுடைய கைகேயி வன்கண்மை நிறைந்த ஒரு பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு நடிக்க முடிவு செய்து விட்டாள்.

அப்படியானால் நான்காம் அடியில் 'தவ்வையாம் எனக் கிடந் தனள் கேகயன் தனையை' என்று கூறுவதன் நோக்கம் என்ன? நவ்வி என்றும் மயில் என்றும் உருவகித்த கவிஞன் நான்காவது அடியில் மூதேவி என்று அவளைக் குறிப்பதன் நோக்கமென்ன? அவள் வடிவத்தை முதலடியில் வருணித்து விட்டு அவள் மனக் கருத்தை நினைந்தவுடன் வெறுப்பு மிகுந்தவனாய்த் தவ்வை என்று ஏசுகிறான் என்று இந்த ஆசிரியனே ஒரு காலத்தில் நினைத்த துண்டு. அவ்வாறே அன்று எழுதப்பெற்ற கேகயன் மடந்தை என்ற முன்னுள்ள கட்டுரையில் எழுதியும் உள்ளான். ஆனால், இன்று கம்பன் பாடல்களில் மரபைத் தவிர்த்துப் புதிய நோக்கில் பார்வையைச் செலுத்தியதால் இவ்வாறு புதுப்பொருள் காண முடிகின்றது. நான்கா

வது அடியிலுள்ள மூதேவி என்ற சொல் நிச்சயமாகக் கைகேயியைக் குறிக்கவில்லை. அவள் மேற்கொண்ட வேடத்தை நினைக்கின்றான் கவிஞன். அந்த வேடத்தின் பால் கொண்ட வெறுப்புக் காரணமாக மூதேவி என்று பேசுகிறான். மூதேவி என்று நேரடியாகக் கூறாமல் மூதேவி கிடந்தது போல என்று கூறுகிறான். முதலடியிலிருந்த நவ்வி யும் மயிலும், வேடத்தை மேற்கோண்ட வேடதாரியைக் குறிக்கும். நான்காவது அடியிலுள்ள தவ்வை, வேடதாரி மேற்கொண்ட வேடத்தைக் குறிக்கும்.

இவ்வாறு பொருள் செய்தற்கு இப்பாடல் இடந்தருமா? என்ற ஐயம் சிலர் மனத்திலாவது தோன்றலாம். வரங்கள் கேட்டு முடிந்த பின்னர் எந்த நிலையிலும் தன் மனத்தை அவள் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை என்ற பகுதியை விளக்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. கைகேயி தனக்கு இயல்பாக உள்ள அருளைத் துறந்து விட்டாள் என்று கூற வருகிறான் கவிஞன். துறப்பதற்குக் காரணம் கூற வந்தவன் அரக்கர் பாவம், அல்லவர் இயற்றிய அறம் என்ற இரண்டுமே அவள் இவ்வேடத்தை மேற்கொள்ளக் காரணமாயின என்று கூறுகிறான். வேடம் போட்டுக்கொண்ட பிறகு அவள் பேசிய சொற்களுக்கு அவளைக் குறை சொல்லிப் பயனில்லை. வேட மணிந் தவர் நாடகத்தில் பேசும் சொற்களுக்கு அவர் பொறுப்பல்லர். இதை மனத்தில் கொண்ட கவிஞன் இரண்டு அற்புதமான சொற்களை இங்கே பெய்கின்றான். ஒருத்தி நல்லருளைத் துறந்துவிட்டாள் என்று கூறிய பிறகு அவள் பேசிய சொற்களைத் தூமொழி என்று கூறுவது எவ்வாறு? ஆனால் கவிஞன் அவ்வாறு தானே கூறுகிறான். 'நல் லருள் துறந்தனள் தூமொழி மடமான்' என்பவை, கவிஞன் கூற் றாகும். எனவே நல்லருள் துறந்தாள் என்று அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம் என்று நம்மை எச்சரிப்பவன் போலக் கவிஞன் பேசுகிறான்.

இரண்டு வரங்கள் வேண்டும் என்று கேட்டதும் அவற்றுள் ஒன்றால் பரதனுக்கு நாட்டைப் பெற்றதும், மற்றொன்றால் சீதை கேள்

வனை வனமாளச் செலுத்தியதும், தசரதன் எவ்வளவு வேண்டியும் விட்டுக் கொடுக்காமல் இருந்ததும் எவ்வாறு தூமொழியாகும். சொல்லளவில் இவை கொடுஞ்சொற்கள் தான். அவற்றால் விளைந்த பயன் இரண்டாகும். ஒரு பயன் தசரதனைப் பொய்யற்றவனாக ஆக்கிற்று. மற்றது காப்பியம் நடைபெற ஒரு வழியைத் தந்தது. இவ் விரண்டு நற்பயன்களையும் தீமொழிகள் நிச்சயமாகத் தரவியலாது– எனவேதான் அவன் சொற்களைப் படிப்பவர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று எச்சரிப்பவன் போல தூமொழி மடமான் என்று பேசுகிறான்.

'கன்யா சுல்க' வரலாற்றைக் கம்பன் வெளிப்படையாகப் பேசவில்லை என்பது உண்மைதான். மூலநூலாகிய வால்மீகத்தில் இச்செய்தியை இராமன் வனத்திற்கு வந்த் பரதனிடம் விரிவாகப் பேசுவதாக அமைந்துள்ளது. அதை விளக்கமாகக் கூறிவிட்டால் கைகேயியின் மேலுள்ள பழி நீங்கும். ஆனால் அவள் கணவனாகிய தசரதன் மேல் வாக்கை மறைத்துச் சூழ்ச்சி செய்து இராமனுக்குப் பட்டம் தர முயன்றவன் என்ற பழி நீங்காது நிலைத்துவிடும். இதனாலேயே கைகேயி மேற்கொண்ட நாடகப் பாத்திரச் செயல் களை கம்பன் விரிவாகப் பேசுகிறான்.

கைகேயியின் செயல்கள் நாம் நினைப்பது போலக் கொடிய செயல்கள் அல்ல என்றும் கணவனைக் காப்பாற்ற வேண்டி அவள் போட்டுக்கொண்ட வேட்மும் அவ்வேடத்திற்கேற்ற சொற்களுமே யாகும் என்றும் இதுவரை கூறி வந்தோம். கம்பன் 'தூமொழி மடமான்' என்றும் 'நவ்வி' என்றும் 'நாடக மயில்' என்றும் அவளைக் குறிப்பதைக் கண்டோம். கன்யா சுல்கக் கதையை மறைப்பதன் மூலம் இரண்டு பெரிய காரியங்களைக் கவிஞன் சாதித்து விடுகிறான். ஒன்று தசரதனை வாய்மையும் மரபும் காத்த மன்னவனாக்கி விடுகிறான். இரண்டாவது கொடுமையானவள், தீயவள், கணவனுக்கும் மகனுக்கும் கேடு சூழ்ந்தவள் என்றெல்லாம் கருதப்

பட்டு வந்த கைகேயிப் பாத்திரத்தைப் புதிய கோணத்தில் காணுமாறு கவிஞன் செய்கிறான். கைகேயி என்ற பெண் தற்காத்துத் தற் கொண்டான் பேணும் பண்புடையவள் என்றே கவிஞன் காட்டு கிறான். தற்கொண்டானைப் பேணுவதற்காக அவள் போட்டுக் கொண்ட வேடமே கைகேயி சூழ்வினைப் படலத்தில் நாம் காணும் கைகேயிப் பாத்திரமாகும் என்பதையும் இதுவரை கண்டோம். தொடக்கத்தில் கவிஞன் பயன்படுத்திய நாடகமயில் என்ற தொடரே இவ்வாறு நம்மை நினைக்கத் தூண்டுகிறது.

படலத்தின் தொடக்கத்தில் நவ்வி முதலான சொற்களால் கைகேயியைக் குறித்த கவிஞன், தசரதன் முதலிய பிற பாத்திரங் களைக் கொண்டு கைகேயியை ஏச வைத்தானே தவிர நூலாசிரியன் கருத்தாக ஒரு வார்த்தை கூட அவளை ஏசும் முறையில் அமைய வில்லை. கைகேயி சூழ்வினைப் படலத்தின் இடைப்பகுதியில் வரும் சில பாடல்கள் (1540 முதல் 1553 வரை) தற்குறிப்பேற்ற அணியில் அமைந்துள்ளன. அப்பாடல்களில் இயற்கையும் சில உயிரினங்களும் கைகேயியின் கொடுமை கண்டு அவளை ஏசுவது போல அமைந் துள்ளன. அப்பாடல்களுள்,

'கேகயத்து அரசன் பயந்த விடத்தை, இன்னது
ஓர்கேடுசூழ்
மா கயத்தியை, உள் கொதித்து, மனத்து வைவன
போன்றவே' (1542)

இரவின் தொடக்கத்தில் புள்ளினங்கள் எல்லாம் தம்முள் கல கலவென்று ஓசை எழுப்புகின்றன. இந்த ஒலியைத் தற்குறிப்பேற்ற அணியுடன் கவிஞன் விளக்குகிறான். அப்புள்ளினங்கள் எழுப்பும் ஒலி கேகயத்து அரசனாகிய கேகயன் பெற்ற நஞ்சை, இப்படிப்பட்ட ஒரு பெருங்கேட்டைச் செய்த மிகக்கீழ்மைக் குணம் உள்ளவளை நினைத்து மனக் கொதிப்பேறி அவளை வைவது போலத் தம்முள் ஒலி எழுப்பின என்பதாம். தற்குறிப்பேற்றவணியே ஆயினும் கைகேயியை 'நஞ்சு' என்றும் 'கயத்தி' என்றும் கவிஞன் பேசுகிறான்.

பறவைக் கூட்டங்கள் அவளை நஞ்சு என்றும் கயத்தி என்றும் ஏசிய தாகப் பாடலை அமைக்கவில்லை. 'விடத்தை, கயத்தியை வைவன போன்றவே' என்று இரண்டாம் வேற்றுமை கொடுத்துப் பேசுவதால் இவை இரண்டும் கவிஞன் கூற்றேயாகும்.

நாடக மயில் என்று படலத்தின் தொடக்கத்தில் அவளைப் பேசிய கவிஞன் இப்பகுதியில் அவளை நஞ்சு என்றும் கயத்தி என்றும் ஏசுவது சரியா என்ற வினா தோன்றினால் அது நியாயமானதே யாகும். கவிஞன் இப்பொழுது தன் மனத்தில் தோன்றிய சினத்தை, வெறுப்பை வெளியிடுவதற்கு இவ்விரண்டு சொற்களையும் பயன் படுத்துகிறான். இது சரியா என்ற வினாவை எழுப்பும் முன் கலைஞர் களின் ஒரு மனநிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பின்னர் காட்டப்பெறும் உதாரணம் இந்நிலையை நன்கு விளக்கும். இந்தக் காட்சியில் கல்விக் கடலான சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் நாடகக் கலைஞர், நாடக ஆசிரியர், இயக்குநர் ஆகிய முத்தொழிலை யும் புரிபவர் கிரீஷ் சந்திர கோஷ் என்ற கலைஞர் ஆவார். அதே காலத்தில் வாழ்ந்த உலகம் போற்றும் மாபெரும் அறிஞர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் ஆவார். இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஒருமுறை 'தீனபந்து மித்ரா' எழுதிய 'நீல் தர்ப்பண்' என்ற நாடகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. சாயத் தொழிலுக்கு இன்றி யமையாத அவுரிச் செடியைப் பயிரிடும் தொழிலாளர்களை ஆங் கிலேய முதலாளிமார்கள் கொடுமையாக நடத்தி சித்திரவதை செய்யும் செயலை இந்நாடகம் கருப்பொருளாகக் கொண்டது. நாடகத்தில் கொடுமை புரியும் ஆங்கில முதலாளியாக கிரீஷ் சந்திர கோஷ் நடித்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் தத்ரூபமாக நடிக்கும் அவருடைய நடிப்பை பார்த்துக் கொண்டிருந்த மாபெரும் கல்விமானாகிய வித்தியாசாகர் ஒரு காரியத்தைச் செய்து விட்டார். நடைபெறுவது நாடகம் தான் என்பதையும், இக்கொடுமைக்காரன் வேஷம் தரித்தவர் தன் அருமை நண்பராகிய கிரீஷ் சந்திர கோஷ் என்பதையும் முழுவதுமாக மறந்து விட்டார் வித்யாசாகர். கொடுமை

நிறைந்த அக்காட்சி நடைபெறும்போது தாம் அணிந்திருந்த காலணியைக் கழற்றி வெள்ளைக்காரர் வேடமணிந்து நடிக்கும் கிரீஷ் சந்திரகோஷின் மேல் அக்காலணியால் அடித்துவிட்டார். நாடக அரங்கம் அதிர்ந்தது என்றாலும் நடிகர் கோஷ், அந்தக் காலணியை தூக்கி வைத்துக் கொண்டு தம்முடைய நடிப்புத் திறமைக்கு இதைவிடச் சிறந்த பரிசை வேறு யாரும் தர முடியாது என்று கூறிப் புகழ்ந்தார். மாபெரும் கல்வி மானாகிய வித்யாசாகரே தம்முடைய நண்பர் கோஷை மறந்து அவர் மேற்கொண்ட வேடத்தை உண்மை என்று நம்பி காலணியால் அடித்தது தன் நடிப்புத் திறமைக்கு கொடுக்கப்பட்ட சிறந்த பரிசு என்று கோஷ் புகழ்ந்தார்.

நடிகர் கிரீஷ் சந்திர கோஷின் இந்த விளக்கவுரை நன்கு சிந்திக்கப்பட வேண்டும். கலைஞன்,இரசிகன் ஆகிய இருவருமே புறநிலை நோக்கில் தான் (objective) எதனையும் காண்கின்றனர். சில சமயங்களில் இந்த நிலை மாறித் தன்னிலை (subjective) நோக்கம் பெறுவதுமுண்டு. நாடகம் பார்த்த வித்யாசாகர் புறநிலையில் நின்று பார்ப்பதை விட்டுவிட்டு அகநிலைப் பார்வையில் அமிழ்ந்ததால் நிகழ்ந்த விளைவைக் கண்டோம். இதை நன்கு புரிந்து கொண்டால் கம்பன் பாடலுக்கும் விளக்கம் கிடைக்கும்.

காப்பியப் புலவனாகிய கம்பநாடன் மிகக் கூர்மையான கவனத்துடன் கைகேயி பாத்திரத்தைப் படைக்கிறான். அவள் உண்மையில் பொறுமை இழக்கவில்லை. தான் ஏற்றுக் கொண்ட வேடத்திற்கேற்பவே அனைத்தையும் செய்கிறாள் என்ற நிலையில் தான் கைகேயி சூழ்வினைப் படலத்தைத் தொடர்கிறான். கதை வளர்கிறது. மிக மிக வேகமாக நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் புறநிலையில் நின்று கதைப்போக்கைப் பாடிக்கொண்டு வந்த கம்பநாடன் திடீரென்று தன்னிலை நோக்கில் அமிழ்ந்து விடுகிறான். தன்னால் படைக்கப்பட்ட பாத்திரத்தை அது செய்கின்ற செயலைத் தன்னிலை நோக்கில் பார்க்கத் தொடங்கியவுடன் விருப்பு, வெறுப்புகள், கோபதாபங்கள் ஆகிய அனைத்தும் வந்துவிடுகின்றன.

தன்னை மறந்த நிலையில் கைகேயியை ஏசத் தொடங்கிவிடுகிறான். 'நஞ்சு' என்ற சொல்லும் 'கயத்தி' என்ற சொல்லும் இந்நிலையில்தான் பயன்படுத்தப்படுகின்றன. பாத்திரப் படைப்பு எவ்வளவு சிறந்துள்ளது என்பதற்கு இது ஓர் ஒப்பற்ற எடுத்துக்காட்டாகும். கல்வியில் பெரியவ னான கம்பன் கூட தானே படைத்த பாத்திரத்தின் வளர்ச்சியில் தன்னையே மறந்துவிடுகின்றான். மயில் அனைய கைகேயி நாடக வேடமிட்டு கொடிய கைகேயியாக நடிக்கிறாள் என்று அவன் நிர் மாணித்த கோட்டை மேல் இப்பொழுது தன்னை மறந்து கல்லை வீசு கிறான். இதை நன்கு புரிந்து கொண்டால் கைகேயி என்ற பாத்திரத் தைக் கம்பன் எவ்வாறு படைத்தான்? முதலில் ஏன் புகழ்ந்தான் இறுதியில் ஏன் ஏசினான்? என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

கைகேயி என்ற பாத்திரத்தை ஒரு புதிய கண்ணோட்டத்துடன் பார்ப்பது பொருத்தமாகும் என்று நினைக்கின்றேன். இது வரையில் கைகேயியைப் பெருங் கொடுமைக்காரியாக, கருணையற்றவளாக, பண்பற்றவளாகவே கண்டோம். தான் கொண்ட கருத்தை நிறை வேற்ற வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகக் கணவனை இழப் பதைக்கூடப் பெரிதாகக் கருதவில்லை என்று தான் கூறிக் கொண் டிருந்தோம். ஆனால், கம்பனுடைய பாத்திரப் படைப்பை ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது கைகேயியை அவன் வேறு வகையில் அமைத் தானோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இராமன் எப்படி ஸ்திதப்ரக்ஞனாக அமைக்கப்படுகின்றானோ அதுபோல் ஒரு ஸ்திதப்ரக்ஞ மனோ நிலையுடையவளாகக் கைகேயியும் படைக்கப்பட் டிருக்கின்றாளோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

நன்மை எது, தீமை எது என்பதை நன்கு அறிந்துகொண்டாள் கைகேயி. கூனியினுடைய சூழ்ச்சி, அவள் அந்த அடிப்படையை அறிவதற்கு ஓரளவு துணை செய்தது ; அந்த அளவோடு அது நின்று விட்டது.

தசரதனைப் பொறுத்தமட்டில் ஒரு மாபெரும் தவற்றைச் செய்ய முற்பட்டு விட்டான். இராமனுக்குப் பட்டம் சூட்ட வேண்டும் என்று

முடிவு செய்துவிட்டதால், அந்தத் தவறான முடிவை அவன் கை விட்டாலொழிய அவனுடைய பெயருக்குப் பெருங் களங்கமும் பாவமும் வந்து சேரும். தான் முன்பு சொல்லிய சொல்லை மறந்து இப்போது புதிய ஒன்றினைத் தொடங்கி விட்டான் தசரதன். ஆகவே, அவனை வழி திருப்ப வேண்டும்.

இதற்கு ஒரே வழி—கன்யா சுல்கத்தை அவனுக்கு நினைவூட்டி யிருக்கலாம். அவ்வாறு செய்தால் தசரதன் அது வரையில் செய்த தெல்லாம் பெருஞ் சூழ்ச்சிகளாக முடிந்துவிடும். பெரும் பழி தன் பேரில் ஏற்றப்பட்டுவிடும். அப்படியுமில்லாமல், (கன்யா சுல்கத்தையே நினைவூட்டாமல்) என்ன காரியத்தைத் தசரதன் செய்ய வேண்டுமோ, அதைத் தான் பெற்ற வரத்தின் மூலமாகச் செய்து கொண்டவளாகக் கைகேயியைக் கம்பன் படைத்துக் காட்டுகிறான்.

இவ்வாறு செய்ததால் தசரதனுடைய பெயர், குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுகிறது. அதே நேரத்தில் எவ்விதக் குற்றமும் செய்யாத கைகேயியின் பெயர் மண்ணில் ஆழ்த்தப்படுகிறது. இதனை நன்கு அறிந்திருக்கின்றாள் கைகேயி என்பதில் ஐயமே இல்லை.

இறுதியாகக் தசரதன் 'நீ உன்னுடைய முடிவிலிருந்து மாறவில்லையானால் நான் இறந்துவிடுவேன்,

"உன் கழுத்தின் நாண், உன் மகற்கு காப்பின் நாண்
ஆம்" (1653)

'உன் கழுத்தில் அணிந்திருக்கும் மங்கல நாண், உன் மகன் கைக்குக் காப்பு நாண் ஆகக் கடவது' என்று தசரதன் கூறிய பொழுதும்கூட, ஒருத்தி பிடிவாதமாகத் தான் கொண்ட கொள்கை யில் உறுதியாக நிற்கின்றாள் என்றால் இது வெறுந் தாய் அன்பினாலோ அல்லது தன் மகனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்ற எண்ணத்தினாலோ எடுத்த முடிவாகச் சிந்திப்பதற்கில்லை. 'பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டுமென்றால் உன் கழுத்திலுள்ள திருமாங்கல்யச் சரடே அவன் கைக்குக் காப்பாகக் கடவது' என்று

கணவனாகிய தசரதன் சொல்லிவிட்டான் என்றால் இதைவிடப் பெரிய சாபம் வேறெதுவும் இருப்பதற்கில்லை. இவ்வளவு பெரிய சாபத்தைப் பெற்றுக்கொண்டு, பரதனுக்குப் பட்டம் சூட்ட வேண்டு மென்று கைகேயி நினைத்தாள் என்று நினைப்பது அவளுடைய அறிவுக்கும், பண்புக்கும் பொருத்தமில்லாததாகப் படுகின்றது.

ஆகவே, வேறு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அந்தக் காரணத்தைக் தன் அடி மனத்தில் வைத்துக்கொண்டு, அதனை வெளியில் சொல்ல முடியாத நிலையில், தன்னுடைய கணவனாகிய தசரதனைப் பெருங் குற்றத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று நினைக்கின்றாள் கைகேயி என்று நினைப்பது பொருத்தமுடையதோ என்று தோன்றுகிறது.

இராமனது அவதார நோக்கத்தை அவள் அறிந்திருந்தாள் என்று சொல்வதற்கில்லை. 'இராகவன் காட்டிற்கு செல்வதுதான் அவன் பிறந்ததனுடைய நோக்கம்',. என்பதைக் கைகேயி அறிந் திருந்தாள் என்று சொல்வது கதைப் போக்கில் இடையூறு விளை விக்கும். ஆகவே, அந்தக் கருத்தை விட்டு விடலாம்.

அவளைப் பொறுத்தமட்டில் தசரதன் தன்னுடைய திருமணத் திற்கு முன்னால் கொடுத்த வாக்கை மீறி (கன்யா சுல்கம்) இப் பொழுது அதற்கு மாறுபட்ட ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கு கிறான். இதனைச் செய்து முடிப்பானேயானால் உலகமுள்ளளவும் தசரதனுடைய பெயர் பழிக்கு உள்ளாகும். அது மட்டுமல்ல, பெரும் பாவத்திற்கும் அவன் ஆளாவான். பரம்பொருளை மகனாகப் பெற்றுங்கூட இத்தகைய குற்றத்திலிருந்து அவன் விடுபட முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கும்.

ஆகவே, இப்பொழுது ஒன்று, தசரதனை அவனுடைய வழிப் படி விட்டு அதனால் வருகின்ற பெருங் குற்றத்தினையும், பழி பாவங் களையும் அவனே ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். இல்லை யானால் அவன் செய்ய முனைந்த காரியத்தைச் செய்ய விடாமல் த்டுத்து அதனால் வருகின்ற பழி பாவங்கள், குற்றங்கள், கெட்ட பெயர்

அனைத்தையும் (கைகேயி) தானே ஏற்றுக்கொண்டு, தசரதனைக் காப்பாற்ற வேண்டும். இந்த இரண்டின் இடைப்பட்டு, 'இருதலைக் கொள்ளி எறும்பாக' இருந்த கைகேயி, ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வருகின்றாள் என்று நினைக்க வேண்டியுள்ளது.

மந்தரை சொல்லிவிட்டுப் போன பிறகு தசரதன் வருவதற்கு இடைப்பட்ட நேரத்தில் கைகேயினுடைய மனத்திரையில் இந்த எண்ண ஓட்டங்கள் நன்கு பதிந்திருக்க வேண்டும். எவ்வாறாவது தன் கணவனைக் காப்பாற்ற வேண்டும். 'வாய்மையும் மரபும் காத்தவ னாக' அவனை ஆக்க வேண்டும். 'பொய் உரையாத புண்ணிய னாக' அவனை ஆக்க வேண்டும் என்று கைகேயி முடிவுக்கு வந்து விட்டாள். கற்புடைய மனைவியின் கடமை அது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. 'தற்காத்துத் தற்கொண்டானை'ப் பேண வேண் டிய கடப்பாடு, அவளுடையதாக் ஆகிறது. ஆகவே, தான் எந்த நிலையை அடைந்தாலும், தனக்கு எத்தகைய அவப்பெயர் வந்தாலும், தான் எந்தப் பாவத்திற்குப் போவதாக இருந்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல், தன்னைக் கைப்பிடித்தவனாகிய கணவனுடைய குற்றங்களை நீக்கி, அவனுக்குப் பழி வராமல் செய்து அவன் நரகத்தை அடையாமல் செய்ய வேண்டியது தன்னுடைய கடமை என்று கைகேயி முடிவு செய்திருத்தல் வேண்டும்.

இந்த முடிவை அவள் மேற்கொண்ட பிறகு, அந்த முடிவைக் கொண்டுசெலுத்துகின்ற முறையில் அவள் ஒப்பற்ற ஸ்திதப்ரக்ஞ நிலையில் நின்று செயலாற்றுகின்றாள். இவ்வாறு செய்வதனால் கணவன் உயிர் போய்விடும் என்று முதலில்அவள் நினையாமல் இருந்திருக்கலாம். ஆனால், கணவன் அதை எடுத்துக் காட்டிய பிறகு, 'கணவனுடைய உயிரா? அல்லது அவன் பழிக்கு ஆளாகாமல் இருப்பதா?' என்ற ஒரு வினா கைகேயியின் மனத்தில் தோன்றி யிருத்தல் வேண்டும்.

தசரதன் அறுபதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவன். இன்னும் சில ஆண்டுகள் வாழ்வதில் அவனுக்கு எந்த விதமான சிறப்பும், பெருமையும் இருக்கப் போவதில்லை. ஆனால், இத்தனை ஆண்டு கள் வாழ்ந்தும், அவன் இராமனுக்குப் பட்டம் கட்டிவிட்டு உயிர் துறப்பானேயானால் வார்த்தை தவறிய பெரும் பழி அவனைச் சூழத்தான் செய்யும். ஆகவே, இந்தப் பழியிலிருந்து நீங்க வேண்டு மானால், அவன் உயிர் போவதாக இருந்தாலும் சரி அதுபற்றிக் கவலையில்லை. இந்தப் பழி பாவங்கள் அவனை அடையாதிருத்தல் வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு கைகேயி செயல்பட்டாள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

ஆகையினால்தான் தசரதன் எவ்வளவு எடுத்துக் கூறியும் வசிட்டன் வந்து கூறியும், கோசலை வந்து அழுதும் கைகேயி எதற்கும் அசையாமல், தான் கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடு நின்று விட்டாள். ஆகவே, இந்த அடிப்படையை வைத்துக் கொண்டு பார்ப்போமேயானால் கைகேயி செய்த தியாகம் மாபெரும் தியாக மாகும். இந்த மாபெரும் தியாகத்தில் தன்னைச் சூடமாக ஆக்கி எரித்துக் கொண்டு கணவனைக் காப்பாற்றுகின்றாள் என்று நினைக்கத் தோன்றுகிறது.

கைகேயி இவ்வாறு நினைந்துதான், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு இந்த முடிவிற்கு வந்து கணவனைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே சர்வ பரித்தியாகம் செய்துகொண்டாள் என்ற முடிவுக்கு அரண் செய்கின்ற முறையில் பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் அமைகின்றன.

பரதன் வருகிறான்; தாயிடம் பேசுகிறான்; 'தந்தை வானத் தான், அண்ணன் கானத்தான்' என்று அவள் பேசுகிறாள். அதனைக் கேட்ட பரதன் துணுக்குறுகின்றான். சிறிதும் உணர்ச்சி யில்லாமல், 'ஒருவன் கானத்தான், ஒருவன் வானத்தான்' என்று சொல்கிறாளே என்று நடுங்குகின்றான் பரதன். உடனே காரணங் கள் கேட்டறிந்தவுடன்

"ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாய் எனும் பெயர் எனைத் தடுக்கற்பாலதோ" (2173)

'தாய் எனும் பெயர் என்னைத் தடுக்கவில்லை. அண்ணன் இராமன் கோபித்துக் கொள்வானே என அஞ்சுகிறேன். அதனால் தான் உன்னைக் கொல்லாமல் விட்டு விடுகிறேன்' என்று பேசுகிறான் பரதன். அந்த நிலையிலும் கைகேயி வாய் திறக்கவேயில்லை.

இனி அனைவரும் இராமனை அழைத்து வருவதற்காகச் செல்லும்போது கைகேயியும் செல்கிறாள். குகனிடம் தன் தாய்மார் களை அறிமுகம் செய்து வைக்கின்ற பரதன், கைகேயியை அறிமுகம் செய்து வைக்கும்பொழுது,

"படர்.எலாம் படைத்தாளை பழி வளர்க்கும்
செவிலியை தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர் பாரம் குறைந்து தேய
உடர் எலாம் உயிர் இலா எனத் தோன்றும்
உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்
இந் நின்றாள் என்னை ஈன்றாள்" (2371)

என்றெல்லாம் பேசுகின்றான். இந்த நிலையிலும் கைகேயி வாயைத் திறக்கவேயில்லை. இறுதியாக அவள் பேசிய பேச்சு பரதனிடம் 'வானத்தான், கானத்தான்' என்று சொன்னாளே அது தான். அதன் பிறகு அவள் வாயே திறக்கவில்லை என்பதை அறியும் போது கொஞ்சம் வியப்புத் தோன்றுகிறது.

மிக எளிதான முறையில் தன் கணவன், கொடுத்த வாக்கை மறந்து செய்ய இருந்த தவற்றிலிருந்து அவனைக் காப்பதற்காகத் தான் அதனைச் செய்தேன் என்று அவள் சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் பரதனோ, கோசலையோ யாருமே அவளைக்

குற்றம் சொல்வதற்கில்லை. அந்த நிலையில். 'அவள் ஏன் அதனைச் சொல்லித் தப்பித்துக் கொண்டிருக்கக் கூடாது' என்று நினைக்கும் பொழுதுதான் அவளுடைய பெருமை நமக்குத் தெற்றென விளங்குகிறது.

இதனை அவள் சொல்லியிருப்பாளேயானால் தன்னைப் பழியிலிருந்து விலக்கிகொள்ளலாமே தவிர தசரதனுடைய புகழ் மங்கியிருக்கும். அந்த நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் கைகேயி இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்தாள். ஆகவே, வாய் திறந்து, 'வேண்டுமென்றே தான் செய்தேன். இதனை நான் செய்யாமல் இருந்திருப்பேனே ஆனால் தசரதன் வாய்மையும் மரபும் காத்தவனாக இருந்திருக்க மாட்டான்' என்று சொல்லியிருப்பாளேயானால் மறுபடியும் தசரதனுக்குப்பழி ஏற்பட வழிசெய்தவள் ஆகிவிடுவாள். ஆகவே, ஒரு கடுகளவு கூடக் கணவனுக்குப் பழி வராத முறையில் அவனைப் பாதுகாத்து அதன் காரணமாகத் தன்னையே தியாகம் செய்து கொண்டு வாய் திறவாமல் கடைசிவரை இருந்த பாத்திரமாக அமைகின்றாள் கைகேயி. இவளுடைய இந்த மாபெரும் தியாகத்தைப் பரதன் உணர்ச்சி வசப்பட்ட காரணத்தால் அறிந்து கொள்ள வில்லை. ஏனையோரைப் பற்றிக் கவலையேயில்லை. ஆனால், இராகவனைப் பொறுத்தமட்டில் நன்கு அறிந்து இருந்தான் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

இராகவனைப் பிள்ளையாகப் பெற்றுங்கூட, தசரதன் வீடுபேற்றை அடையக்கூடிய நிலையைப் பெறவில்லை. தேவர் உலகத்தில் தான் சென்று தங்குகின்றான்.

> "சுமந்திரன் இராகவன் கானகம் போயினன்" என்றான் ;
> என்ற போழ்தத்தே ஆவி போனான். (1898)

என்றுதான் கம்பன் கூறுகின்றானே தவிர, 'வீடுபேற்றை அடைந்தான்' என்று சொல்லவில்லை. ஏன் தெரியுமா? மனத்திலே கைகேயி மாட்டுக் கொண்ட காழ்ப்புணர்ச்சியோடு இறுதி வரையிலும் தசரதன்

இருந்துவிட்டான். கைகேயிமாட்டுக்கொண்ட காழ்ப்புணர்ச்சியும், பரதன்மாட்டுக் கொண்ட கசப்புணர்ச்சியும் அவனுடைய மனத்தில் நிறைந்திருந்த காரணத்தால்தான் அவன் வீடுபேற்றை அடைதல் முடியவில்லை. ஆகவே, இந்தக் காழ்ப்புணர்ச்சி அவனிடமிருந்து நீங்கினாலொழிய அவன் வீடுபேற்றை அடைய முடியாது என்ற இந்த நாட்டுக் கொள்கையை வலியுறுத்துவதற்காக, மூல நூலில் இல்லாத ஒரு பகுதியைப் புகுத்துகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன். அனைத்தும் முடிந்து வெற்றிவாகை சூடிய இராமனிடம் தசரதன் வருவதாக ஒரு புதிய காட்சியை உண்டாக்குகின்றான். தசரதன் வந்து.

"அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்
இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது. என்னைக்கொன்று
நீங்கலது. இப்பொழுது அகன்றது உன் குலப்பூண்
மன்றல் ஆகம் ஆம் காந்த மா மணி இன்று வாங்க"
(10068)

என்று சொல்லி, 'நீ வரத்தைக் கேள்' என்று சொல்லுகின்றான். அப்போது இராமன் கேட்கின்ற வரம் வியப்பை உண்டாக்குவதாக அமைகின்றது. 'ஐயா,

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும், மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (10079)

என்று கேட்கின்றான்.

"தீயள் என்று நீ துறந்த என்தெய்வமும்" (10079)

என்ற வார்த்தைகள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியன. தெய்வத்தைப் போல, தன்னுடைய நலத்தைக் கருதாமல், பிறருக்காகவே மாபெரும் காரியத்தைச் செய்தவள் கைகேயி என்பதை இராகவன் உணர்ந்த காரணத்தால்தான்,

"என் தெய்வம்"

என்று பேசுகின்றான்.

அந்தத் தெய்வத்தை உள்ளவாறு உணராமல் ஏசி, காழ்ப்புணர்ச்சியோடு இறந்துவிட்ட காரணத்தால், தசரதனைச் சுட்டிக் காட்டுபவன் போல,

"தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக" (10079)

என்று கேட்பதன் மூலம், கைகேயி என்ற பாத்திரத்தைக் கவிச் சக்கரவர்த்தி என்ன அடிப்படையில் படைத்தான் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இராகவனைப் பொறுத்தமட்டில் கைகேயின் தியாகத்தை நன்கு அறிந்திருந்தான்; ஆதலால் அவளைத் தெய்வம் என்று கூறுகின்றான். அந்தத் தெய்வம் தன்னுடைய கடமையை நிறை வேற்றுகின்ற முறையில் பேச வேண்டியபொழுது பேசிற்று. கொண்ட கொள்கையில் உறுதிப்பாட்டோடு இருந்து, கொள்கையை நிறை வேற்றும்பொழுது தனக்கு வருகின்ற பழி பாவம் முதலிய அனைத்தை யும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் வாய் திறந்து பேசி தன்னுடைய பழியைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்று அந்தப் பாத்திரம் கருதவே இல்லை. அதற்குரிய சந்தர்ப்பங்கள் பலமுறை கிடைத்தும் வாய் திறவாமல் இருந்துவிட்ட ஒரே காரணத்தால் இறுதி வரையில் தன்னுடைய கணவனை மாசு மருவு அற்றவனாக ஆக்க வேண்டுமென்ற தன்னுடைய குறிக் கோளில் வெற்றி பெற்றவளாக ஆகி விடுகின்றாள் கைகேயி. ஆகவேதான், ஏனையோர் யாருக்கும் தராத அந்தப்பட்டத்தை, இராகவன் கூற்றாகவே அமைக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி, "என் தெய்வம்" என்று.

ஆகவே, கைகேயி என்ற பாத்திரப் படைப்பை எந்த அளவுக் குக் கவிஞன் புதிய முறையிலே படைத்திருக்கின்றான் என்பதை

இந்தக் கண்ணோட்டத்துடன் பார்ப்போமேயானால் கொஞ்சம் வியப்பைத் தருவதாகவே அமைகின்றது. மூல நூலில் அமைந்துள்ள முறையை விட்டுவிட்டுப் புதிய முறையில் கன்யா சுல்கத்தை ஓரளவு மறைத்து, அதே நேரத்தில் கைகேயியை ஒரு மாபெரும் தியாகியாக, ஸ்திதப்ரக்ஞையாக, கடமையை நிறைவேற்றுதற்காகப் பழி பாவங் களை ஏற்றுக் கொள்ளுகின்ற ஒரு பாத்திரமாக அமைத்து விடுகின் றான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன்.

ஆகவே, 'இந்த அடிப்படையில்தான் அந்தப் பாத்திரத்தை அமைக்கின்றேன்' என்பதைச் சுட்டிக் காட்டுபவன் போல, அப் பாத்திரத்தை அறிமுகம் செய்கின்றபோதே மிக அற்புதமான முறை யில் அறிமுகம் செய்து வைக்கிறான். மந்தரை வந்த பொழுது கைகேயி உறங்கிக்கொண்டிருக்கிறாள்.

"கடைக்கண் அளி பொழிய பொங்கு அணை
மேல் கிடந்தாள்" (1448)

என்று கைகேயியை முதல் முதலாக அறிமுகம் செய்வான் கம்பநாடன். உறங்கும்பொழுது ஒருவருடைய அக மனத்தில் என்ன எண்ணம் நிறைந்திருக்கிறதோ அதுதான் அவரது முகத்தில் வெளிப்படும். கைகேயி உறங்கிக்கொண்டிருந்தபோது அவள் கடைக்கண் வழி அருள் சுரந்து கொண்டிருந்தது என்றால் அவளுடைய அகமனம், ஆழ்மனம், சிந்தை ஆகிய அனைத்திலும் அருள் நிரம்பி இருக் கின்றது என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றான் கவிச் சக்கரவர்த்தி. இப்படி மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் நான்கிலும் அருள் நிறைந்திருப்பவளாகிய ஒருத்தி, எவ்வாறு கொடுமையான காரியத்தைச் செய்ய முடியும் என்று சிந்திப்போமேயானால் உண்மையை விளங்கிக்கொள்ள முடியும். கொடுமை என்பது நாம் பார்க்கும் பார்வையில் இருக்கின்றதே தவிர, செயலில் இல்லை. இப்பொழுது அவள் வாய் திறவாமல் இருந் திருப்பாளேயானால் தசரதன் பழிக்கு ஆளாவான். வாய் திறந்து

பேசியதனால் பழியை அவள் ஏற்றுக்கொள்கிறாள். ஆகவே, தன்னுடைய அருள் நிரம்பிய உள்ளத்தால், ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, கணவனைக் காப்பாற்றுவதுதான் தன்னுடைய கடமை, தற் கொண்டானைப் பேணுவதுதான் தன்னுடைய கடமை, கற்புடைய மனைவியின் கடமை என்ற முடிவுக்கு வந்து ஒப்பற்ற தியாகத்தைச் செய்பவளாக, ஓர் உறுதிப்பாட்டோடு செயல்பட்டவளாகத்தான் – இந்தப் பாத்திரத்தை அமைத்திருக்கிறான் கம்பன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

கன்யா சுல்கக் கதை வெளிப்படையாகக் கம்பனால் பேசப்படா விட்டாலும், அயோத்தியா காண்டம் முழுவதையும் பார்க்கும் போது இதனை ஏற்றுக் கொண்டுதான் அவன் பேசுகின்றான் என்பதை அறிய முடிகின்றது.

கன்யா சுல்க நிகழ்ச்சியைத் தசரதன், கைகேயி என்ற இருவர் மட்டும் அறிந்ததோடு அல்லாமல் இராகவனும் அறிந்திருந்தான் என்பதைச் சந்தர்ப்பம் வரும்போது அவன் கூற்றாகவே வைத்துப் பேச வைக்கின்றான் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடன். மூல நூலாகிய வான்மீகத்தில் இந்நிகழ்ச்சி இராமனும் பரதனும் காட்டில் சந்திக்கின்ற காலத்தில் பரதனிடம் இராமனே கூறுவதாக அமைந்துள்ளது. பரதன் கூட அதை ஓரளவு அறிந்திருந்தான் என்பதையும் அந்தப் பாடலின் மூலமே தெரிவிக்கின்றான். ஆழ்ந்து சிந்தித்தால் மந்திரப் படலத்தில் வருகின்ற பாடல் இந்தக் கருத்தை வலியுறுத்துவதாக அமைந்திருப் பதைக் காணமுடியும்.

மைந்தனை அழைத்து 'நீ இந்த அரசை ஏற்றுக்கொள்ள வேண்டும். நான் தவம் செய்யப் போகிறேன்' என்று பதினான்கு பாடல்களில் தசரதன் பேசுகிறான். மூத்த பிள்ளையாகிய இராகவனே பட்டத்தை ஏற்கக் கடப்பாடுடையவன்; இதை உலகம் அறியும். 'மயில் குலம் முறை' என்று சொல்லப்படுகின்ற முறையில் தந்தைக்குப் பின்

மூத்த மைந்தன் என்பது மரபு பற்றி வருவதேயாகும். இந்த அடிப்படை அனைவரும் ஏற்றுக்கொண்ட ஒன்றுதான் என்பதில் ஐயமே இல்லை.

அப்படியிருந்தும் மூத்த மைந்தனாகிய இராகவனை அழைத்துப் பதினான்கு பாடல்களில்

"சொல் மறா மகப் பெற்றவர் அருந்துயர் துறந்தார்" (1380)

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய பிள்ளைகளைப் பெற்றவர்கள்தாம் உயர்ந்தவர்கள்.' என்றெல்லாம் மிகப் பெரிதாக ஒரு முன்னுரை பேசிவிட்டு, 'இந்தப் பட்டத்தை ஏற்றுக்கொள்' என்று சொல்லுகிறான் தசரதன். இவ்வாறு சொல்வதற்குத் தேவை என்ன ஏற்பட்டது?

இராகவன் தன் வேண்டுகோளை ஒருவேளை மறுத்து விடுவானோ என்ற அச்சத்தினால்தான் தசரதன் இவ்வளவு பெரிய முன்னுரை பேசுகிறான். அப்படியும் அச்சம் நீங்காமல் இறுதியாக,

இந்தப் பதினான்கு பாடல்களில், 'மைந்தர்கள் என்பவர்கள் தந்தைமார்கள் என்ன ஆணையிடுகின்றார்களோ அதைச் செய்ய வேண்டிய கடப்பாடு உடையவர்கள்' என்று கூறுவதோடு "நான் இவ்வளவு காலம் வானப்பிரஸ்தம் செல்லாமல் இல்லறத்தில் தங்கிவிட்டது பெருந்தவறு. ஐந்து பொறி புலன்களை அடக்கியாள வேண்டிய தவ வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய காலம் இப்போது வந்துவிட்டது" என்றெல்லாம் விரிவாகப் பேசி, இறுதியாக,

"..........அருந் துயர்ப் பெரும் பரம், அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்" எனக்கொள
வேண்டா
புனையும் மா முடி புனைந்து, இந்த நல் அறம் புரக்க
நினையல் வேண்டும் ; யான் நின்வயின் பெறுவது ஈது
(1381)

என்று சொல்லுகின்றான் தசரதன். இந்த வார்த்தைகள் ஆழ்ந்து நோக்கற்குரியன. மைந்தனை அழைத்து,

"நின்னை வேண்டி, எய்திட விழைவது ஒன்று உளது" (1373)

எனவும்,

"ஓர் நெறிபுக உதவிட வேண்டும்' (1374)

எனவும் கெஞ்சி, 'நான் வானப்பிரஸ்தம் செல்ல வேண்டும், நீ பட்டத்தை ஏற்றுக்கொள்'

"யான் நின்வயின் பெறுவது ஈது"

என்றும் கேட்க வேண்டிய தேவை என்ன வந்தது? ஆகவேதான் இதில் ஆழமான பொருள் ஏதோ புதைந்திருக்க வேண்டும்.

"இராகவன் கன்யா சுல்க அடிப்படையை அறிந்திருந்தான். எனவே, ராஜ்ஜியத்தை மறுத்துவிடுவான்." என அஞ்சிய தசரதன், அவன் மறுப்பதற்கு வாய்திறக்கும் முன்னரே இதை வரமாகக் கேட்கின்றான்.

"யான் நின்வயின் பெறுவது ஈது"

என்று சொல்வானேயானால் மைந்தன் வாய் திறப்பதற்கு வழியே இல்லாமல் போய்விடுகிறது.

இந்த நிலையில் இராகவனுடைய மனநிலை என்ன என்பதைச் சொல்ல வருகின்ற கம்பன் மிக அற்புதமான ஒரு பாடலைப் பாடுகின்றான். அனைவரும் அறிந்ததுதான் அந்தப் பாடல் என்றாலும் அதிலுள்ள ஒருசில சொற்கள் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியனவாகும்.

'தாதை அப் பரிசு உரைசெய தாமரைக் கண்ணன்' (1382)

தந்தையாகிய தசரதன் பதினான்கு பாடல்களில் விரிவாகப் பேசி, 'நீ இந்த வரத்தைத் தருவாயா' என்றவுடன் தாமரைக் கண்ணன் – இராகவன்

'காதல் உற்றிலன் இகழ்ந்திலன்' (1382)

பட்டம் வருகிறது என்பதற்காக அதை விரும்பவும் இல்லை. அதை இகழ்ந்து நோக்கவும் இல்லை.

"............... கடன் இது என்று உணர்ந்து
யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு? என நினைந்தும் அப்பணி தலைநின்றான்."
(1382)

என்கிறார்.

"கடன் இது என்று உணர்ந்து"

என்ற சொல்லுக்கு 'பட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் தனக்குக் கடமை என்று நினைத்து' என்று பலரும் பொருள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவ்வாறு பொருள் செய்வதிலுள்ள இடர்ப்பாட்டைச் சிந்திக்க வேண்டும். இதுதான் தன்னுடைய கடமை என்று உணர்ந்துவிட்டான் இராகவன்.' என்று பொருள் கூறினால்

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
'நீதி எற்கு' என நினைந்து"

என்ற தொடருக்கு,

'சக்கரவர்த்தியின் ஆணை எதுவோ அதன் வழி நிற்பது நீதி' என்று பொருள் கூறுவது 'நின்று வற்றுவதாக' முடிந்துவிடும். கடமை என்ற முடிவுக்கு வந்துவிட்ட பிற்பாடு, 'அரசன் என்ன ஆணையிட்டானோ அதனைச் செய்வதுதான் நீதியாகும் என்று நினைத்து, அரசன் இட்ட ஆணையை ஏற்றுக் கொண்டான் என்று சொல்வது அர்த்தமற்றதாகி விடும். ஆகவே,

"கடன் இது என்று உணர்ந்தும்"

என்ற சொல்லுக்கு வேறு பொருள் காண்டல் தேவைப்படுகிறது. 'கடன் இது என்று உணர்ந்தும்' என்றால் 'தசரதன் செய்தது அவ்வளவு சரியில்லை. பரதனுக்குத்தான் இப்பட்டம் உரியது என்று

உணர்ந்தான். உணர்ந்துவிட்ட பிறகு இரண்டு வகையில் இராகவன் செயல்படக்கூடும்.

ஒன்று, தந்தை என்ற முறையில் உறவு வைத்துக்கொண்டு, தந்தையைப் பார்த்து, "தாங்கள் செய்வது அவ்வளவு சரியாக இல்லை. இப்பட்டம் பரதனுக்கே உரியது" என்று கூறி மறுத்திருக் கலாம். அது ஒருவகை. இராகவன் அவ்வாறு செய்யவில்லை. மறுத் துப் பேசுவதற்கும் தசரதன் வாய்ப்பே கொடுக்கவில்லை. எனவே அடுத்த வழி என்ன? "சக்கரவர்த்தியின் ஆணை எதுவோ அதனைக் கேள்வி கேட்டகாத முறையில் , ('........Yours is not to question why? but to do and Die') ஏற்றுக்கொள்வதுதான் மற்றொரு வகையாகும்.

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு"

என்ற இந்த இரண்டாவது வழியை மேற்கொள்கிறான்.

"யான் நின் வயின் பெறுவது ஈது"

என்று தந்தையோ கெஞ்சுகிறான். மகனோ 'கொற்றவன் ஏவியது' என்று சொல்லுகின்றான். இந்த இரண்டுக்குமுள்ள மாறுபாட்டை நன்கு சிந்தித்தல் வேண்டும்.

"யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ
நீதி எற்கு"

என்று நினைக்கின்றான் இராகவன். ஆகவே, தசரதன் வரம் கொடு என்று கெஞ்சினாலும், அதை அப்படியே எடுத்துக் கொள்ளாமல் 'சக்கரவர்த்தி தனக்கு ஆணையிட்டதாகவே நினைக்கின்றான் தசரத குமாரன். ஆகவே, கொற்றவனுடைய ஆணையை மீறுதல் என்பது யாருக்கும் இயலாத காரியம். அந்த முறையில் 'அது சரியோ, தவறோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் 'இது சக்கரவர்த்தியி

னுடைய ஆணை. அதை நிறைவேற்றுவதே தன்னுடைய கடமை. அதுவே தர்மம்' என்ற கருத்தில் இருந்தான் என்று கம்பன் மிக அற்புதமாகச் சொல்வான்.

'அப்பணி தலைநின்றான்'

அவன் இட்ட பணியை மேற்கொண்டான்' என்று பேசுவதனால் இந்தக் கன்யா சுல்கக் கதை எந்த அடிப்படையில் இராகவன் மனத்தில் வேலை செய்கிறது என்பைத நாம் அறிந்துகொள்ள முடியும்.

இதற்கு இதுதான் பொருள் என்று அரண் செய்கின்ற முறையில் பின்னர் இராகவனுடைய கூற்று அமைந்திருத்தல் காண்டல் கூடும். சித்திரகூடத்தில் இராகவன் தங்கியிருக்கிறான். அவனை அழைத்துப் போவதற்காகப் படைகளோடும், நகர மக்களோடும் வந்த பரதன், நிமிர்ந்த சேனையைப் பின்வருக என்று கூறி அவர்களை நிறுத்திவிட்டு, முன்னே தனியாக வந்து இராகவனை வணங்குகிறான்.

பரதனுடைய மாசு படிந்த மேனியையும், தவக்கோலத்தையும் பார்த்து அசந்துபோனவனாகிய இராகவன், அவனிடம் பல கேள்விகளைக் கேட்டு, தந்தையினுடைய இறப்பு முதலானவற்றை எல்லாம் தெரிந்து வருந்திய பிறகு, 'நீ இந்தக் தவக்கோலம் பூண்டதன் காரணம் என்ன?, என்று கேட்கின்றான். அப்போது 'நீ வந்து ஆட்சியை மேற்கொள்ள வேண்டும்' என்று பரதன் கூற அதற்கு இராகவன் கூறுவதாக உள்ள பாடல் ஆழ்ந்து சிந்திப்பதற்குரியதாகும்.

'வரனில் உந்தை சொல் மரபினால் உடைத்தரணி நின்னது என்று இயைந்த தன்மையால் உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால் அரசு நின்னதே ஆள்க' (2485) என அந்தப் பாடலில் சொல்கிறான் இராகவன். 'நீ பிறந்து விட்டதனாலே இந்த ராஜ்யம் உன்னுடையுது ஆகிறது' என்று இராகவன் பேசுகிறான் என்றால் என்ன பொருள்? கன்யா சுல்கக் கதையை வேறு முகமாக, வேறு விதமாக இங்கே

புகுத்துகிறான் கவிச்சக்கரவர்த்தி. அதை நன்கு அறிந்திருந்தவ னாகிய இராகவன் பேசுகின்றான்.

"பரதா, நீ பிறவாமல் இருந்திருந்தால் இந்த ராஜ்யம் எனக்கு உரியதாக இருந்திருக்கலாம். ஆனால், கைகேயியின் வயிற்றில் நீ பிறந்துவிட்ட காரணத்தால் இந்தப் பூமி உனக்குச் சொந்தமாக ஆகி விட்டது. அதனை நீயே ஆள்வாயாக'

"நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க" (2485)

என்று இராகவன் கூறியதாக மிக அற்புதமான முறையில் அந்தக் கதையை மறுபடியும் நினைவூட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி. இத் தகைய ஒரு பாடலைக் கம்பன் மூல நூலாகிய வான்மீகத்தை நினை வில் கொண்டு பாடுகிறான். வான்மீகத்தில் இதே இடத்தில் கன்யா சுல்க வரலாற்றை மிக விரிவாகப் பரதனுக்கு இராகவன் எடுத்துக் கூறுவதாகப் பல பாட்ல்கள் அமைந்துள்ளன. (வான்மீகம், அயோத்தியா காண்டம்.)

தசரத குமாரன் அவ்வாறு பேசியவுடன் 'அது எப்படி?' என்று பரதன் கேட்டதாக இல்லவே இல்லை. அதற்குப் பதிலாக 'நீ பிறந்து விட்ட காரணத்தால் இந்த அரசு உனக்குச் சொந்தமானது' என்று இராகவன் சொன்னதை ஏற்றுக்கொள்கிறான் பரதன். அது தான் ஆச்சரியம். "முன்னர் வந்து உதித்து உலகம் மூன்றிலும் நின்னை ஒப்பு இலா நீ பிறந்த பார் என்னது ஆகில்யான் இன்று தந்தனென் மன்ன! போந்து நீ மகுடம் சூடு" (2486). இராகவன் சொன்னதை ஏற்றுக்கொண்டு, "நான் அரசன்தான். இப்போது நான் ஆணையிடு கின்றேன். நீ போய் ராஜ்யத்தை ஆள்வாயாக" என்று பரதன் கூறும் போது இராமன், பரதன் ஆகிய இருவருமே இந்தக் கன்யா சுல்கக் கதையை ஏற்றுக்கொண்டு அதற்கு வழி செய்கின்றார்கள் என்பதை அறிய முடிகின்றது. இப்படி வெளிப்படையாகச் சொல்லாமல் அதனை யார் யார் அறிந்திருக்க வேண்டுமோ அவர்கள் எல்லாம் அறிந்திருந்

தார்கள் என்று குறிப்பாகக் கவிச்சக்கரவர்த்தி கதையைக் கொண்டு செல்லுகின்ற முறையில் பற்பல வெற்றிகளைப் பெற்றுவிட்டான் என்றுதான் சொல்லவேண்டும். தசரதனைப் பழிக்கு ஆளாக்காமல், 'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்தவனாகச் செய்து விட்டாள் கைகேயி.

"படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும் செவிலியை"

(2371)

என்று பரதன் கூறினாலும் உண்மையில் அத்தகையவள் அல்லள் அவள். மாபெருந் தியாகத்தைச் செய்த ஸ்திதப்பிரக்ஞ மனோ நிலையில் உள்ள ஞானியாக அவளை ஆக்கிப் படைத்துவிட்டான். ஆகவே, அந்த அடிப்படையில் அவள் மனமாற்றத்தைக் குறிக்க வந்த கவிஞன்,

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்"

(1484)

என்று மட்டும் கூறி நிறுத்தாமல், "தூமொழி மடமான்" என்று அவளுக்கு அற்புதமான அடைமொழி சூட்டுகின்றான் கவிச் சக்கரவர்த்தி.

எனவே, அவள் கூறிய கடுஞ்சொற்கள் எல்லாம் மேலோட்டமாகப் பார்ப்பதற்குக் கடுஞ்சொல்லாக அமைந்தனவே தவிர, உண்மையில் அவை மாபெரும் தியாகத்தை அடிப்படையாகக் கொண்ட 'தூமொழிகள்' என்பதை

"தூ மொழி மடமான்" (1484)

என்ற சொல்லின் மூலம் பெற வைத்துவிடுகின்றான். ஆக இந்தக் கன்யா சுல்கக் கதையை வெளிப்படையாகச் சொல்லாமல், மறை முகமாகவே கொண்டு செல்வதில் இத்தனை பல வெற்றிகளைக் கவிச்சக்கரவர்த்தி பெறுகின்றான் என்பதை நாம் அறிய முடிகின்றது.

□

4. முதல் தேவி கோசலை

கவிஞன் படைப்பு

காப்பியத்தில் தோன்றும் எல்லாப் பாத்திரங் கட்கும் வடிவு தரவேண்டியவனாகிறான் கவிஞன்.

சிறந்த முறையில் பாத்திரப்படைப்பு அமைய வேண்டுமாயின், கவிஞன் படைத்த பாத்திரம் என்று இல்லாமல், அவனே பாத்திரமாக அமைந்துவிட வேண்டும்.

வேறு வகையாகக் கூறுமிடத்து, அவன் படைக்கும் ஒவ்வொரு பாத்திரமாகவும் அவன் மாற வேண்டும்.

சிறிய பாத்திரமேயாயினும், காப்பியத் தலைவனேயாயினும், இவ்விதிக்கு விலக்கில்லை. சிறந்த ஓவியம் எனின், முழுத் தோற்றம் நன்கு அமைவதோடு சிறு சிறு பகுதிகளும் செம்மையாக அமைய வேண்டும் அல்லவா? சிறந்த ஓவியர் தீட்டிய ஓவியங்களில் ஒவ்வொரு வளைவிலும் ஒவ்வொரு கோட்டிலும் அவ்வோவியரின் தனிச் சிறப்பைக் காண முடியும் என்று கூறுவர். ஓவியத்திற்கு மட்டும் அல்லாமல், கவிதைக் கலையிலும் இக்கூற்று உண்மையாகும். பிற்காலக் கவிஞர் தம் பாடலைப் பிறர் அறிந்துகொள்ளப் பாட்டின் இறுதியில் 'முத்திரை அடி' என்ற ஒன்றை வைத்துப் பாடுவர். அதே போல முத்திரை அடி இல்லாவிடினும், கம்பனுடைய ஒவ்வொரு பாட லிலும் அவனுடைய தனித் தன்மையைக் காண முடியும். கம்பனைப் போன்ற பெருங்கவிஞர்களிடத்தில் நாம் இம்முறையை எதிர் பார்ப்பதில் தவறு இல்லை.

இவ்வாறு அமைப்பதில் உள்ள சிக்கலையும் சிந்திப்பது நன்று. ஆண் மகனாய்ப் பிறந்து வளர்ந்த ஒரு கவிஞன், தான் ஆடவன் என்பதை மறக்க இயலாதன்றோ? எந்தச் சூழ்நிலையில் இருப்பினும், ஓர் ஆண் மகனுடைய பல்வேறு மன நிலைகளையும் அவன் கற்பனை செய்துகொள்ள முடியும். உயர்ந்த அரசன் முதல் தாழ்ந்த ஏவலாளன் வரை அனைவரும் ஆண் என்ற பொதுத்தன்மை உடையவரேயாவர். எனவே, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அரசன் எவ்வாறு நடந்து கொள்வான், ஏவலாளன் எவ்வாறு நடந்துகொள்வான் என்று அறுதியிட்டுக் கூறல் இயலும். இயலும் என்று கூறினதால், 'யாவர்க்கும் இஃது இயலுமோ!' என்று ஐயுற வேண்டா. பெருங்கவிகட்கு மட்டுமே இஃது இயலும். அதிலும் அரசனும் ஏவலாளனும் உரையாடும் ஒரு சூழ்நிலையில் ஒரு வினாடி அரசனாகவும் அடுத்த வினாடி ஏவலாளனாகவும் இருந்து கதையை நடத்திச் செல்ல நேரிடும். மேலும், இத்தகைய சந்தர்ப்பங்களில் உவமைகளுடன் பேசவேண்டிய இன்றியமையாமை ஏற்படுவதும் உண்டு. அரசன் பேசும் உவமையும் ஏவலாளன் பேசும் உவமையும் ஒன்றாயிருப்பது தவறு. வாழ்க்கையில் அவனவன் தகுதி முதலியவற்றிற்கேற்பவே உவமை கூறப்படல் வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் இடம், பாத்திரம் என்பவைகட்கேற்ப உரையாடல் முதலியன அமைப்பதே கவிஞனின் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

பாத்திரப் பண்பு

இம்முறையில் பாத்திரப் பண்பை விளக்குவது கடினமே ஆயினும், அஃது இயலாததன்று. காரணம், அரசனும் ஏவலாளனும் வாழ்க்கைத்தரத்தில் எத்துணை வேறுபாடு உடையவராயினும், அடிப்படையில் ஆண் மக்களே. ஆனால் எப்பொழுதும் ஆண்களைப் பற்றி மட்டுமா காப்பியம் பேசுகிறது? பெண்பால் இல்லாத காப்பியமே உலகில் இல்லை என்று கூடக் கூறிவிடலாமே! அவ்வாறாயின், இப்பெண் மனத்தைக் கவிஞன் எவ்வாறு கூறுகிறான்? "பெண்

மனத்தை அறிதல் இயலாது," என்று கூறுகிறார்களே! காப்பியத்தில் காணப்பெறும் பெண்கள், உலகில் காணப்படும் பெண்கள் பற்றிக் கூறப்படும் இப்பழமொழிக்கு விலக்கா? உலகில் காணப்படாத பெண்களைப் பற்றியா காப்பியம் பேசுகிறது? இல்லை. காப்பியம் கற்றவர் அனைவருக்கும் இவ்வுண்மை நன்கு தெரியும். வாழ்க்கையில் காணப்பெறும் பண்பாடுகளுடன் பாத்திரங்கள் படைக்கப் பட்டாற்றான் அவை நம் மனத்தைக் கவரும். பெரும்பான்மையான காப்பியங்கள் நம் மனத்தைக் கவர்கின்றன. அவ்வாறாயின், அவற்றில் காணப்பெறும் பாத்திரங்களும் உலகியலில் காண்பவையாக அமைதல் வேண்டும். இதிலிருந்து ஒன்றை அறியலாம். காப்பியம் பாடும் புலவன் நாம் காணமுடியாதவற்றைக் காணும் இயல்புடையவன். எந்தப் பெண் மனத்தை நாம் காணமுடியாது என்று கூறுகிறோமோ, அந்தப் பெண் மனம் அவனைப்பொறுத்த வரை உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகிறது. ஆதலின், கவிஞன் சாதாரண மக்களினும் வேறுபட்டவன் என்பது வெளிப்படை.

பெண் மனம்

பெண் மனத்தைக் கூறுவதிலும் பல வகைகள் உண்டு. ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுவான சில பண்புகள் உண்டல்லவா? அவற்றைப் பற்றிக் கவிஞன் கூறுதல் எளிது என்று நினைக்கலாம். பசி, நீர் வேட்கை போன்றவை கூட இருவருக்கும் பொது எனினும், ஆண், பெண் இருவரும் இவற்றிற்கு வெவ்வேறு முறையில் எதிர் நடப்பர். எனவே, கவிஞன் இருவர் மன நிலையையும் தனித் தனியாக ஆய்ந்துதான் கூற வேண்டும். 'அனைவருக்கும் பொதுவான ஒன்பது சுவைகளில், பெண் மனம் எவ்வாறு ஈடுபடுகிறது? அவற்றை எவ்வாறு அனுபவித்துப் பிரதிபலிக்கிறது?' என்று கூறுவதே சற்று வியப்பைத் தரும் ஒரு செயல். காதல் என்ற சுவையை எடுத்துக் கொண்டாற்கூட, ஆணும் பெண்ணும் வெவ்வேறு வகையில் இதில் ஈடுபடுகின்றனர். எனவே, கவிஞன் தொழில்

தொல்லை தருவதாகி விடுகிறது. ஓரளவு தன் ஆண் அனுபவத்தை வைத்துக்கொண்டு கவிஞன் இதனைப் பெண் அனுபவமாக மாற்றிக் கூறுகிறான் என்று கூறினாலும் தவறு இல்லை. ஆனால், ஆண் மகன் என்றும் அனுபவிக்காததும் அனுபவிக்க முடியாததுமான சில அனுபவங்கள் உண்டு அல்லவா? அவற்றைக் கவிஞன் எவ்வாறு கூற முடிகிறது? உதாரணமாகக் கணவனை இழந்த காதலியின் மனத்தை எவ்வாறு ஓர் ஆண் மகன் அறிதல் கூடும்? "பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம்; பிள்ளை பெறாப் பேதை அறிவாளோ?" என்று தாயுமானவ அடிகளே அருளியிருக்கின்றாரே! பிள்ளைப்பேறு இல்லாத பெண்ணுக்குக்கூடப் பிள்ளை பெற்றவளின் மனநிலையை அறிதல் கூடாதாம்! என்றாலும், பிள்ளை பெற்ற தாயின் மனநிலை யைக் கவிஞன் கூறாமலா இருக்கிறான்? கூறுகிறான்; அழகாகவும், மெய்ம்மையுடனும் கூறுகிறான். பிள்ளை பெற்ற தாய்மார்களும் அதனைப் படித்துவிட்டு, 'இவ்வனுபவம் மெய்ம்மையானது,' என்று கூறக் கேட்கிறோம். இது எவ்வாறு இயன்றது? "கவிஞன் ஒரு தனிப் பிறவி," என்று முன்னர்க் கூறியதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பாடல்களில் நூற்றுக்கு எண்பத்தைந்து அகத்துறைப் பாடல்களே. அவற்றுள்ளும் பெண் மனத்தைப் பாடியனவே ஏறத்தாழ அனைத்தும் என்றும் கூறிவிடலாம். அவற்றைப் பாடியவருள் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேர் ஆடவரே. ஆடவர் பெண்டிரின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டு கின்றனர்; அதுவும் தாம் கண்டவாறு அன்று; பெண்களே சரி என்று ஏற்றுக் கொள்ளும் முறையில் அப்பாடல்கள் அமைந்துள்ளன என்றால், இது வியப்பு அல்லவா?

காப்பியத் தலைவன்

இராமயணக் காப்பியத் தலைவனாகிய இராமனைப் பெறா விட்டாலும், வளர்த்த தாயாகிய கைகேயியின் மனநிலையைக் கவிஞன் கூறிய அழகை முன்னர்க் கண்டோம். இனி அக்கைகேயி

யின் மாற்றாளும் இராமனைப் பெற்றவளும் ஆகிய கோசலையைச் சற்றுக் காண்போம் :

தசரதன் தேவியர்களுள் கோசலையே மூத்தவள். "மூன்றுல கும் ஈன்றானை முன் ஈன்றானைப் பெற்ற" பெரும்பேறு உடையவள்; "கோக்கள் வைகும் முற்றத்தான் (தசரதன்) முதல் தேவி" (2366) என்றெல்லாம் பரதனால் பாராட்டப்படுபவள். "ஆற்றல் சால் கோசலை" (1457) என்று காப்பிய ஆசிரியனே அவளுக்கு அடைமொழி தருகிறான். அவள் தசரதன் உட்பட அனைவராலும் நன்கு மதிக்கப் பெறுபவள்; இராமனைப் பெறும் பேறும் இராமனையும் விஞ்சிய நற்பண்புகள் உடையவனாகிய பரதனை வளர்க்கும் பேறும் உடையவள். கைகேயியின் மகனாய்ப் பிறந்தும் அவளுடைய தீய பண்புகளுள் ஒன்றும் இன்றிச் சிறந்தவன் என்ற பெயரைப் பரதன் எடுத்தான் அன்றோ? "ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!" (2337) என்று குகனாலும் பாராட்டப்படும் பண்பாடு பரதனுக்கு எங்கிருந்து வந்தது? கோசலையிடமே முற்றிலும் வளர்ந்தவனாகலின், அவன் நற்பண்புகட்கு அவள் பெருங்காரணம் என்றால், அதனை மறுக்க இயலாது. அறிவுடைய தாய் என்பதற்கேற்ப, அவளே பரதனைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தாள். இராமன் அவளைக் கண்டு, "நின் காதல் திருமகன் பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்," (1608) என்று கூறியபொழுது கோசலை அதுபற்றி வருந்துவதாகவே தெரியவில்லை. அதற்கு மறுதலையாக, "நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்" (1609) என்றே கூறுகிறாள். இவ்வாறு மாற்றாள் மகனைத் தன் மகனாகவே கருதும் இயல்பு எளிதில் வருவதொன்று அன்று. அவ்வாறு கருதுவதிலும் கோசலை அன்பு தனிப்பட்டது. சாதாரண நிலையில் இவ்வாறு கருதுவதிலும், அக்குழந்தை இடத்து அன்பு பாராட்டுவதிலும் வியப்பு ஒன்றும் இல்லை. தனக்கும், தன்னால் அன்பு செய்யப்பட்டவர்கட்கும்

இடையூறு நேராத வரை பிறர் மாட்டு அன்பு செய்பவர் உண்டு. அப்பிறர் மாற்றாள் மைந்தரேயாயினும் தன் நலத்துக்கு இடையூறு நேராதவரை அன்பு காட்டுபவர் உண்டு. ஆனால், மாற்றாள் மகனிடம் கொண்ட அன்புக்கு உண்மையான சோதனை வரும் காலமும் உண்டு. கோசலைக்கு நேர்ந்த சந்தர்ப்பமும் இத்தகையதுதான். அவள் அருமை மைந்தன், உலகம் முழுவதும் விரும்பி ஏற்றுக் கொண்டு கொண்டாடும் இராமன், "விராவரும் புவிக்கெலாம் வேத மேயன" இராமன், நாளைப்பொழுது விடிந்ததும் அரசனாகப் போகிறான் என்று அறிந்தாள் அப்பெற்ற தாய்.

தசரதன் முடிபு

மந்திர சபையில் அமைச்சா முதலாயினவரோடு சேர்ந்து தசரதன் செய்த முடிபு மறுநாள் இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்பது. அம்முடிபைத் தசரதனே இன்னும் வெளியார் யாருக்கும் கூற வில்லை. அத்தகைய மறைச்செய்தி பணிப்பெண்கள் மூலம் கோச லைக்கு எட்டிவிடுகிறது. இச்செய்தியை அறிவித்தவர்கட்கு "நல்நிதிக்குவை நனி நல்கி" விட்டு, உடனே "தன் துன்னு காதற் சுமித்திரையோடும் போய் மின்னும் நேமியான் மேவிடம் மேவினாள்." (1404) இராமன் கைகேயியின் காதற்புதல்வனாய் அவளிடமே வளர்கின்றான். இந்தச் சந்தர்ப்பத்தில் கைகேயிக்கு இச்செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று கோசலை ஏனோ நினைக்கவில்லை! அதற்கு மறுதலையாகச் சுமித்திரையை அழைத்துக்கொண்டு திருமால் கோயில் புகவேண்டிய இன்றியமை யாமை யாதோ, அறிகிலோம்! 'முடி சூட்டு விழாவில் கைகேயி தலையிடக்கூடும் என்று கோசலையும் தசரதனும் நினைத்திருந் தனரோ!' என்று ஐயுறவேண்டி உளது. பின்னர் நிகழும் நிகழ்ச்சிகள் கொண்டு காணுமிடத்து, அவ்வாறு ஐயுறுதற்கு ஏதுவாகவே கோசலையின் செயல் அமைகிறது. அது எதுவாய் இருப்பினும், கோசலையின் செயல் சற்று வியப்பாகவே இருக்கிறது. ஒருவேளை,

அரசன் அன்பைப் பூரணமாகப் பெற்றவள் ஆகலின், அக் கைகேயிக்குத் தான் இதனைக்கூற வேண்டா என்று நினைத்திருக்க லாம். அன்றேல், இராமன் முடி சூட்டு விழாவில் தன்னைப் போலக் கைகேயி மகிழ்ச்சி அடையமாட்டாள் என்று கோசலை எண்ணி விட்டிருக்கலாம். கைகேயி மகிழ்ச்சி அடையாதது ஒரு புறமிருக்க, அவளால் இராமன் முடி சூட்டு விழாவுக்கு இடையூறு ஏற்படலாம், என்றுகூட அவள் நினைத்திருக்கலாம். இக்கருத்தைக் குறிப்பால் பெற வைக்கவே கவிஞன் "தன் துன்னு காதல் சுமித்திரை" என்றும் கூறுகிறான். திருமால் கோயில் புகுந்த கோசலை இறைவனை வேண்டுவது மீண்டும் நம் வியப்பையே கிளறுகிறது.

"'என்வ யின்தரு மைந்தற்கு இனிஅருள்
உன்வ யத்தது' என் றாள்உலகு யாவையும்
மன்வ யிற்றின் அடக்கிய மாயனைத்
தன்வ யிற்றின் அடக்கும் தவத்தினாள்." (1406)

'என் பிள்ளையைக் காக்க வேண்டிய பொறுப்பு இனி உன்னுடைய தாகும்,' என்று கடவுளைத் தொழும் நிலை இப்பொழுது என்ன வந்து விட்டது? ஏன் இவ்வாறு அவள் வேண்ட வேண்டும்? சாதாரண மனநிலையுடைய தாய் ஒருத்தியும் மறுநாள் முடி சூட்டு விழா நடைபெறப்போகும் மகனுக்குக் கடவுள் துணை வேண்டும் என்று கருதி வழிபடுவாளே! அந்த மன நிலையில் தான் கோசலையும் வழி பட்டாள் என்று கூறலாமேனும், முன்னும் பின்னும் நடந்தவற்றை யும் நடைபெறப்போகின்றவற்றையும் வைத்து நோக்குகையில் கோசலை மனத்தில் ஒரு பெரிய ஐயம் இருந்து வந்தது என்பது புலப்படும்.

கோசலையின் நிலை

கடவுட்பூசை முடித்த பிறகு நல்ல தவசிகள் முதலாயின வர்கட்குக் 'கன்றுடைப் பசுக்கள் நல்கி; அரண்மனை புக்காள்

கோசலை. அவளுக்கு இரவில் நடந்த செய்தி ஒன்றும் தெரிய நியாய மில்லை. பொழுது விடிவதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டு உறக்கம் துறந்து நிற்கிறது அத்தாய் உள்ளம்.

இரவு முழுவதும் அவள் உறங்கவில்லை. அவள் மனம் கற்பனை உலகில் சஞ்சரிக்கிறது. எத்தனையோ எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் அலை மோதி எழுகின்றன. இதுவரை அவள் பட்டத்து அரசி. எவ்வளவுதான் தசரதன் கைகேயி மாட்டு மயங்கி நிற்பினும் கோசலையின் முதல் இடத்தை ஒன்றுஞ் செய்யவில்லை அல்லவா? ஆனால், நாளைப் பொழுது விடிந்தால் அவள் முதல் தேவி அல்லள் அல்லவா? அருமை மைந்தனே முடி சூடுவதாயினும், அவள் கணவன் அரசியல் திருவை இழக்கிறான் என்ற எண்ணமும் ஒரோ வழித் தலை காட்டாமல் இல்லை. எனவே, மைந்தன் முடி சூடுவதால் பெறும் இன்பமும், கணவன் திருவை இழப்பதால் பெறுந்துன்பமும் மாறிமாறித் தோன்ற, ஒரு நிலைப்படாத மன நிலையுடன் பொழுதைக் கழிக்கிறாள். பெண் ஒருத்திக்கே உரிய இம்மனநிலையைக் கவிஞன் 'தாயுள்ளம்' பற்றிய தன் கற்பனையின் உதவி கொண்டு இதோ பேசுகிறான்.

“சிறக்கும் செல்வம் மகற்குஎனச் சிந்தையில்
பிறக்கும் பேர்உவ கைக்கடல் பெட்புஅற
வறக்கும் மாவட வைக்கனல் ஆனதால்
துறக்கும் மன்னவன் என்னும் துணுக்கமே.” (1403)

மறுநாட்பொழுதும் விடிந்துவிட்டது. இராம காதையின் மிக முக்கியமான பகுதி நடைபெற்று விட்டது. கரிய மேனியினை உடைய இராமனின் வாழ்க்கையில் ஒப்பற்ற ஒரு மாறுதல் கரிய நிறமுடைய இருட்டில் நடந்து முடிந்துவிட்டது. உலகீன்ற நான்முகனைப் பெற்று எடுத்த இராமனின் வாழ்வில் ஏற்பட்ட பெருமாறுதலை அவ் இராமனைப் பெற்ற தாயே அறிந்திலள். எனவே, பொழுது விடிந்ததும் விடியாததுமான நிலையில் அவள் வீட்டு முற்றத்திற்கும் உள்ளுக்கு

மாக நடந்து நடந்து அலுத்த நிலையில் இருக்கிறாள். 'அருமை மைந்தன் வரும், வரும்,' என எதிர் பார்த்து நிற்கின்றது தாயுள்ளம். நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. முடி சூட்டலின் முன்னரே மைந்தன் தன்னைக் கண்டு செல்வான் என்று எதிர்பார்த்து நின்றாள் அப்பெற்றெடுத்த தாய். ஆனால், முடி சூட்டலுக்கு வகுத்த நேரம் நெருங்கி விட்டது. இனித் தன்பால் வந்துவிட்டு பின் முடி சூட்டலுக்குச் செல்லக்கூட நேரம் இல்லை என்பதை உணர்ந்தவுடன் அத்தாய் மனம் வேறுவழியில் அமைதி அடைய முயல்கிறது. வேறு யாராய் இருப்பினும், 'தாயை இப்பொழுது மறந்துவிட்டான் போலும்!' என்று கூட நினைக்கலாம். ஆனால், இராமன் அத்தகைய மைந்தன் அல்லனே! எனவே, வாராமைக்குக் காரணந்தேடி நற்றாய், தடுக்க முடியாத காரணத்தாற்றான் முடிசூட்டலுக்கு முன்னர் அவன் வரவில்லை என்பதை நினைந்து அமைதி அடைந்துவிட்டாள் கோசலை. ஆனால், யாருக்காகவும் நில்லாத கால தேவன் ஓடிக் கொண்டே இருக்கிறான். இதோ இந்நேரம் முடி சூட்டல் நிகழ்ந்திருக்கும்! இனி அருமை மகன் வந்து விடுவான்! இனி வரப் போகும் அவன் எவ்வாறு காட்சி அளிப்பான்? குழந்தைப் பருவத்தில் இருந்த இராமன் அவள் மனக்கண் முன் தோன்றுகிறான்.

குழந்தைகள்

குழந்தை இல்லாதவர்கள் வீட்டில் நீண்ட நாட்களுக்குப் பின் தோன்றும் குழந்தைகளை வளர்ப்பதே ஒரு தனி முறையாய் இருக்கும். எல்லையற்ற செல்வாக்குடன் கட்டுப்பாடுகள் எவையும் இன்றிக் குழந்தைகள் வளர்க்கப்படுதல் கண்கூடு. அதிலும், அக்குழந்தையின் பெற்றோர்கள் பணக்காரர்களாகவும் இருந்துவிட்டால், கேட்க வேண்டுவதில்லை. வேளைக்கு ஓர் அணியும், வினாடிக்கு ஒரு துணியுமாக அக்குழந்தை அலங்கரிக்கப்படும். உண்மையான கண்ணனுக்குக் கூட யசோதை 'கிருஷ்ணன் கொண்டை' என்று இந்நாளில் வழக்கப் படும் முறையில் தலையை அலங்கரித்திருப்

பாளோ? என்பதை நாம் அறியோம். ஆனால், அப்பெயருடன் சேர்த்து வழங்கப்படும் தலை அலங்காரத்துடன் இன்று குழந்தைகள் காட்சி நல்குகின்றன. இது கருதியே போலும் 'நல்கூர்ந்தார் செல்வமகள்' (கலித்தொகை 50) என்று சங்கப் புலவன் யார் மகளையோ பார்த்துப் பாடினான்! குழந்தைச் செல்வம் இல்லாமல் ஏனைய செல்வம் படைத்தவர்கட்கு வயது முதிர்ந்த காலத்தில் ஒரு குழந்தை பிறந்து விட்டால், கேட்க வேண்டுவதில்லை! தசரதன் வீட்டில் அனைத்துச் செல்வங்களும் நிரம்பியிருந்தும், நீண்ட நாட்களாகக் குழந்தைச் செல்வம் மட்டும் இல்லை. தசரதன் இறுதிக் காலத்தில் நால்வர் மைந்தர் தோன்றினர். இவருள் இராமனும் பரதனும் பெற்ற தாயரிடம் வளராமல், மாறி வளர்ந்தனர். வயதால் இளைய கைகேயி இராமனை வளர்க்கும் கடப் பாட்டில் நின்றாள்; வித விதமாக இராமனுக்குக் கோலம் புனைந்து மகிழ்ந்திருப்பாள். அவ்வாறு கோலம் புனைந்து தான் அதனை அனுபவிப்பதுடன் அமையாமல், தன் மாற்றாளும் இராமனைப் பெற்ற தாயும் ஆன கோசலை கோயிலுக்கும் அவனை அனுப்பியிருப்பாள். மாற்றாள் செய்தனுப்பிய கோலமாயினும், அக் கோலம் புனைந்துள்ளவன் தான் பெற்ற மகனாகலானும், அவனைவரும் விரும்பும் பண்பாட்டினன் ஆகலானும், கோசலை அதனை மிகவும் பாராட்டியிருப்பாள் அல்லளோ! பன்னாட்கள் அவன் புனைந்து வெளிப்பட்ட கோலங்களில் அரசக் கோலமும் ஒன்றாய் இருந்திருக்கலாம். நாளை அரசனாக வேண்டியவன் ஆதலின், இராமனுக்கு அரச வேடம் முற்றிலும் பொருத்தம் உடையதாகவே இருந்திருக்கும். இவ்வாறு இளம்பிள்ளையாய் இருந்த பொழுது அரச வேடம் புனைந்து காட்சியளிக்கையிலும் அரசனுக்கு அறிகுறியாகக் கருதப்படும் இரண்டு பொருள்கள் இருத்தற்கில்லை. அவை இரண்டும் அரசனுக்கு இன்றியமையாத அறிகுறிகள் அல்லவா?

ஆட்சிச் சின்னம்

கொற்றக்குடையும் மௌலியாகிய கிரீடமும் இல்லாத அரசனை எங்கேனும் கண்டதுண்டா? அதிலும் பழந்தமிழ் நாட்டில் இவை இல்லாத அரசன் பெயரளவிற்கூட இருந்திருக்க மாட்டான். ஆதலின், அரசனுக்குரிய இவ்விரண்டு அடையாளங்களும் அவன் வெளியில் வரும் பொழுது பயன்படுவன அல்லவா? அரசனுடைய ஆட்சிச் சின்னத்தின் அறிகுறியாகவும், அவன் குடிகள் மாட்டுக் காட்டும் தண்ணருளின் அடையாளமாகவும் உள்ள 'கொற்ற வெண்குடையைக்' குழந்தைக்கு அரச வேடம் புனையும் பொழுது யாரும் தரமாட்டார். எனவே, மகன் வரவைக் கற்பனை செய்துகொண்டிருக்கும் கோசலை, அவன் முடி சூட்டலின் பிறகு வரும் பொழுது கொற்ற வெண்குடையுடன் வருவான் என நினைக் கிறாளாம். தலைமையின் அடையாளமாக, அவன் வரும் பொழுது, இருபுறமும் கவரி வீசி வ்ருவார்கள் ; கொற்ற வெண்குடையுடன் வருவான். அத்தாய் மனம் இதற்கு முன்னர்க் காணாத இக்காட்சியை உறுதியாகக் கற்பனை செய்து கொண்டுதான் இருக்கும். எந்தத் தாய்க்கும் இது இயல்புதான். இராமனுடைய பல்வேறு தோற்றங் களையும் கண்டு மகிழ்ந்த தாய்க்கு இதுவரை காணாத இக்காட்சி யில் மனஞ்செல்லுதல் முற்றிலும் பொருத்தமே. இவ்வாறு அவள் எதிர்பார்த்தாள் என்று நேரடியாகக் கவிஞன் இதனைக் குறிப்பிடவில்லை. அதைவிடச் சிறந்த முறையில் இவற்றுள் ஒவ்வொன்றையும் கூறிவிட்டு, இவற்றுள் ஒன்றும் இல்லாமல் வந்தான் என்று கூறுகிறான்.

இல்லாப் பொருள்களைக் குறிப்பிட வேண்டிய இன்றியமை யாமை யாது? ஆனாலும், கவிஞன் கூறுகிறான். "குழைக்கின்ற கவரி இன்றிக் கொற்றவெண் குடையும் இன்றி" என இங்ஙனம் வாராப் பொருள்களைக் கூறி அவை இல்லாமல் என்று குறிப்பிட்ட தற்கு ஒரு கருத்து இருத்தல் வேண்டும். அக்கருத்து யாது என்பதை நாம் ஊகித்து அறிய அடுத்த அடி பயன்படுகிறது. வாராதவைகளை

முதல் அடியிற் கூறிய கவிஞன், இரண்டாம் அடியில் வந்தவை இரண்டைக் குறிப்பிடுகிறான். இதில் சிறப்புயாதெனில், மகன் வரவை எதிர்பார்த்து நிற்கும் தாயானவள், மகனுடன் இரண்டு பொருள்கள் வரவேண்டும் என்று எதிர்பார்த்தாள். ஆனால், அப்பொருள்கள் வரவில்லை; அவற்றிற்கு மறுதலையாக அவள் எதிர் பாராத பொருள்கள் வந்தன என்பதே சிறப்பாகும். இன்னும் ஒரு சிறப்பும் இதில் உண்டு. கண்ணாற்காணக் கூடிய இரண்டை (கவரியும் குடையும்) அவள் எதிர்பார்த்தாள் மகனுடன். இவற்றுள் கவரி அவன் முன்னிற்பவரால் வீசப் பெறும்; குடை பின்னிற்பவரால் பிடிக்கப்படும். இவை இரண்டுமே கண்ணால் காணக்கூடியவை. ஆனால், இப்பொழுது மகன் வருகிற நேரத்தில் கண்ணாற் காணக்கூடாதவை இரண்டு முன்னும் பின்னும் வருகின்றன. அவை யாவை தெரியுமா? இதோ கவிஞன் கூறுகிறான். "இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம் பின் இரங்கி ஏக" என்ற அடியால், வரு கின்ற மகனின் முன்னும் பின்னும் வருகிறவர் யார் என்பது தெரிகிற தல்லவா? கவரிக்குப் பதிலாக விதியும், குடைக்குப் பதிலாக அறக் கடவுளும் வருகின்றனராம்.

கவரி எவ்வாறு செல்லும்? மேலும் கீழும் வீசிக் கொண்டு தானே கவரி செல்லும்? அதே போல் விதியும் ஏதோ செய்துகொண்டு தான் வருகிறதாம். அது செய்யும் செயலைத்தான் கவிஞன் 'இழைக் கின்ற' என்ற சொல்லால் குறிப்பிடுகிறான்.

தான் செய்யும் செயலைப் பிறர் அறியாத வகையில் செய்தலை இழைத்தல் என்று கூறலாம். முடிசூட வேண்டிய அரசகுமாரனைக் காடாள அனுப்பிய விதி தான் நினைத்த செயலை முடித்துவிட்ட பெருமித்துடன் தலை தூக்கி முன்னர் நடப்பதைக் கவிஞன் 'விதி முன் செல்ல' என்று குறிப்பிட்டான். ஆனால், இராமன் பின்னூர் வருகிற 'அறக் கடவுள்' விதியைப் போலச் செருக்குடன் வர வழி யில்லை அன்றோ? எனவே, இராமன் போய்விடுகிறபடியால் இனித்

தனக்கும் அயோத்தியில் இடம் இல்லையே என்பதறிந்த அறக் கடவுள், மிக்க வாட்டத்துடன் இராமனைப் பின் தொடர்ந்து வருகின்றானாம். 'இனி எமக்கு யாது கதி?' என்று கவலைப்படுபவர் கள் தலையில் கை வைத்துக்கொண்டு செல்வது போலத் 'தருமம் பின் இரங்கி ஏகு'கிறதாம். இவ்விருவரும் கோசலை கண்ணிலும் ஏனையோர் கண்ணிலும் படாமல் வருகின்றனர். நல்ல வேளையாக இவ்விருவரும் அப்பெற்றவள் கண்ணில் படவில்லை. தான் எதிர் பார்த்த இரண்டிற்கு மாறாக இவ்விருவரையும் கண்டிருந்தால் அத் தாயுள்ளம் என்ன பாடுதான் பட்டிருக்கும்! இதோ அவள் மனத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறான் கவிஞன்.

"குழைக்கின்ற கவரி இன்றி
கொற்றவெண் குடையும் இன்றி
இழைக்கின்ற விதிமுன் செல்ல
தருமம்பின் இரங்கி ஏக
மழைக்குன்றம் அனையான் மௌலி
கவித்தனன் வரும்என்று என்று
தழைக்கின்ற உள்ளத்து அன்னாள்
முன்ஒரு தமியன் சென்றான்." (1606)

அத்தாயின் மனத்தில் ஊற்றெடுக்கும் ஏக்கம் முழுவதையும் மூன்றாம் அடியின் இறுதி மூன்று சீர்களும் கொட்டிவிடுகின்றன. "கவித்தனன் வரும் என்று என்று" நினைக்கிறாளாம், அத்தாய்! அந்நினைவு எவ்வளவு ஆழமானது என்பதை நான்காம் அடியின் முதற்சீர் தெரிவிக்கிறது. 'வரும் வரும்' என்ற நினைவால் தழைக் கின்ற உள்ளமாம் அது. அத்தழைப்புக்குக் காரணத்தை ஆராயும் பொழுது தான் இறுதி அடியில் உள்ள 'ஒரு தமியன்' என்ற தொடரின் பொருட்சிறப்பு நன்கு விளங்கும். தழைக்கின்ற பொருளுக்குத் தண்ணீர்மூல காரணமாக இருப்பதுபோல, இத்தாயின் மனம் தழைப்பதற்கு அம்மைந்தனின் மௌலி (கிரீடம்) மூல காரணமாயிற்று.

தழைக்கும் பயிருக்குத் தண்ணீர் இல்லாமற் செய்வது போல, அவளுடைய தழைப்புக்குக் கிரீடம் இல்லாமற்போய்விட்டது. தண்ணீர் அற்ற பயிர் கருகிவிடுதல் போல, அவள் மனமும் மௌலி யற்ற மைந்தன் தலையைக் கண்டவுடன் சாம்பிவிட்டது என்றதைக் குறிப்பால் அறிவிக்கவே, "தழைக்கின்ற உள்ளத்து அன்னாள் முன் ஒரு தமியன் வந்தான்," என்று கவிஞன் கூறுகிறான்.

மேலும் ஓர் அழகு இப்பாடலில் புனைந்துள்ளது. தூரத்தே இருந்து பார்ப்பவர்க்கு முதலில் தெரிவன கவரியும் குடையும் அல்லவா? இன்னும் நெருங்கி வரும் பொழுதுதானே தலையில் கவித் திருக்கும் முடி தெரியும்? அந்த முறை பற்றியே கவிஞன் கவரியையும் குடையையும் முதலில் கூறி, முடியை மூன்றாம் அடியிற் கூறுகிறான்.

இது வரை மகனைக் கண்ணாற் காணுமுன் இருந்த தாயின் நிலையைக் கண்டோம். இவ்வாறு மைந்தனைக் காணுமுன்னர் ஒரு தலையாக தாய்க்கு ஏற்படும் மனநிலைகளை அழகாகப் படம் பிடித்துக் காட்டத் தலைசிறந்த கவிஞன் ஒருவனுக்கே இயலும். முன் இரண்டு அடிகளில் அவள் எதிர்பாராதவற்றைக் கூறியதை மேனாட்டுத் திறனாய்வாளர் மிகவும் போற்றுவர். இதனை 'அவல நகை' Grim Humour என்று கூட ஓரளவு குறிப்பிடலாம். மூன்றாம் அடியில் உள்ள 'என்று என்று' என்ற இருசொற்களும் காத்து அலுத்து மீட்டும் எதிர்பார்க்கும் தாய் மனநிலையை நன்கு காட்டுகின்றனவல்லவா?

எதிர் நோக்கும் தாய்

மகன் வரவைத் தாய் எதிர்பார்க்கிறாள். பெற்ற தாய்க்கன்றோ பிள்ளை அருமை தெரியும்? அதிலும், பேரரசனாக முடி சூடிக் கொண்டு வரப் போகிறான் என்று தழைக்கின்ற உள்ளத்தாளாகக் காத்து நிற்கும் கோசலை முன்னர், மழைக்குன்றம் அனையானாகிய இராமன் ஒரு தனியனாய் வருகிறான். தூரத்தே வரும்பொழுதே அத்தாய் மகன் வரவைக் கண்டுவிட்டாள்.

மகன் வருகிறான் என்பதில் மகிழ்ச்சி ; ஆனால், புடை சூழ்ந்து வரவேண்டியவர் யாவரும் எங்குச் சென்றுவிட்டனர்! முடி சூடிக் கொண்டவனை இவ்வாறு தனியே வர விடுவார்களா? ஒரு வேளை தாய் வீட்டுக்கு வருகிற காரணத்தால் உடன் வர வேண்டியவர்கள் ஒதுங்கி நின்றுவிட்டார்களா! ஐயத்தின் மேல் ஐயம், அப்பெற்ற மனத்தைப் பிடித்து ஆட்டுகின்றது! 'என்ன காரணமோ மைந்தன் தனியே வருவதற்கு?' என்பதை ஆய முற்பட்ட அத்தாய் மனம், விடை காண முடியாமல், இறுதியில் மகனைக் கூர்ந்து நோக்கத் தலைப் பட்டது. "மௌலி புனைந்தனன் வரும் என்று என்று" எதிர் பார்த்த மனம் உடையவள் ஆகலின், முதலில் மைந்தனுடைய முகத்தைக் கூடக் கவனியாமல், அவனுடைய தலையைக் கவனித்தாள் கோசலை. மகன் இன்னும் தூரத்தில்தான் வந்து கொண்டிருக்கிறான்.

இராமனின் தலையைத் தூரத்தே இருந்து கண்ட தாயின் வயிறு கரிக்கத் தொடங்கிவிட்டது. காரணம், இராகவன் தலையில் முடி இல்லாமையே. "புனைந்திலன் மௌலி" என்பதை அறிந்து கொண்டாள். 'ஒரு வேளை நல்வேளையை மாற்றி விட்டார்களோ!' என்ற ஐயம் மனத்தில் தோன்றிற்று. முடி இல்லாத தலையைக் கவனித்தாள். 'ஆ! இதென்ன புதுமை! முடி சூட்டலுக்கு முன்னர் நடைபெற வேண்டிய திருமஞ்சனம் கூடவா நடைபெறவில்லை? என்ன நிகழ்ந்திருக்கும்!' என்று ஆராயத் தொடங்கிவிட்டாள் கோசலை. அவளுடைய ஐயத்திற்கு முடிவு காணுமுன்னர் வீரனாகிய இராமன் வந்து அவள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

"'புனைந்திலன் மௌலி! குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன்! என்கொல்!' என்னும்
ஐயத்தாள் நளின பாதம்

வனைந்தபொன் கழற்கால் வீரன்
வணங்கலும், குழைந்து வாழ்த்தி,
'நினைந்ததுஎன்? இடையூறு உண்டோ
நெடுமுடி புனைதற்கு?' என்றாள்." (1607)

இராமன் தலையில் புதியதாக அமர வேண்டிய முடி, அவன் தலையில் இல்லாத காரணத்தால் கவிஞன் 'பொன்னால் ஆகிய வீரக் கழலை அணிந்தவன்' என்று கூறுகிறான். "வனைந்த பொன் கழல் கால் வீரன்" என்று கூறியதில் மற்றும் ஒரு பொருட்சிறப்பும் அமைந்து கிடக்கிறது. இராமன் முடி புனையப் போகிறான் என்ற மகிழ்ச்சியில் அனைவருடனும் சேர்ந்து நாமும் மகிழ்ந்திருக்கும் வேளையில் அவன் காடாள வேண்டிய கட்டம் வந்து விடுகிறது. நம்மையும் அறியாமல் அவனுடைய துன்பத்தில் நாம் பங்கு கொள்கிறோம். இக்கொடுமையை இன்னும் அறிந்துகொள்ளாமல் முடி இல்லாத அவன் தலையைக் கண்டு வருந்துகிற தாயுடன் சேர்ந்து நம் வருத்தமும் மிகுதியாகிறது. இந்தச் சந்தர்ப்பத்தின் வருத்தத்தைக் குறைக்க வேண்டிய கவிஞன் இராமனுடைய வீரத்தை நினைவூட்டுகிறான். 'பொன்முடி' தலையில் இருக்க இராமன் கொடுத்து வைக்கவில்லையே!' என்று வருந்தும் நம்மை நோக்கிக் கவிஞன் அந்தப் பொன்முடி அவனுடைய தலையை அடையத் தகுதியற்றது என்பான் போல, அவனுடைய காலிலேதான் பொன்னா லாகிய வீரக் கழல் இருக்கிறது என்கிறான். அன்றியும், அவன் வீரன் என்று குறிப்பிட்டமையின், தூய வீரனாகிய அவனுக்குத் தன் நாடும் காடும் ஒன்றுதான் என்பதையும் குறிப்பாற் பெறவைக்கிறான்.

நடுவு நிலைமையும் அமைதியும்

சாதாரணத் தாயாய் இருப்பின் இராமன் முடியற்று நிற்கும் நிலையைக் கண்டு தன்னை மறந்து நிலையில் ஒப்பாரி வைக்கவும் தலைப்பட்டிருக்கலாம். அவ்வாறு ஒரு தாய் செய்திருப்பின், அதில்

பெருந்தவறு என்று கூறுவதற்கு ஒன்றுமில்லை. உணர்ச்சியைப் பிறர் அறிய வெளிப்படுத்தல் தவறு என்று கூறினால், தாயன்பின் முன்னர் இச்சிறு தவறுகள் தவிடு பொடியாகிவிடும். ஆனால், சாதாரண நிலையிலுள்ள ஒரு தாய் செய்யக் கூடிய இச்செயலைக் கோசலை செய்துவிட்டால், அது தவறாகிவிடும். 'தசரதன் முதல் தேவி, இராமனைப் பெற்ற தாய், இவ்வாறு செய்யலாமா?' என்ற வினா விற்கு விடை அளிப்பது சிறிது தொல்லைதான். சிறந்த நிறை உடையவளும் ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்தவளுமாகிய அப்பெருமாட்டியிடம் நடுவு நிலைமையையும் அமைதியையும் எதிர் பார்க்கலாம் அல்லவா? இவை இரண்டும் தோன்றவே, அவளுடைய பேச்சு அமைகிறது. மனத்துள் நிகழும் பெரும்போராட்டத்தைச் சிறிதும் வெளிக்காட்டாமல் 'குழைந்து வாழ்த்து'கிறாளாம். எத்தனை பெரிய மனக் கலக்கமாயினும் வணங்கினவரை வாழ்த்தலே முறை. எனவே, அவள் வாழ்த்தினாள். அவ் வாழ்த்தலின் பின்னர் உள்ள மனம் எத்தகைய நினைவில் இருந்தது, என்பதைக் கவிஞன் 'குழைந்து' என்ற சொல்லால் குறிப்பிட்டுவிட்டான். நிறையுடைய தேவியாகலின், மன வருத்தம் மிகுந்து பிதற்றாமல் மைந்தன்மேல் உள்ள அன்பு விஞ்ச வாழ்த்தினாளாம். குழைவு என்ற ஒரு சொல்லால் கோசலையின் மனம் முழுவதும் எதிரே திறந்து கிடக்கும் புத்தகம் போல நமக்கு விளங்குகிறது.

இம்மன நிலையுடன் அவள் தன்னை வணங்கிய இராமனை வாழ்த்திவிட்டுக் கேட்கும் கேள்வியிலும் அவளுடைய மன நிலையைக் கவிஞன் விளக்குகிறான். "நினைந்தது என்? இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?" என்றாள். இவை அனைத்தும் ஒரே அடியாகக் கேட்கப்படினும், இதனுள் மூன்று கேள்விகள் இருப்பதைக் காணலாம். இப்பாடலுக்கு உரை எழுதின பெரியார்கள் "நினைந்தது என்?" என்ற வினாவுக்குச் 'சக்கரவர்த்தியாகிய தசரதன் என்ன நினைக்கிறான்?' என்று பொருள் கூறிப் போயினர். ஆனால், இவ் வடிக்கு அவ்வாறு பொருள் கூறாமல், இராமனையே கேட்டதாக

வைத்துக்கொள்ளுதல் நலமோ எனத் தோன்றுகிறது. வினாவின் முன்னர் "நீ" என்ற எழுவாயைப் பெய்து கொண்டால், புதிய பொருள் வரக் காண்கிறோம். கோசலையைப் பொறுத்த வரை தசரதன்மேல் எள்ளளவும் ஐயங் கொள்ளவில்லை. மேலும், அவன் மந்திரசபை கூட்டி அனைவரையும் கலந்து யோசித்த நிகழ்ச்சியையும் அவள் கேள்வியுற்றிருந்தாள் என்பதைக் கண்டோம். இன்னும் கூறப் போனால், மந்திரசபையில் நடந்தவற்றைப் பிறர் அறியுமுன்னர் அறிந்த கோசலைக்கு அங்கு நடைபெற்றவை அனைத்தும் தெரிந்தே இருக்கும் அல்லவா? மன்னன் மிகுதியும் இராமனை வேண்டியதும் இராமன் மறுமொழி ஒன்றும் தாராதிருக்கவே, மன்னன் அவனைத் "தருதி இவ்வரம் எனச் சொல்லி உயிர் உறத்தழுவி" (1383) அரண்மனை புகுந்த செய்தியும் அவள் அறிந்தே இருப்பாள். அதனை அடுத்துக் கைகேயி கோயிலில் நடைபெற்றவற்றுள் ஒன்றையும் அவள் அறியவில்லை. இந்நிலையில் தசரதனுடைய செயலில் அவள் ஐயம் கொண்டு "(தசரதன்) நினைந்தது என்?" என்று கேட்க, இன்றியமை யாமை இல்லை. மந்திர சபையில் தசரதன் அவ்வளவு வேண்டியுங் கூட வாய் திறந்து பேசாமல் இருந்தவன் இராமன் ஒருவனே. எனவே, கோசலை இராமனே முடி சூட்டலுக்குத் தடை கூறிவிட்டான் போலும் என்று நினைப்பதில் தவறு இல்லை. 'நீ என்ன நினைத்து இவ்வாறு வந்துள்ளாய்?' என்பது முதற்கண் கேட்கப்பட்ட கேள்வியாகும். "இடையூறு உண்டோ?" என்ற அடுத்த கேள்வி இராமனது விடையை உளப்படுத்திக் கேட்பதாகும். 'நீ என்ன நினைந்தாய்?' என்பதற்கு அவன், 'யான் ஒன்றும் நினைக்கவும் இல்லை,' கூறவும் இல்லை, என்று விடை இறுப்பதாக வைத்துக் கொண்டு அடுத்த வினாத் தோன்றுகிறது. 'இடையூறு உண்டோ?' என்பதில் "முன்னரே முடிபு செய்யப்பபெற்றவை நடைபெற" என்பது தொக்கு நிற்கிறது. இனி மூன்றாம் வினாவில் இதனையும் உடன் கூட்டி, "இடையூறு உண்டோ நெடுமுடி புனைதற்கு?" என்று கேட்டதாகவும் கொள்ளலாம். இவ்வினாக்களில் அவ்வம்மை தசரதனைச் சந்தே

கித்ததாகவோ அவனால் தடை உண்டோ என்று கேட்டதாகவோ கொள்ள ஒரு சிறிதும் இடம் இன்மை காண்க.

எதிர் பாரா விடை

இத்தனை வினாக்களும் சாதாரணமான முறையிலேயே கேட்கப்படுகின்றன. அவள் சற்றும் எதிர் பாராத விடை அவளை இப்பொழுது தாக்குகிறது.

"மங்கை அம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பி, 'நின் காதல் திருமகன்
பங்கம் இல்குணத்து எம்பி பரதனே
தங்க மாமுடி சூடுகின் றான்,' என்றான்,"

(1608)

"இடையூறு ஏதேனும் உண்டோ முடி சூட?" என்ற கேள்வி ஓரளவு பொருத்தம் இல்லாமல் வந்துவிட்டது கோசலையினிடத்து. 'ஏன் முடி சூடவில்லை?' என்று கேட்டிருக்கலாம். அப்பொழுது இராமன், "பரதன் முடி சூடப் போவதால்" என்று விடை கூறியிருப்பான். ஆனால், 'இடையூறு என்ன?' என்று கேட்ட பிறகு "பரதன் முடி சூடப் போகிறான்" என்று இராமன் மொட்டையாகக் கூறி இருப்பின், "பரதன்தான் இடையூறாகக் குறுக்கே நிற்கிறான்," என்றல்லவா பொருள் பட்டுவிடும்? அவ்வாறு கூறுவது இராமனுடைய எண்ணமே அன்று. கோசலை கேள்வியோ, இக்கட்டாய் அமைந்துவிட்டது. எனவே, அக்கேள்விக்கு உரிய விடையைத் தாராமல், இராமன், "நின் காதல் திருமகன்" என்றும், "பங்கம் இல் குணத்து எம்பி" என்றும் பரதனுக்கு அடைமொழி தரத் தேவைப்படுகிறது. இராமனுக்கு முடி சூட்ட இடையூறு நேரும் என்று கோசலை கனவிலும் கருதவில்லை. அவ்வாறு கருதி இருப்பினும், பரதன் காரணமாக இடையூறு ஏற்படும் என்று அவள் கற்பனையிலும் கருத இடம் இல்லை. ஆதலால்தான் இத்தகைய வினாவை அவள் கேட்கிறாள்.

இவ்விடை கோசலையை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. எவ்வளவு ஆவலுடன் அவள் எதிர்பார்த்து நின்றாள் என்பதைச்

சென்ற பாடலிற் கண்டோம். வாழ்நாள் முழுவதும் ஒன்றை எதிர்பார்த்து நிற்க, இறுதியாக அது நடைபெற்றுவிட்டது என்று மகிழ்ந்து நிற்கும் வேளையில் அது தடைபட்டுவிட்டது என்று அறிந்தால், ஒரு தாய்மனம் என்ன பாடுபடும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அவள் எதிர்பார்த்து அஞ்சிய ஒன்று நடந்தேவிட்டது. ஆனால், அஞ்சத் தக்க ஒன்று நடைபெற்றுவிட்டால், உலகில் உள்ள மக்கள் அவரவர்கள் பண்பாட்டிற்கு ஏற்ப மனம் மாறுபடுவார்கள். பண்பாட்டின் முடியாய் விளங்குகிற கோசலை இதனைக் கேட்டுப் பெரு வருத்தம் அடைந்தனளாயினும், அதனைக் காட்டிக் கொள்ள வில்லை. மேலும், அவளால் முற்றிலும் அன்பு செய்யப்பட்டவனே யாவான் பரதனும். இந்நிலையில் அவள் கூறுஞ்சொற்கள் அவள் பண்பாட்டை நமக்கு அறிவுறுத்துகின்றன. இதோ கோசலை பேசுகிறாள்.

“ ‘முறைமை அன்றுஎன்பது ஒன்று உண்டு ; அதல்லது
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனல் ;
குறைவு இலன்,’ எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுஇல் அன்பினில் வேற்றுமை மாற்றினள்.”

(1609)

‘இவ்வாறு செய்வது முறைமை அன்று, என்பது தவிரப் பரதன் உன்னைவிட நல்லவன்,’ என்று கூறினாள் நால்வரிடத்தும் ஒரே வகையான அன்புடைய கோசலை.

இதுவே கவிஞன் கோசலையைப் பற்றிக் கூறும் முடிபு. இவ்வாறு அவளைப் பற்றிச் கூறியது எவ்வளவு பொருத்தமுடையது என்பதை அடுத்து வரும் அவளுடைய சொற்கள் காட்டுகின்றன.

“என்று பின்னரும், ‘மன்னவன் ஏவியது
அன்று எனாமை மகனே! உனக்கு அறம் ;
நன்று நும்பிக்கு நானிலம் நீகொடுத்து
ஒன்றி வாழுதி ஊழி பல,’ என்றாள்.” (1610)

அன்னையின் அறவுரை

"மகனே, உன் தந்தை ஏவியது (அறம்) அன்று என்று எண்ணாமல், இந்நிலத்தை உன் தம்பிக்குத் தந்து நீவிர் நால்வரும் ஒற்றுமையுடன் பல காலம் வாழ்வீர்களாக!" என்று அறவுரை கூறுகிறாள். இப்பாடலின் முதல் அடி கூர்ந்து நோக்கற்குரியது. "மன்னவன் ஏவியது அன்று எனாமை" என்று பாடல் நேரே செல்லவும், உரைகாரர் 'ஏவியது (அறம்) அன்று' என்று ஒரு சொல்லை வருவித்துப் பொருள் கூறியுள்ளனர். இராமன் கூறிய விடையில் "பரதன் முடி சூடப் போகிறான்," என்று கூறினானே தவிர, அவன் முடி சூட ஆணை தந்தது யார் என்பதைக் குறிப்பிடவில்லை. அவ்வாறு இருந்தும், கோசலை கூற்றாய் அமைந்துள்ள இப்பாடல், "அரசன் ஆணை இடாவிடினும்" என்று தொடங்குகிறது. இதனால் ஏற்படும் சிக்கல் பெரியது. மன்னன் ஆணை இது என்பதைக் கோசலை எவ்வாறு உணர்ந்தாள்? இத்துணைப் பெரிய செயலை அரசனை அல்லாமல் வேறு ஒருவரும் செய்ய இயலாது என்று கோசலை ஊகித்துக் கூறியதாக அவர்கள் நினைக்கின்றார்கள் போலும்!

மைந்தனாகிய இராமனை அல்லாமல் தசரதனுக்கு உயிர் வேறு இல்லை என்பதை நன்கு அறிந்த ஒருத்தி உண்டெனில் அவள் கோசலையே. அப்படி இருக்க, மன்னவன் இவ்வாறு துணிந்து கூறி இருப்பான் என்று எவ்வாறு கோசலை முடிவுக்கு வந்தாள்? இராமன் கூறியவுடனே இவ்வாறு பரதனுக்கு முடியைப்பெறத்தரக் கூடியவர் யார் என்பதை அவள் ஊகித்துவிட்டாள். பன்னெடுங்காலம் தசரதனுடன் வாழ்ந்து, அவன் முதற்தேவியாகவும் உள்ள கோசலைக்குத் தசரதனுடைய மனநிலை விளங்காமலா போய்விடும்? 'அவன் எவற்றைக் கூறுவான்? எவற்றைக் கூறத் துணியமாட்டான்?' என்பவற்றை அப் பெண்ணரசி அறிய முடியாதா? இராமன் கூறினவுடனே கோசலைக்கு இவ்வாறு யார்கூறி இருக்க முடியும் என்ற ஊகம் பிறக்க கைகேயியைப் பற்றி முடிவு செய்துவிட்டாள். பெண்களுக்கு இயற்கையாகவே முன்கூட்டி ஒன்றனை அறியும் ஆற்றல் (Intution)

உண்டு என்று கூறுவர். அந்த ஆற்றல் காரணமாகக் கோசலை உண்மையில் ஆணை இட்டவள் கைகேயியே என்பதை ஒரு நொடியில் அறிந்து கொண்டாள் என்றும் கூறலாம். கம்பனுடைய கோசலைக்கு இத்தகைய பண்பாட்டைத்தான் கூற முடியும். ஆனால், வான்மீகரின் கோசலை தசரதனுடன் சேர்ந்து முடியை இராமனுக்குப் பெறச் சூழ்ச்சி செய்கிறாளாகலின், அவள் உண்மை கண்டது வியப்பன்று. ஆனால், கம்பநாடன் கோசலை சூழ்ச்சி செய்ததாகக் கூற இடமே இன்று. எனவே, அவள் அறிவுத் திறத்தாலும், இராமனுடைய சொற்களில் மன்னவன் பெயர் வாராமையாலும், இந்த முடிவுக்கு வந்தாள் என்று கூறுவது பொருத்தமே. தசரதன் நேரே கூறி இருப்பின், இராமன் அதைக் குறிப்பிடாதிருக்க நியாயம் இல்லை. ஆனால், அரசனையல்லாமலும் அவன் பெயரில் ஆணை இட வேண்டுமாயின், அரசன் உரிமை மனைவியாகிய கைகேயி தவிர, யாரால் முடியும்? எனவே, இந்த முறையிலும் அவள் முடிவு செய்தாள் என்றும் கூறலாம். தன் கணவன் வாயால் இவ்வாறு கூறத் துணிய மாட்டான் என்பதைக் கோசலை நன்கு அறிவாள். இக்கருத்து முறையானது என்பதைக் கம்பராமாயணத்தை ஒரு முறை கற்றாரும் நன்கு அறிய முடியும். தசரதன் வாயால் இராமனுக்கு முடி இல்லை என்றோ அவன் வனம் புக வேண்டுமென்றோ ஒரு முறைகூடக் கூறவில்லை. எனவே, அவனைப் பற்றிக் கோசலை கொண்ட கருத்தும் பொருத்தம் உடையதே ஆகும். அரசன் கருத்தை ஏற்றோ ஏற்காமலோ கைகேயி தான் இவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்றும், அதனாற்றான் இராமனும் இது மன்னன் ஆணை என்று கூறவில்லை என்றும் அவ்வறிவுடைப் பெருமகள் கண்டுகொண்டாள். எனவே, மகனுக்கு அறவுரை கூறுமுகமாக, “இது அரசன் ஆணை அன்று என்று ஒதுக்கிவிடாமற் கீழ்ப்படிதல் முறை,” என்று கூறினாள். இதனால் விளைந்த தொல்லையை உணர்ந்த இராமன், அடுத்த பாடலில் விரிவாகக் கூறுகிறான்.

கோசலைக்கு உற்ற பேரிடி

"தாய்உ ரைத்தசொல் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தைஅத் தோமில் குணத்தினான்,
'நாய கன்எனை நல்நெறி உய்ப்பதற்கு
ஏயது உண்டுஓர் பணி,' என்று இயம்பினான்.

" 'ஈண்டு உரைத்த பணி என்னை?' என்றவட்கு,
'யாண்டுஓர் ஏழினொடு ஏழ்அகன் கானிடை
மாண்ட மாதவ ரோடுஉடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டும்என் றான்,' என்றான்."

(1611,1612)

இப்பாடல்கள் ஆய்ந்து கொள்ளற்கு உரியன. முதற்பாடலில் கோசலையின் எண்ணத் தவறுதலை எடுத்துக்காட்டுவான்போன்று, "நாயகன் ஏயது ஒரு பணி உண்டு," என்று கூறிவிடுகிறான். இந்த அளவில் கோசலைக்குத் தன் கணவன்தான் ஏவினான் என்ற எண்ணம் தோற்றுகிறது. இனி இதனை அடுத்து மற்றோர் பணி யாதாக இருக்கும் என்று அவள் கேட்பது அசட்டையோடு கூடி உள்ளது. அவளைப் பொறுத்த வரை இராமனுக்கு முடி இல்லை என்று கூறுவதைக்காட்டிலும் கொடிய செயல் வேறு ஒன்றும் இருத்தற்கில்லை போலும்! எந்தக் கணவன் இவ்வாறு கூறத் துணியமாட்டான் என்று அவள் முழு உறுதியோடு நம்பினாளோ, அந்தக் கணவனே கூறினான் என்று இராமனே கூறிவிட்டமையின், தசரதன் அவளுடைய மதிப்பில் மிகுதியும் இறங்கிவிட்டான். ஆதலாற்றான், "நாயகன் ஏயது ஓர்பணி உண்டு," என்று இராமன் கூறவும் கோசலை சாவதானமாக, "ஈண்டு உரைத்த பணி என்னை?" என்று கேட்கிறாள். அணையப்போகிற விளக்கு மிக்க ஒளியுடன் எரிவது போலப் பெருந்துன்பத்தில் ஆழப்போகிற கோசலைக்கு இப்பொழுது ஒரு வினாடி அமைதி கிட்டுகிறது. இராமனுக்கு முடி இல்லை என்ற செய்தியால் தாக்குண்ட அவளுக்கு இன்னும் அச்செய்தியின் முழு ஆற்றலும் நன்கு விளங்கவில்லை.

மனத்திற்குப் பெரிதும் அதிர்ச்சியைத் தரும் செய்தியைக் கேட்டால் உடனே அது முற்றிலும் விளங்குவதில்லை. சிறிது நேரம் சென்ற பிறகுதான் செய்தியின் கருத்து நன்கு விளங்கும். இந்த இடைப்பட்ட நேரத்தில் ஒரு வகை அமைதி குடி கொண்டிருக்கும். அத்தகைய அமைதியிலேதான் இப்பொழுது கோசலை இருக்கிறாள். இரண்டாம் பாடலின் பின் இரண்டு அடிகள், அவள் வாழ்வையும் உயிரையும் குலைக்கப் போகிற நிகழ்ச்சியைக் கூறுபவை. என்றாலும், பண்பாட்டின் முடி என விளங்கும் இராமன் எவ்வளவு அந் நிகழ்ச்சியின் கொடுமையைக் குறைக்க முடியுமோ, அவ்வளவு குறைக்கிறான். வனம் புகுந்து வாழ வேண்டிய கால எல்லை இன்றி யமையாததாகலின், அந்த அளவைக் குறைப்பதுபோலக் கூறுகிறான். பதினான்கு ஆண்டுகள் என்று கூறி அவள் மனத்தை அதிர அடிக்காமல் "ஏழினொடேழு" என்று கூறுவது கோசலை யினது தாயுள்ளத்தின் மென்மை கருதியே. 'புண்ணிய நதிகளாடி வரப் போகிறேன்,' என்று காடு சென்று வருவதற்கு இராமன் கூறிய காரணமும் இது கருதியேயாகும்.

தசரதனின் நிலை

இச்சொற்கள் காதிற்பட்டவுடன் அத்தாய் "ஏங்கினாள், இளைத்தாள், திகைத்தாள், மனம் வீங்கினாள், விம்பினாள், விழுந்தாள்," (1613) என்று கூறப்பெறுகிறது. உள்ளே அடைக்கும் இவ்வுணர்ச்சி வெளிப்பட்ட பின் அவள் பேசுகிறாள்.

"வஞ்ச மோமக னே!உனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்குஎன்ற வாசகம்?
நஞ்ச மோ?இனி நானுயிர் வாழ்வெனோ?
அஞ்சும் அஞ்சும்என் ஆருயிர் அஞ்சுமால்!"

(நகர்1614)

இம்முறை வாய் திறந்தவுடன் கோசலை தசரதனைப் பற்றித் தான் நினைக்கிறாள். அவள் தன் கணவனைப் பற்றி இதுவரை நினைக்கவும் துணியாதவற்றை இப்பொழுது வாயாற் கூறுகிறாள்.

தசரதன் இராமன்மேற்கொண்ட அன்புகூடப் பொய்யோ என்ற ஐயம் அவள் மனத்தில் தோன்றுகிறது. முதல்நாள் அவனாகக் கூப்பிட்டு 'இவ்வரசை நீ ஏற்றுக்கொள்,' என்று ஏன் கூறவேண்டும்? இன்று, 'உடனே நீ காடு செல்,' என்று ஏன் கூறவேண்டும்? கோசலைக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தசரதனுடைய நல்லெண்ணத்திற்கூட ஐயம் தோன்றிவிட்டது அத்தாய்க்கு. தான் பெற்ற பிள்ளைக்கே வஞ்சம் இழைத்துவிட்டானோ தந்தை என்று கேட்கிறாள். இராமனைக் காடு அனுப்ப ஒரு காரணம் வேண்டித்தான் 'முடி தருகிறேன்,' என்று கூறினானா? தசரதன் உண்மை நிலையை அவள் எவ்வாறு அறிய முடியும்? மகனே தந்தையின் ஆணை என்று கூறிய பிறகு அதில் ஐயங்கொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏது? எவ்வளவு ஆராய்ந்தாலும் மன்னவன் செயலுக்குக் காரணம் காண முடியவில்லை அக்காரிகையால். இராமன் அருங்குண விசேடத்தை நன்கு அறிந்திருந்தும், அவன் தவறு என்பதைக் கனவிலும் கருதாதவன் என்பதை நன்கு அறிந்திருந்தும், "அன்பு இழைத்த மனத்து அரசற்கு நீ என் பிழைத்தது?" (1617) (உன்பால் கழி பெருங்காதல் உடைய அரசனுக்கு நீ யாது பிழை செய்தாய் மகனே) என்று கூடக் கேட்டுவிடுகிறாள் கோசலை. இவ்வஞ்சத்தக்க நிகழ்ச்சி நடைபெற யார் காரணம் என்பதை நினைத்துப் பார்க்கிறாள் கோசலை. தசரதன் இராமன்மேற்கொண்டுள்ள அன்பையும் அவள் அறிவாள் ; இராமன் தவறு இழைக்காதவன் என்பதையும் நன்கு அறிவாள். எனவே, முதலில் அரசன் செய்தது வஞ்சமோ என்று கோசலை அதனை ஒத்துக்கொள்ள மறுத்து, 'மகனே, தவறு இழைத் தாயோ?' என்று வெம்புகிறாள். தசரதன் இராமன்மேல் கொண்டுள்ள காதலை நன்கு அறிவாள் ஆகலின், தசரதன் வாயால் இவ்வாறு கூறி யிருக்கமாட்டான் என்றே கருதுகிறாள். ஆனால், அரசனே கூறினான் என்பது ஐயமறத் தெரிந்துவிட்டது. எனவே, அவன் அவ்வாறு கூறக் காரணத்தை ஆராய்கிறது தாய் மனம். ஒரு வேளை மகன்தான் பொறுத்தற்கு அரிய பிழையைச் செய்துவிட்டானோ

என்றும் கேட்கிறாள். இராமனோ தந்தைக்குத் தவறு இழைப்பவன்? இவ்வாறு நினைக்கக்கூட அவள் மனம் வெதும்புகிறது. ஆனாலும், வேறு வழி இல்லை. எனவே, 'புவிக்கெலாம் வேதமேயன இராமனை'ப் பார்த்து, 'நீ தவறு இழைத்தாயோ?' என்று கேட்கிறாள்.

அறக் கடவுளின் துணை வேண்டல்

இதனை அடுத்து மகன் தவறு செய்யாதவன் என்ற எண்ணமும் மீதூர, அத்தாய் பிறர்மேல் குற்றம் காணவியலாமல், அறக் கடவுளை நோக்கித் துணை வேண்டுகிறாள். "'அறம் எனக்கு இல்லையோ?' என்னும்; 'ஆவிநைந்து இறவு அடுத்தது என் தெய்வதங்காள்!' என்னும்." (1618) ("அறக் கடவுளே, நீயாவது எனக்குத் துணையாக இருக்கமாட்டாயா? தெய்வங்களே, இவ்வளவு தீவினை என்னை வந்து அடுப்பதற்கு யான் என்ன தவறு இழைத்தேன்?" என்று அலமருகிறாள்). இவ்வாறு கூறி அத்தாய் மயக்கமுற்றுக் கீழே விழ, உடனே இராமன் அவளைக் கையில் தாங்கிக் கொண்டான். இடர்க்கடலில் வீழ்ந்து நையும் தாயை நோக்கி இராமன் கூறும் சொற்கள் ஆய்தற்குரியன.

"இத்தி றத்தின் இடர்உறு வாள்தனைக்
கைத்த லத்தின் எடுத்து, அருங் கற்பினோய்!
பொய்த்தி றத்தினன் ஆக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீ'எனும்" (1619)

இந்த நிலையில் இடர் உற்ற தாயைக் கைகளால் எடுத்து, 'அரிய கற்பினை உடையவளே, மெய்ம்மை கூறும் மன்னனைப் பொய் பேசுபவனாக்கப் போகிறாயா?' என்றான்.

மைந்தன் அறவுரை

'அவசமுற்ற நிலையில் உள்ள தாயை அமைதி கூறிச் சாந்தப்படுத்த வேண்டிய இராமன் இவ்வாறு கூறலாமா?' என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது. 'மெய்ம்மைக்கு உறைவிடமான நம் மன்னனை நீ பொய்யுடையவன் ஆக்குவது முறையோ?' என்று

இராமன் கூறக் காரணம் யாது? இப்பாடலின் நான்காம் அடியில் அதற்கு விடை கூறுகிறான் கவிஞன். இராமனைப் பொறுத்த வரை தசரதன் தந்தையாவான்; கோசலையைப் பொறுத்த வரை கணவனாவான். எனவே, இவ்விருவரும் அவனிடம் மன்றாடித்தாம் வேண்டியவற்றைப் பெறுதல் முறை. ஆனால், இவை அனைத்தினும் மேலாக அவன் மன்னன் என்ற முறையில் உண்மை ஒன்றுக்கே கட்டுப்பட வேண்டுமே தவிர, மனைவி மகன் போன்ற உரிமை இங்குப் பாராட்டப்பட நியாயமில்லை. தசரதன், மகன்மேற்கொண்ட காதலால் தவறு இழைத்தாலும், உலகம் மன்னன் தவறு இழைத்த தாகவே தூற்றும். தன் தந்தை மகன் மேற்கொண்ட காதலால் குலத்துக்கே பழி தேட எந்த மைந்தன் தான் விரும்புவான்? ஒரு வேளை தாய் தன்னுடைய பெண்மையாலும், மகன்மேற்கொண்ட காதலாலும் அதனை மறந்துவிடப் போகிறாளோ என்று அஞ்சிய மைந்தன், அக்கடமையை அவட்கு நினைவூட்டுவான் போல, 'நம் வேந்தனை' என்று குறிப்பிடுகிறான். அன்றியும், இராமன் அவளைத் 'தாயே' என்று விளிக்காமல், 'அருங்கற்பினோய்,' என்று விளிப்பதிலும் ஒரு கருத்து அடங்கியுள்ளது. 'கணவனுக்குத் துணையாய் நின்று கடமையை நிறைவேற்றுவதா? மகன் மாட்டுக்கொண்ட காதலால் கணவனுக்கு விரோதமானவற்றைச் செய்வதா?' என்ற தரும சங்கடமான நிலையில் நிற்கிறாள் கோசலை. இந்த நிலையில் அவளது கடமை முதலில் கணவனுக்குப் பிறகே மகனுக்கும் என்பதை நினைவூட்டுகிறான் கடமையைப் போற்றத்தோன்றிய வள்ளலாகிய இராமன். 'கற்பைக் காப்பது கணவன் பக்கம் நிற்றலே,' என்பதை 'அருங்கற்பினோய்,' என்ற விளியால் அவளுக்கு அறிவுறுத்தி விட்டான். இவ்வாறு கோசலையின் கடமையை நினைவூட்டிய பிறகு மிக அமைதியாகவும் அழகாகவும் சொல்ல வேண்டியவற்றை அவள் மனத்திற்பதியும்படிக் கூறினானாம். அவ்வாறு அவன் யாது கூறினான்? "சிறந்த தம்பி திருவுற, எந்தையை மறந்தும் பொய்யிலன் ஆக்கிப் பின் மீள்வன்," என்பதே அவன் கூறிய வாசகம். மகன்

பதினான்கு ஆண்டுகள் வனத்திடை வாழப்போகிறான் என்பதையும் அதனைத் தடுக்கத் தனக்கு வன்மை இல்லை என்பதையும் உணர்ந்துகொண்ட அத்தாய் மனம், வேறு வழி இன்றி எஞ்சியுள்ள ஒரே முடிவைச் செய்யத் துணிந்துவிட்டது. இராமனைத் தன்பால் நிறுத்திக் கொள்ள இயலவில்லையாயின், தான் இராமனுடன் சென்று விடலாம் அன்றோ?

" 'சாக லாஉயிர் தாங்கவல் லேனையும்
போகில் நின்னெடும் கொண்டனை
போஎ'ன்றாள்." (1623)

தாய் மனம் செய்த இந்த முடிவை மகன் ஏற்றுக்கொள்ள முடியுமா? எத்துணைச் சிறந்த தலையாய தாயன்பே ஆயினும், கணவன் உயிருடன் இருக்கின்ற வரை அவனுக்குச் செய்ய வேண்டிய கடமையின் பின்னே வர வேண்டுவது அன்றோ அத்தாயன்பு? எனவே, சிறந்த பண்புடையவனாகிய இராமன், அதனை இப்பொழுது நினைவூட்டுகிறான்.

" 'என்னை நீங்கி இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுஉடன்
துன்னு கானம் படரத் துணிவதே?
அன்னை! நீஅறம் பார்க்கிலை ஆம்,' என்றான்."

" வரிவில் எம்பிஇம் மண்அர சாய்அவற்கு
உரிமை மாநிலம் உற்றபின் கொற்றவன்
திருவில் நீங்கித் தவம்செயும் நாளுடன்
அருமை நோன்புகள் ஆற்றுதி யாம்அன்றே?"
(1624,1625)

எது வரினும், எது போகினும் கணவனுடைய நலம் தீங்குகளிற் பங்குகொள்ள வேண்டிய கடமையே ஒரு பெண்ணுக்கு முதன்மை யானது என்பதை இராமன் தன் அருமைத் தாய்க்கு நினைவூட்டு கிறான். இராமன் வேண்டுகோளின் உண்மையை உணர்ந்த கோசலை அதனை மறுக்கவும் மாட்டாமல், ஏற்றுக் கொள்ளவும்

மாட்டாமல் திகைப்பெய்திவிட்டாள்! இத்திகைப்பைக் கண்ணுற்ற இராமன், "சித்தம் நீ திகைக்கின்றது என்?" என்றும், "பதினான்கு ஆண்டுகளும் பதினான்கு பகல்கள் தாமே?" என்றும் கூறி, அப் பிரிவின் கொடுமையைக் குறைக்க முயல்கிறான். அப்பதினான்கு ஆண்டுகளிலும் தான் வனத்திடைத் தங்கி அரிய தவங்கள் செய்து, முனிவர்களுடைய நட்பையும் ஆசியையும் பெற்று வரப்போவதாகவும் அவன் கூறுகிறான். இவ்வாறு கூற ஒரு காரணம் உண்டு. எந்தத் தாய்தான் தன் மகன் பெறப்போகும் நற்பேறுகளை வேண்டா என்று மறுப்பவள்? மகன் நல்ல நிலை அடைய அதனால் சிறிது தனக்குத் துன்பம் வரினும் தாய் அதனை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளத்தானே செய்வாள்? சிறந்த தாயிடம் காணப்படும் இவ்விலக்கணத்திற்குக் கோசலை மட்டும் விலக்காமாறு எங்ஙனம்?

அறவழி வாழ்க்கை

அறம் மிகவும் கடுமையானது. அதனைக் கடைப்பிடிப்பவர் இன்பமாக வாழ்வது கடினம். அடுத்த உலகில் அவர்கள் பெறப் போகும் பயனைக் கருதி இவ்வுலகில் வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள உறுதி பூண்டவர்களே அறத்தை விடாமல் இறுதி வரை கடைப்பிடிக்க முடியும்.

அறத்தைப் போற்றுபவர் இரு வகையினர். ஒரு வகையார், மறு உலகத்தில் பெறப்போகும் பயன் கருதியே இவ்வுலகத்தில் அதனை ஏற்று வாழ்கின்றனர். இவர்களும் ஒருவகையில் வணிகர்களே.

இன்னும் ஒரு வகையார் இவ்வாறு பயன் கருதி அறவழி நடப்பதில்லை. அறத்தை, அறத்துக்காகவே மேற்கொள்பவர்கள் இவர்கள். இவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாயினும், உலகிற்கு உயிர் போன்றவர்கள் இவர்களே.

இராமன் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவன். அவன் அறவழி நடக்கையில் விருப்பு வெறுப்புகட்கு ஆளாகவில்லை.

அவனுக்கு மிக வேண்டியவர்களும், வேண்டாதவர்களும் ஒன்றாகவே கருதப்படுகின்றார்கள். தசரதன், கோசலை என்பாரிடம் கொண்டிருந்த அன்பு காரணமாகவும் அவன் கடமை பிழைத்து விடவில்லை. இராவணன் மாட்டுக் கொண்ட பகைமை காரணமாகவும் அவன் கடமை பிறழவில்லை. தசரதன் இறந்துவிடுவான் என்பதை அறிந்திருந்தும், இராமன் காடு சென்றுவிட்டான்; இராவணன் தீமையை அறிந்திருந்தும், அங்கதனைத் தூதாக அனுப்பினான்; முதல் நாட்போரில் அவனுக்கு உயிர்ப்பிச்சை நல்கி, மறுநாள் வருமாறு ஏவினான். உண்மை அறத்தை அறிந்து அதனை அவ்வறத்தின்மேற் கொண்ட காதலால் கடைப்பிடிப்பவர்கட்கு ஈடில்லை.

இராமனை அறியாதவர்

இராமனுடைய இந்த ஒப்புயர்வு அற்ற பண்பாட்டை அவனுடைய தாய் தந்தையரே முற்றிலும் அறிந்துகொள்ளவில்லை என்று நினைய வேண்டி உளது. அல்லாவிடில், இறுதி வரை அவனைக் காடு செல்லாமல் மீட்டுவிடத் தசரதன் ஏன் முயல்கிறான்? தன்மேல் பழி வாராமல் வசிட்டன் எவ்வாறேனும் அவனை அழைத்து வர வேண்டும் என்று ஏன் கூறுகிறான்? இவன் ஒரு புறம் இருக்க, பெற்றெடுத்த தாயாகிய கோசலைகூட இராமனை முற்றிலும் அறிந்து கொள்ளவில்லை. அறிவால் சிறந்த கோசலை இதனை அறியவில்லை என்றால், அதற்குக் காரணம் அவளுடைய தாயன்பே தவிர, வேறு ஒன்றும் இருத்தற்கில்லை.

"இவன்இஞ் ஞாலம் இறந்துஇருங் கானிடைத்
தவம்நி லாவகை காப்பன் தகைவுஇலாப்
புவனி நாதன் தொழுது." (1632)

என்று முடிவு செய்துகொண்டு போகிறாள் அத்தாய்.

இந்த முடிவுடன் கோசலை தன் கணவன் இருக்கும் கைகேயி கோயிலுக்குச் செல்கிறாள். கைகேயி அரண்மனைக்குப் புறப்பட்டுச் செல்கையில் கோசலையின் மனத்தில் தசரதனைப் பற்றிய மிகத்

தவறான எண்ணமே நிறைந்திருந்தது. பிறர் சூழ்ச்சிக்கு அவன் பலியாகிவிட்டான் என்பதை அறியாத அந்தப் பேதை, அவனை ஒரு பெரிய சூழ்ச்சிக்காரன் என்றே மதித்துவிட்டாள். "தகைவு இலாப் புவனி நாதன்" என்று அவள் கூறும் பொழுது தசரதனைப் பற்றி அவள் கொண்டிருந்த எண்ணம் புலனாகிறது. இவ்வாறு தசரதனைப் பற்றி அவள் தவறாக நினைக்கத்தக்க காரணமும் உண்டு. சூழ்ச்சியின் அடிப்படை கைகேயியினிடம் தொடங்கிற்று என்று முழுவதும் நம்பி இருந்த அவளை இராமனுடைய சொற்கள் மனமாற்றம் கொள்ளச் செய்தன. ஆனாலும், தசரதன் வேண்டா வெறுப்புடன் வேறு வழி இன்மையாலேதான் இவ்வாறு கூறினான் என்பதைக் கோசலைக்கு அவன் கூறவில்லை அல்லவா? மேலும், இராமனுக்கே அதுபற்றி உறுதியாக ஒன்றுந் தெரியாது. ஆதலாலே தான் கோசலை தசரதனைப் பற்றிய தவறான எண்ணத்துடன் கைகேயியின் அரண்மனை புகுந்தாள். ஆனால், அங்கு அவள் சற்றும் எதிர்பாராத காட்சி கிட்டுகிறது. கணவன் அவசமுற்றுப் பார்மிசை வீழ்ந்து கிடக்கும் நிலையைக் காண்கிறாள். "உயிர் உடைந்த போது உடல் வீழ்ந்ததென்ன" (1634) அவளும் அவன் மேல் வீழ்ந்து அரற்றுகிறாள். அப்பெருமாட்டி அரற்றுவதாக அமைந்த நான்கு பாடல்களிலும் அவளைப் பற்றி நாம் மிகுதியாக அறிய முடிகிறது. பன்னெடு நாட்களாகவே தசரதன் கைகேயிடத்துக் கழி பெருங்காதல் கொண்டு அவளிடமே தங்கிவிட்டாலும், கோசலைக்கு அவன்மாட்டு இருந்த காதல் சற்றுங் குறையவில்லை என்பதை இப் பாடல்கள் அறிவுறுத்துகின்றன. "பிறியார் பிரிவு ஏது என்னும்", "தமியேன் வலியே என்னும்" (1635) இவ்வாறு புலம்பும் அவள் அன்பின் ஆழத்தை இதோ ஒரு பாடல் தெரிவிக்கிறது.

"'திரையார் கடல்சூழ் உலகின் தவமே! திருவின்
திருவே!
நிரையார் கலையின் கடலே! நெறியார் மறையின்
நிலையே!

கரையா அயர்வேன் எனைநீ கருணா லயனே!
என்என்று
உரையா இதுதான் அழகோ? உலகுஏ முடையாய்!'
என்னும்."
(1637)

இதற்கு முன் உள்ள பாடல் தசரதன் மாட்டு அவள் கொண்டிருந்த பெருமதிப்பையும் காட்டுகிறது. "உலகம் பொருள் அற்றிட அருளக் கருதிற்று!" என்ற அடியால் தசரதன் இறந்து பட்டால் உலகம் பிரளயம் வந்து அழிந்தது போலக் கலங்கிவிடுமே என்று கலங்குகிறாள். ஏனைய மன்னர்களைப்போலத் தன் கணவனும் ஒருவனே என்று நினையாமல், இவ்வாறு கூறுவதால், அவனிடம் அவள் கொண்டிருந்த பெருமதிப்பே வெளியாகிறது. அடுத்து இதன் காரணத்தை இன்னும் முற்றும் அறிந்து கொள்ளக் கூடாமையின், "மன்னன் தகைமை காண வாராய் மகனே!" என்னும் கோசலையின் இந்தப் பெருந்துயரம் வசிட்டன் வரை எட்டி, அவனும் அங்கு வந்துவிட்டான்.

தசரதன் அவசமுற்ற நிலையில் அரற்றும் பொழுது கோசலைக்கு ஒரு புதிய நினைவு வருகிறது. 'மாற்றாளே இந்தத் துயரைச் செய்தாள்,' (1656) என்பதை உடன் அறிந்து கொண்டாள். ஆனால், இராமன் இதுபற்றி ஒன்றும் அறியாமல் அரசன் தானாகவே இவ்வாறு செய்துவிட்டான் என்று நம்பித்தானே தன்னிடம் கூறினான்? எனவே, இராமனை இப்பொழுது 'வாராய்' என அழைக்கிறாள். தன் கணவன் ஒரு நாளும் இம்மாதிரி தானே வேண்டுமென்று செய்திருக்கமாட்டான் என்ற அவளுடைய எண்ணம் உண்மையாகிவிட்டது. எனவே, தன் கணவனைப்பற்றித் தவறான எண்ணங்கொண்டுள்ள மகனுடைய மன நிலையை மாற்ற வேண்டும் என்று கருதியதால், "மன்னன் தகைமை காண வாராய் மகனே," (1638) என்று ஓலமிடுகிறாள்.

வசிட்ட முனிவன் வந்து உபசரித்த பின்னரே தசரதன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். அம் முனிவனும் மன்னனும் தனித் தனியே வேண்டியும், கைகேயி சற்றும் இணங்க மறுத்துவிட்டாள். இம்மூவரும் பேசிக்கொண்டதைக் கேட்ட பிறகுதான் கோசலை மனத்தை அழுத்திக்கொண்டிருந்த பெரும்பாரம் குறையலாயிற்று. கணவனே இராமனைக் காட்டுக்கு அனுப்பக் காரணமாய் இருந் தானோ என்று அவள் மனத்தில் ஒரு மூலையில் தோன்றிய ஐயம் இப்பொழுது முற்றிலும் நீங்கிவிட்டது.

"மாற்றாள் செயலாம் என்றும்
கணவன் வரம்ஈந்து உள்ளம்
ஆற்றாது அயர்ந்தான் என்றும்
அறிந்தாள் அவளும் மனத்தைத்
தேற்றா நின்றாள்; மகனைத்
திரிவாய் என்றாள் அரசன்
தோற்றான் மெய்என்று உலகம்
சொல்லும் பழிக்குச் சோர்வாள்."

(1656)

இராமன் காடு செல்ல நேரிட்டமைக்கு முற்றிலும் பொறுப்பாளி தன் மாற்றாளாய கைகேயியே என்பதைத் தெரிந்துகொண்ட கோசலை, ஒரு நல்ல செயலைச் செய்ய முனைந்தாள். பெண்ணாய்ப் பிறந்த அவளுக்கே மற்றொரு பெண்ணின் மன நிலையைக் காண முடியும். எனவே, அவள் முனிவனைப் போலத் தானும் கைகேயியை நோக்கி வேண்டவில்லை. இறுதி வரை இராமனைப் பெற்ற தாயாகிய அவள், கைகேயியை நோக்கி ஒரு சொல்லைக்கூடச் சொல்லாதது சற்று வியப்பையே தருகிறது. உலகம் முழுவதும் அஞ்சி மரியாதை செய்யும் வசிட்ட முனிக்கும், காதற்கணவனுக்கும், இரக்கம் காட்டாத கைகேயி, மாற்றாளாய தன் சொல்லுக்கு உறுதியாகச் செவி சாய்க்க மாட்டாள் என்பது கோசலைக்கு நன்கு தெரியும். எனவே, சொல்லி

வாய் இழப்பதைக் காட்டிலும், சொல்லாமலே தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிறாள் அப்பெண்ணரசி. இராமன் பிரிவால் தசரதனைக் காட்டிலும் வருந்தப் போகிறவள் கோசலைதான் எனி னும், பெண் குலத்துக்கே உரிய முறையில் தன் பிள்ளைப் பாசத்தையும் அன்பையும் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு இப்பொழுது கடமையை மேற்கொள்கிறாள் கோசலை. தன்னைக் காத்துக்கொள்ளுதலின் அடுத்த படியிலே நிற்கின்ற கடமை தன் கொண்டானைப் பேணுதல் அன்றோ?

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

(குறள்.56)

இதோ தசரதனுக்கு அறிவுரை கூறத் தொடங்கி விட்டாள் கோசலை.

கோசலையின் அறிவுரை

"அரசரே, தள்ளத் தகாத பெருமையுடை வாய்மையை ஏற்றுக் கொண்டு அதன் வழி நிற்கும் பொழுது மகன்மேல் அன்பு கொண்டு இருத்தல் உம் பெருமைக்கு இழிவு தருமானால், அதனை உலகம் ஏற்றுக்கொள்ளுமா?" என்ற கருத்து அமைய,

" 'தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா வழுவா
வகைநின்று
எள்ளா நிலைகூர் பெருமைக்கு இழிவாம் என்றால்
உரவோய்
விள்ளா நிலைசேர் அன்பால் மகன்மேல் மெலியின்
உலகம்
கொள்ளாது அன்றோ?' என்றாள் கணவன் குறையக்
குறைவாள்." (1657)

என்று வரும் பாடல் ஆய்ந்து நோக்கற்கு உரியது.

தரும சங்கடம்

"சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்." (குறள்.664)

என்ற முதுமொழி யாண்டும் பொய் ஆவதில்லை அல்லவா? கணவன் இத்தனை காலம் வாழ்ந்து விட்டு இறக்கப்போகும் தறுவாயில் 'சொல்லைக் காப்பாற்றாதவன்' என்ற பெயருடன் இறப்பதை அவள் விரும்பவில்லை. அவனைச் 'சொல் தவறியவன்' என்ற பழியிலிருந்து காக்க வேண்டுமாயின், அதற்கென அவள் செய்ய வேண்டிய தியாகம் எத்துணைப் பெரிது! தான் பெற்ற ஒரே மகனை இழப்பது தான் அந்தத் தியாகம். ஊரில் வாழும் மாந்தர் போல் அனைவருங்கூட, "உய்யாள் கோசலை என்று ஓயாது வெய்துயிர்ப்பார்" (1709) என்றால், பெற்ற தாயின் துயரைப் பேசவும் வேண்டுமோ! எனவே, கணவனை நோக்கி, "வருந்த வேண்டா," என்று கூறிய கோசலை, தரும சங்கடம் என்று கூறப்பெறும் இடர்ப்பாட்டில் சிக்கிக் கொள் கிறாள். அறம் எத்துணைக் கொடிது என்பதை முன்னர்த் தசரதன் அறிந்தது போல இப்பொழுது இத்தாய் அறியத் தொடங்கிவிட்டாள். ஒரு புறம் கணவனும் அவனுடைய புகழும் ; மற்றொரு புறம் காதல் மைந்தன். இருவருக்கும் நன்மை தேடத் தன் உயிர் தேவைப்படின், அதனை அவள் விருப்பத்தோடும் தருவாள். ஆனால், இப் பொழுதைய நிலையில் யாரானும் ஒருவரைத் துறந்துதான் மற்றவரை அடைய வேண்டும். யாரை விட்டு யாரை வேண்டுவது? கற்புடை யவள் என்ற முறையில் கணவன் நலம் பெற்றால் சரி என்று நினைப்பதா, பெற்ற தாய் என்ற முறையில் மைந்தன் நலம் பெற்றால் சரி என்று நினைப்பதா? கோசலையின் நிலை மிக இரங்கத் தக்க தாகிறது! கோசலை யாராவது ஒருவரைக் காத்தலே முறை என்று மற்றொருவரைத் தியாகம் செய்ய முடிவு செய்வதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுதும் அவள் எண்ணம் முற்றுப் பெறும் என்று கூறுவதற்கில்லை. இவற்றின் இடையே நாம் சற்றும் எதிர்பாராத ஒரு

நிலை வருதலும் கூடுமன்றோ? இராமனும் தந்தை கட்டளையை மீறக் கூடாது என்ற கருத்தில் அடவி சென்றுவிடலாம். இராமனுடைய பிரிவுத் துயரம் தாங்காத தசரதன் இறந்துபடவும் கூடும். "வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பும் இழந்தது போல" என்பது பழமொழி. வாயில் தவிட்டை வைத்துக் கொண்டு அடுப்பில் ஊதும் போது தவிடு படுவதால் நெருப்பும் அவிய, தவிடும் போய்விடும் என்பது போல இராமனையும் உயிருடன் இழந்து தசரதனையும் இழக்கும் நிலை ஏற்படலாம். அத்தகைய கொடுமையைக் கோசலை நினைக்கவும் அஞ்சுகிறாள். ஆனால், அந்த நிலை வந்தே தீரும் என்று தோன்று கிறது அவளுக்கு. சில சமயங்களில் சில நினைவுகளை மனத்தால் நினைக்கவும் அஞ்சுகிறோம்; ஆனால், அந்நினைவுகளை அகற்றவும் முடிவதில்லை. நினைப்பதும் பெருந்துன்பம்; நினையாதிருப்பதும் இயலாக் காரியம். இது போன்ற ஒரு நிலை கோசலைக்கு உண்டா வதைக் கவிஞன் இதோ கூறுகிறான். 'மகன் போகாமல் இருக்கப் போவதுமில்லை; கணவன் இறவாமல் இருக்கப் போவதுமில்லை.' இவ்விரண்டு எண்ணங்களாலும் அலைப்புற்றாள்; கணவன் புகழ் அழிந்துவிடுமோ என்று அதற்கு அஞ்சிக்கொண்டு நின்றாள்.

"போகாது ஒழியான் என்றாள் புதல்வன் தன்னை ;
கணவன்
சாவாது ஒழியான் என்றென்று உள்ளம் தளர்வுற்று
அயர்வாள்;
காவாய் என்றாள் மகனை ; கணவன் புகழுக்கு
அழிவாள் ;
ஆவா! உயர்கோ சலையாம் அன்னம் என் உற்
றனளே!" (1658)

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர் அனைவர்க்கும் இன்பம் துன்பம் என்ற இரண்டும் மாறி மாறி வருதல் உண்டு. பல சமயங்களில் கடமையை நிறைவேற்ற வேண்டுமானால் அது கசப்பாய் இருக்கும். ஆனால், கடமையை நிறைவேற்றிவிட்டோம் என்ற

மகிழ்ச்சி அதன் பயனாய் இருக்கும். கடமையை நிறைவேற்றும் இயல்பு அனைவர்க்கும் அமைந்து விடுவதொன்று அன்று. அவ்வாறு நிறைவேற்ற வேண்டிய இன்றியமையாமை ஏற்படும் பொழுது 'தரும சங்கடம்' என்ற நிலை வந்துவிடுமாயின், அது இன்னும் வருந்தத் தக்கதேயாகும். தருமசங்கடம் என்பது, இரண்டும் கடமை போலத் தோன்றுகிற நிலைதான். இரண்டில் யாதானும் ஒன்றை நிறைவேற்றப் புகுந்தால், மற்றொன்றுக்குத் தீமையாய், முடியும். இதுவே தருமசங்கடம் எனப்படும். இத்தருமசங்கட நிலையில் எதனை மேற்கொள்வது, எதனை விடுவது என்ற தொல்லை ஏற்பட்டுவிடும்; எந்த முடிவுக்கும் வரமுடியாமல் திண்டாட நேரிடும். கோசலையின் நிலையும் இத்தகையதே. இதனை நினைத்துத்தான் ஆசிரியன், "ஆவா! உயர்கோ சலையாம் அன்னம்என் உற்றனள்!" என்று வருந்திக் கூறுகிறான். இத்தகைய தரும சங்கடம் ஏற்பட்டாலும், தன் தாயன்பை உள்ளே இருத்திக்கொண்டு கணவனுக்குரிய கடமையில் அவள் நின்றது போற்றற்குரிய பண்பாகும். அதிலும் அக்கணவன் தன் மாற்றாளாய கைகேயியின்பால் கழிபெருங்காதல் பூண்டு அவ்வன்பின் மிகுதியால் இந்த இடரை அடைந்தான் என்று அறிந்த நிலையிலும் அவள் தன் கடமையைச் செய்தாள் என்றால், தலையாய கற்புடையவள் என்று அவளைக் கூறுதல் முற்றிலும் பொருத்தம் உடையதே.

இறுதி முயற்சி

இதனை அடுத்த நிலையில் வசிட்டன் சொல்லைக் கேட்ட மன்னவன், இராமன் ஒரு வேளை வருவான் என்று நினைத்திருந்த எண்ணம் பொய்யாகிவிட, மீட்டும் மயக்கம் அடைந்துவிட்டான். அவன் மயக்கத்தைக் கண்ட கோசலை, "இறந்தான்கொல்லோ அரசன்!" என்னா இடர் உற்று அழிவாள், மீட்டும் மன்னவனைத் தேற்ற வேண்டும் என்ற உறுதி பூண்டவளாய்த் தன் மனம் நம்பாத ஒன்றைப் பேசுகிறாள். இராமன் உறுதியாக வர மாட்டான் என்பதை நன்கு அறிந்திருந்தும், "முனிவன் உடன் நம் ஐயன் வரினும் வருமால் அயரேல் அரசே!" (1674) என்று கூறுகிறாள்.

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்." (குறள். 292)

என்ற குறளை வாழ்க்கையில் செய்து காட்டுகிறாள் அப்பெண்ணரசி. வாராத இராமனை வந்தாலும் வருவான் என்று கூறுவது பொய்யே யாயினும், அதனால் கணவனுடைய துயரத்தை ஓரளவு குறைக்க முற்படும் அக்கற்புடைய மங்கையின் திண்மையை என்னென்று போற்றுவது! எவ்வாறாயினும் கணவனுடைய உயிரை இழுத்துப் பிடிக்க முயலும் கோசலையின் பெருமுயற்சியைக் கண்டு நாம் வியவாமல் இருக்க முடியாது. அவள் செய்யும் முயற்சியின் அடிப்படை யில் எத்துணைப் பெரிய தியாகம் மறைந்து கிடக்கிறது என்பதையும் அறிதல் வேண்டும்.

அரசனுக்கு அமைதி கூறும் ஒவ்வொரு வினாடியிலும் அவளிடத்தே அடங்கியுள்ள தாயன்பு வாள்கொண்டு அவள் மனத் தைப் பிளக்கிறது. அதனைத் தாய்க்கே உரிய மனநிலையில் பொறுத்துக் கொண்டு அவள் கணவனுக்குத் தேறுதல் கூறுகிறாள். பழைய கிரேக்கக் கதைகளில் வரும் தாய்மார்கள் கடமையை நிறைவேற்ற வேண்டி மகன் அன்பைத் துறத்தல் போலக் கோசலையும் செய்கிறாள்; எனவே, இலக்கியத்திலும் அதன் மூலம் நம் மனத்திலும் அழியா இடம் பெற்றுவிடுகிறாள்.

கோசலையால் மனம் தேற்றப்பெற்ற மன்னவன், அவளுக்குப் பழைய வரலாறு ஒன்றைக் கூறுமுகமாக ஓர் உண்மையை வெளி யிடுகிறான் : 'புத்திர சோகம்' என்ற மைந்தரால் வரும் துன்பத்திற்குத் தான் பலியாகி உயிர்விடப் போவதை அறிவிக்கிறான். முன்னர்த் தனக்கு ஏற்பட்ட சாபம் ஒன்றை அவளுக்குக் கூறித் தான் இராமன் பிரிவால் உயிர்விடப்போவது திண்ணம் என்று எடுத்துக் கூறுகிறான்.

" 'அந்த முனிசொற் றமையின் அண்ணல் வனம்ஏ
குதலும்
எம்தம் உயிர்வீ குதலும் இறையும் தவறாது,'
என்றான்." (1692)

தன் மனத்தில், எவ்வாறாயினும் மன்னவன் துயரை மாற்றி அவனது செல்லும் உயிரையும் நிறுத்திவிடலாம் என்று நம்பிக் கொண்டிருந்த கோசலைக்கு அரசனுடைய இச்சொற்கள் இடி போல அமைந்தன. அவனைத் தேற்ற வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு இவண் வந்த அவள் உடனே மூர்ச்சையாகிவிட்டாள்.

பரதனுக்கு இழைத்த பிழை

இதனை அடுத்து நாம் கோசலையைக் காண்பது பரதன் மீண்ட பிறகேயாகும். கேகய நாட்டிலிருந்து மீண்ட பரதன், தன்னைப் பெற்ற தாய் செய்த பெரும் பிழையை அறிந்து, அவளை வெறுத்து ஏசிவிட்டுக் கோசலையினிடம் சென்று ஆறுதல் பெறலாம் என்ற கருத்துடன் வந்து, அவள் காலடியில் வீழ்ந்து அரற்றுகிறான். அவன் அரற்றும் அந்த நேரம் வரையில் கோசலை பரதனைப் பற்றி நன்கு அறிந்து கொள்ளாமல், அவன்மேல் ஓர் ஐயம் கொண்டே இருக் கிறாள். தன் மாற்றாளாய கைகேயி செய்த சூழ்ச்சிக்கு அவள் மக னாகிய பரதனும் உடந்தையாய் இருந்தான் என்றே அவள் முடிவு செய்துவிட்டாள். பிறந்தநாள் தொட்டுப் பரதனை அவளே வளர்த்திருந்தாலும், பரதன் இத்தகைய காரியம் செய்வானா என்று ஏனோ அவள் நினைந்து பார்க்கவில்லை. எல்லையற்ற துன்பங்கள் ஒன்றின்மேல் ஒன்றாக வந்த மோதினவுடன் அம்மங்கை நல்லாள் நடுவு நிலையுடன் ஒன்றை ஆராயும் இயல்பை இழந்து விட்டாள் போலும்! அன்றேல், பரதனைப் பற்றிய இத்தவறான எண்ணத்தை அவள் கொள்ளக் காரணம் இல்லை. 'பரதனே முடி சூடப்போகிறான்,' என்று முதல் முதலாக இராமனே அவளிடம் தெரிவித்த பொழுதுகூட அவள் வருந்தவில்லை; வருந்தாதது மட்டும் அன்றி, "நிறை குணத்தவன் நின்னினும் நல்லவனால்" (1609) என்று அல்லவா கூறுகிறாள்! அவ்வாறு பரதனை இராமனைவிட 'நல்லவன் என்று கூறிய கோசலை ஏன் இவ்வாறு அப்பரதன்மேல் ஐயங்கொள்ள வேண்டும்? அவளுடைய நிலையில் யார் இருந்தாலும் இவ்வாறுதான் ஐயங்கொண்டிருப்பர். ஆட்சியைத் தன் மகனுக்கு ஆக்கிக் கொள்ளக்

கைகேயி முயன்றதை அவள் நம்ப முடியும். ஆனால், இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கைகேயி ஏன் நினைக்க வேண்டும்? அரசைப் பறிகொடுத்த இராமன் நாட்டில் இருந்தால் கலகம் விளைப்பான் என்ற கருத்துடையவரே இராமனை வெருட்ட முடிவு செய்திருப்பர். இவ்வாறு முடிவு செய்ய ஒரு பெண்ணால் இய லுமா? அதிலும், தான் அன்புடன் வளர்த்த மகனை வெருட்ட எந்தத் தாய்தான் விரும்புவாள்? எனவே, இராமனைக் காட்டுக்கு அனுப்பச் சூழ்ச்சி செய்தது கைகேயியின் செயலாய் இருக்க முடியாது என நம்பிய கோசலை , அடுத்து யாரை ஐயுற முடியும்? இராமனுடைய அரசை யார் பெற்றுக்கொள்கிறானோ அவன்தானே இராமனை நாடு கடத்தவும் விரும்பி இருத்தல் கூடும்? தருக்க முறைக்கும் இது அடுத்ததுதானே? ஆதலால், கோசலை இது பரதனுடைய சூழ்ச்சி என்று நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லை.

எல்லை மீறிய தாயன்பு

அவ்வாறு இராமனைப் பெற்ற தாயாகிய கோசலை நினைத்த தில் பெருந்தவறு இல்லை என்றாலும், ஆழ்ந்து நோக்கின், அதில் ஓரளவு தவறு உள்ளது என்பது விளங்காமற் போகாது. பரதனை ஆதியிலிருந்து வளர்த்த கோசலை அவனைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அறிவால் மிக்க கோசலை பரதனை நன்கு அறிந்துகொள்ளவில்லை எனில், இதுகொண்டு அவளது அறிவைக் குறை கூறல் இயலாது. ஆனால், அவள் கொண்ட இந்த முடிவு தவறு என்பதிலும் ஐயமில்லை. அவ்வாறாயின், குறை எங்குளது? அவளுடைய தாய்மைதான் இக்குறைபாட்டை ஏற்படுத்தியது. எல்லை மீறிய தாயன்பு காரணமாகவே அவள் பரதனுக்கு இத்தவற்றைச் செய்துவிட்டாள்.

தாயிடம் தங்கியிருக்க விரும்பாத பரதன், கோசலையிடம் வந்து வீழ்ந்து அவள் பாதங்களைப் பிடித்துக்கொண்டு பலபடியாகப் புலம்புகிறான்; கேகயத்திலிருந்து தான் மீண்டது 'இம்மறுக்கம்

காணவோ?' (2191) என்று அரற்றுகிறான். அம்மட்டோடு அப்பெருந் தகை நிறுத்தவில்லை ; கோசலைமேல் ஒரு பெரிய குற்றத்தையும் சாட்டுகிறான். 'ஏன் காடு செல்லும் இராமனைக் கோசலை தடுத்து நிறுத்தவில்லை?' என்பதுதான் அவன் வினா. அவ்வாறு அவள் இராமனை நிறுத்தாமல் விட்டது பெரும்பிழை என்றும் கூறுகிறான்.

"'அடித்தலம் கண்டிலென் யான்என் ஐயனைப்
படித்தலம் காவலன் பெயரற் பாலனோ?
பிடித்திலிர் போலும்நீர் பிழைத்தி ரால்,' எனும்
பொடித்தலம் தோளுறப் புரண்டு சோர்கின்றான்."(2192)

இவ்வாறு அரற்றி வருந்த யாரால் இயலும்? இராமனுடைய போக்குக்குச் சூழ்ச்சி செய்த எவனும் இவ்வாறு கதற இயலா தன்றோ?

"'கடியவள் வயிற்றினில் பிறந்த கள்வனேன்
முடிகுவன் அருந்துயர் முடிய!' என்னுமால்." (2193)

என்றெல்லாம் வருந்தும் பரதன் எவ்வாறு சூழ்ச்சிக்காரனாய் இருக்க இயலும்? மேலும், இராமன் பிறந்த அதே குடியில் தானும் பிறப்பதா? என்று கூடக் கேட்கிறான்.

"'வரதனில் ஒளிபெற வளர்ந்த தொல்குலம்
பரதன்என்று ஒருபழி படைத்தது!' என்னுமால் (2194)

இவ்வாறு தன் கண் எதிரே துயர் அடையும் பரதனைக் கண்ட கோசலை, தன் பிழையை உடனே உணர்ந்துவிட்டாள் ; தன் பிழைக்கும் கழிவிரக்கம் கொள்ளும் அந்த நிலையில் பரதனுக்கு மன அமைதி கூற வேண்டிய இன்றியமையாமையினையும் உணர்ந்துவிட்டாள்.

"புலம்புறு குரிசில்தன் புலர்வு நோக்கினாள்
குலம்பொறை கற்புஇவை சுமந்த கோசலை
'நிலம்பொறை ஆற்றலன் ; நெஞ்சம் தூய்து,' எனாச்
சலம்பிறிது உறமனம் தளர்ந்து கூறுவாள்." (2196)

'சலம் பிறிது உற' என்ற சொற்களால் பரதன் மேல் கோசலை கொண்டிருந்த கோபம் தணிந்த செய்தியைக் கவிஞன் கூறுகிறான். அவ்வாறு அவள் ஆராயாமல் கோபம் கொண்டிருந்தது முறையா என்று நினைக்கும் நம் போன்றவர்கட்கு விடை கூறுமுகமாக அவளுடைய பொறுமை, குடிப் பிறப்பு, கற்பு என்ற இவற்றை நினைவு ஊட்டுகிறான். இத்தனை பெருமையுடைய கோசலை ஒரு தவறு செய்வாளாயின், அதில் ஒரு கருத்து அடங்கி இருக்கும் என்ற குறிப்பே அங்குக் கிடைகிறது.

இதன் பின்னர் அவள் பேசும் பேச்சுத்தான் அவள் பெண் என்பதைக் காட்டிக்கொடுத்துவிடுகிறது. ஆண் மகனாய் இருப்பின், இவ்வளவில் தான் கொண்ட ஐயம் நீங்கப்பெற்றிருப்பான். ஆனால், பெண்ணாகிய கோசலை பரதன் வாய் மூலமாகவே அவன் குற்றம் அற்றவன் என்பதைக் கேட்டுவிட விரும்புகிறாள். இச்செயல் கொஞ்சம் அதிகப்படி என்றுதான் நினைய வேண்டி உளது.

"மையறு மனத்தொரு மாக னான்அலன்
செய்யனே என்பது தேரும் சிந்தையாள்,
'கைகயர் கோன்மகள் இழைத்த கைதவம்
ஐயநீ அறிந்திலை போலு மால்,' என்றாள்." (2197)

'உன் தாயின் செயலை நீ அறியவில்லையா?' என்று கேட்க வேண்டிய கோசலை, பண்பாடுடையவள் ஆதலால், அதனை மாற்றிக் கூறுகிறாள். உன் தாய் என்று சுட்டிக்கூறினால் பரதனுடைய வருத்தம் மிகுதிப்படும் என்று நினைத்த கோசலை, "கைகயர் கோன் மகள்" என்று தன் மாற்றாளைக் குறிக்கிறாள். இது கேட்ட பரதன் பெருந்துயர் அடைந்தவனாய்த் தனக்குக் கைகேயியின் சூழ்ச்சி இது வரை ஒன்றும் தெரியாது என்பதைக் குறித்துப் பல வஞ்சினங் கூறி எடுத்துக் காட்டினான். உடனே கோசலையின் மனம் மாறி அவனை இறுகத் தழுவிக்கொண்டு வாயும் மனமும் குளிர,

"'முன்னை நின்குல முதலி னோர்கள்தாம்
நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?
மன்னர் மன்னவ!' என்று வாழ்த்தினாள்
உன்ன உன்னநெஞ்சு உருகி நைகுவாள்." (2220)

இப்பாடலின் மூன்றாம் அடி கூர்ந்து நோக்கற்குரியது. பரதனை 'மன்னர் மன்னவ!' என்று ஏன் கூற வேண்டும்? எந்த அயோத்தி அரசைப் பரதன் கவர்ந்துகொண்டான் என்று அவள் மனம் வருந்தினாளோ, அந்த அரசை அவளே மனமுவந்து பரதனுக்கு இப் பொழுது தர விரும்புகிறாள். பரதனுடைய பெருமையை இப்பொழுது நேரடியாக அறிந்து கொண்டமையின், அப்பெருமாட்டி அவனை 'மன்னவ!' என்றே விளிக்கிறாள்.

முதல் தேவியாம் கோசலை அறிவு, பண்பாடு, கணவனிடத்துக் காதல், கடமை உணர்ச்சி ஆகிய அனைத்திலும் முதல் இடம் பெறுபவ ளாகவே அமைந்துள்ளாள். வான்மீகர் கண்ட கோசலைக்கும் கம்ப நாடன் கண்ட கோசலைக்கும் கடலனைய வேற்றுமை உண்டு. தமிழர் கள் தலையாய கற்புடைய ஒரு மனைவிக்கு எவ்விதக் கடமைகள் இருக்கவேண்டும் என்று நினைத்தார்களோ அவை அனைத்தையும் நிறைவேற்றுபவளாகவே கோசலை காட்சியளிக்கிறாள். மலை போல அடுக்கி வரினும் துயரத்தைக் கண்டு அஞ்சியோடாமலும், அதன்பொருட்டுப் பிறரைக் காரணம் உள்ள பொழுதும் இல்லாத பொழுதும் நொந்துகொள்ளாமலும் தன் கடமையை விடாது செய்யும் பெருமாட்டியாகவே கோசலை காணப்படுகிறாள். தான் எதிர்பார்த்த ஒன்று நடைபெறாத பொழுது மனத்துயர் அடைதலும், அதனை நடைபெறவொட்டாமற்செய்தவர்களைப் பழித்தலும் உலக இயற்கை. தசரதன் கைகேயியைப் பேசும் பேச்சுகளிலிருந்தே இதனை அறியலாம். ஆண் மகனாகிய தசரதன் அவ்வாறு நடந்து கொண்டுங் கூடப் பெண் மகளாகிய கோசலை முற்றிலும் வேறுவிதமாக நடந்து கொள்ளல் அறிதற்பாலது. 'அன்பே வடிவானவர்கள் ஆயினும்

தமிழ்ப்பெண்கள் கடமையின் எதிரே அன்புக்கு இரண்டாம் இடந் தான் தருவர்,' என்ற ஓர் உண்மையைக் கோசலை மூலம் நன்கு வெளியிடுகிறான் க்ம்பநாடன். கைகேயி மூன்று நிலைகளிற் காட்சி யளிப்பது போல 'இல்லாமல் எல்லா நேரத்திலும் ஒரு படியாகவே காணப்படுகிறாள் கோசலை. வயதால் ஏனைய இருவருக்கும் மூத்துள்ள அவளுடைய இச்செயல் மிகவும் பொருத்தமானதே என்று அறிந்து மகிழ வேண்டியுளது.

எனவே, தசரதன் முதல் தேவியாகிய கோசலை அனைத்துப் பண்பாடுகளும் நிறைந்தவள் என்பதும், தாய்மையைத் துறந்து கடமையை நிறைவேற்றிய கற்புடைய மடவாள் என்பதும் நன்கு விளங்குகின்றன அல்லவா?

☐

5. இளைய மென்கொடி

இருவகைப் படைப்புக்கள்

கம்பன் என்ற கலைஞன் படைத்த எழுநிலை மாடங்கள் இராமன், இராவணன், இலக்குவன், பரதன், சீதை போன்றவர்கள். இத்துணைப் பெரிய மாடங்களைப் படைக்கும் ஆற்றல்சால் கலைஞனாகிய கம்பனே, இரண்டங்குல உயரமே உடைய தந்தப் பதுமைகளையும் படைத்துளான். 'பெரிய கலைப் படைப்பில் மட்டுமே அவனது வன்மையைக் காட்ட வாய்ப்பு இருந்தது ; எனவே, அவற்றை ஒப்புயர்வற்ற முறையில் படைத்துவிட்டான்,' என்று யாரும் நினைத்துவிட வேண்டா. அளவால் மிகச் சிறிய படைப்புகளிலும் அவன் கலைத் திறனையும் படைப்பு வன்மையையும் நன்கு காணலாம். அவனைப் பொறுத்த வரை இவ்விருவகைப் படைப்புகளும் ஒன்றுதான். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' அன்றோ? படைக்கின்ற அவனுக்கு இவை இரண்டும் ஒன்றேயாயினும், அனுபவிக்கின்ற நம்மைப் பொறுத்த வரை ஒரு வேறுபாடு உண்டு.

பெரிய படைப்புக்களை எளிதிற் காணலாம் ; அனுபவிக்கலாம். இரண்டொரு நுண்மையான பகுதிகளை நாம் காணத் தவறி விட்டாலும், தீங்கு ஒன்றும் இல்லை. அதனால், கலைப் பொருளினது முழுத் தன்மை கெட்டுப் போவதில்லை. அந்நுண் பகுதிகளைப் பற்றிய சிறப்பை நாம் அறிந்து அனுபவிக்கவில்லை என்ற குறைபாட்டைத் தவிர, முழு அழகையும் அனுபவிக்க இத்தவறு குறுக்கே நிற்பதில்லை.

மேலும் இத்துணைப் பெரிய படைப்பை அண்மையில் நெருங்கிக் காணாமல் தூரத்தே இருந்தபடியே கூட அனுபவிக்கலாம்.

மிக நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த சிறிய தந்தச் சிற்பத்தைக் கண்டு அனுபவிக்க வேண்டுமாயின், தூரத்தே இருந்து கண்டு பயனில்லை. மிகவும் அண்மையில் இருந்தே காண வேண்டும். பல சந்தருப்பங்களில் 'பெருக்காடி' (Magnifying glass) கொண்டு காண நேரிடுவதுமுண்டு. அப்பொழுதுதான் அச்சிற்பத்தின் முழு அழகையும் அனுபவிக்க முடியும். சில பகுதிகளைக் காணா விட்டாலும் தவறில்லை என்று இங்கே கூற முடியாது. சிறு பகுதிகளை விட்டு விட்டால், முழு அழகையுமே இழக்கநேரிடும். எனவே, மிகவும் கவனத்துடன் கையில் கொண்ட பெருக்காடியுடன் இச்சிற்பச் சிறப்பைக் கண்டுகளிக்க வேண்டும்.

இளையவளா, மூத்தவளா?

தசரதன் மனைவியும் இலக்குவன் தாயுமாகிய சுமித்திரை இராம காதையுள் இலைமறை காயாகவே இருந்து வருகிறாள். கோசலையும் கைகேயியும் பெற்ற அளவு பாடல்கள் கூட இவள் பெறவில்லை. அதிகப் பாடல்கள் பெறாமையின் இவளுடைய சிறப்புக் குறைந்துவிட்டதாக நினைத்துவிட வேண்டா. . இராமனுடைய நிழல் என்று கூறும்படி இலக்குவன் உடனுறைவதைக் காண்கிறோம். அதே போல, இராமனைப் பெற்ற தாயான கோசலையின் நிழல் என்று கூறும்படி இலக்குவனைப் பெற்ற தாயான சுமித்திரை அமைந்து விடுகிறாள். கம்பராமாயணம் முழுவதிலும் இவளைப்பற்றி வரும் பாடல்கள் ஏறத்தாழப் பத்துக்குள்ளாகவே அமைந்துள்ளன. ஒரே ஒரு முறைதான் இம்மாதரசி வாய் திறந்து பேசுகிறாள். ஆம்! இவளுடைய இரண்டாவது அருமை மைந்தன் சத்துருக்கனனும் ஒரே ஒரு முறை தான் பேசுகிறான். என்றாலும் என்ன?

"பலசொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (குறள்.649)

என்ற குறளுக்கு எதிர்மறை இலக்கியமாகிவிட்டனர் தாயும் மைந்தனும். காப்பியத்தில் இவ்வளவு சிறிய இடத்தைப் பெறினும், சுமித்திரை கற்பார் இதயத்தில் நீங்கா இடம் பெற்றுவிடுகிறாள். காப்பியத்தில் மட்டும் என்ன! த்சரதன் மனத்திலுங்கூட இவள் மிகச் சிறிய இடத்தையே பெற்றுள்ளாள் என்று நினைக்க வேண்டியுளது.

முதனூலாசிரியராகிய வான்மீகியார் சுமித்திரையைத் தரசத னுடைய இரண்டாம் மனைவியாகவும் கைகேயியை மூன்றாம் மனைவியாகவும் கூறுகிறார். ஆனால், கம்ப நாடன் கைகேயியை இரண்டாம் மனைவியாக்கிச் சுமித்திரையையே மூன்றாம் மனைவி யாக்குகிறான். அதனால் சுமித்திரையை 'இளைய மென்கொடி' (284) என்று குறிக்கிறான். இந்த முறை மாற்றம், மேலாகக் கவனிக்கும் பொழுது பெரிதாகப்படாமற் போயினும், ஆழமான உட்கருத்துடன் செய்யப்பட்டிருத்தலை ஆய்பவர் காண்டல் கூடும். கைகேயியை இளையாளாகக் கூறிய வான்மீகியார் இலக்குவன் கூற்றாகவும், தம் கூற்றாகவும் தசரதனைப் பன்முறையும் 'காம பரவசன்' என்று கூறிப் போகிறார். இவ்வாறு கூறாவிட்டாலுங்கூடக் கைகேயியை இளை யாள் என்று கூறிய உடன் தசரதன் செயல்கட்குப் புதுப்பொருள் காணும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. கைகேயிக்குத் தசரதன் வரம் தந்த நிகழ்ச்சி இப்பொழுது புதிய கோணத்தில் காட்சி அளிக்கிறது. வாய்மையைக் காக்க வேண்டி அவன் வரமீந்தாலுங்கூட, அவ் வரத்தைப் பெற்றுக் கொண்ட கைகேயி இளமனைவி என்றால், பொருள் வேறாகிவிடுகிறதன்றோ? 'வாய்மை காப்பாற்றுவதைப் பற்றித் தசரதன் கவலையுறவில்லை. இளமனைவியைத் திருப்திப் படுத்தவே வரமீந்தான் போலும்!' என்று சிலர் மனத்திலாதல் தோன்றக் கூடும். 'பனைமரத்து அடியில் நின்று பாலைக் குடித்தாலும், உலகம் கள்ளெனக் கொள்ளும்,' என்ற தமிழ் நாட்டு முதுமொழி பெரும்பான்மை தவறுவதில்லை. வான்மீகியார் கூற்றின்படி தசரத னுடைய மூன்றாம் மனைவியாகக் கைகேயியைக் கூறினால், இந்தக் குற்றம் தசரதன்மேல் வருவதை யாரும் தடுக்கவியலாது.

மாற்றக் காரணம்

இக்குறைபாட்டை நன்கு அறிந்தான் கம்பநாடன். வாலி முதல் அனைவராலும் தசரதன் 'வாய்மை காத்தவன்' என்று புகழப் படுகின்றான். "வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல் தூயவன்" (வாலி 4018) என்பது வாலியின் கூற்று. இவ்வாறு தசரதன் புகழப்பட வேண்டுமாயின், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. தசரதன் கைகேயிக்கு வரம் ஈந்தது, தான் சொன்ன சொல் லைக் காப்பாற்றவே அன்றி, அவளுடைய இளமை அழகில் மயங்கி அன்று என்பதை வெளிப்படுத்த வேண்டும். கைகேயியின் மாட்டுத் தான் கொண்ட கழிபெருங்காதலைப் பிறர் அறியும் படியே அரசன் காட்டிக்கொண்டு வாழ்கிறான். இந்நிலையில் அவள்தான் இளை யவள் என்று கூறப்படுமானால், அவனுடைய காதல் அவளுடைய புற அழகில் ஈடுபட்டுத் தோன்றியதே என்று கொள்ள நேரிடும். இந்த இடுக்கணைத் தீர்ப்பதற்குக் கம்பன் கையாண்ட வழியே சிறந்தது. இவ்வாறு அவளை மூத்தவளாக்கிச் சுமித்திரையை இளையாளாக் கியதால், மற்றொரு பயனும் கிடைக்கிறது. கைகேயி தான் இளை யாள் என்ற காரணத்தால் தன் அழகைத் துணையாகக் கொண்டு தன் கருத்தை நிறைவேற்றிவிட்டாள் என்ற பழிச் சொல்லும் இல்லாமற் போகுமன்றோ? இளையாளாக சுமித்திரை இருக்கவும் தசரதன் கைகேயிமாட்டு அதிக அன்பு செலுத்தினான் எனின், அஃது அவளுடைய சிறந்த பண்பாட்டைக் கருதியே என்றுதான் நினைக்கத் தோன்றும். எனவே, தலையாய கலைஞனாகிய கம்பநாடன் வால்மீகியின் போக்கை மாற்றியமைத்ததால் இரண்டு பெரிய செயல்களைச் செய்துவிடுகிறான். முதலாவது, தசரதன் மீது ஏற்படும் அடாப்பழியைக் குறைத்தது. இரண்டாவது, கைகேயியின் மீது ஏற்படக் கூடிய பழியைக் குறைத்தது. மூலத்திலிருந்த கதைப் போக்கை மாற்றும் இடங்களில் எல்லாம் கம்பன் ஒரு பெரும்பயனை விளைக்க வேண்டியே மாற்றுகிறான் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

முதற்சந்திப்பு

சுமித்திரையை நாம் முதன்முதல் சந்திப்பது யாகசாலை யிலாகும். அவியுணவை மனைவியர் மூவர்க்கும் தரத்தொடங்கிய தசரதன், முதலில் கோசலைக்குத் தந்தான்; எஞ்சியுள்ளதில் ஒரு பகுதியைக் கைகேயிக்குத் தந்தான்; எஞ்சியதைச் சுமித்திரைக்குத் தந்தான். இவ்வாறு அவன் தந்த முறையிலும் சுமித்திரை தான் மூன் றாம் மனைவி என்பதைப் பெற வைக்கிறான் கவிஞன். அனைவர்க் கும் தந்த பிறகும் தட்டில் உதிர்ந்து கிடந்தது ஒரு சிறு பகுதி. அதனை வயதாற் சிறியவளாய சுமித்திரைக்கே மீட்டும் தந்தான். இவ்வாறு தசரதன் இரண்டாம்முறை சுமித்திரைக்கே தந்தது சாலவும் பொருத் தம் உடையது. உண்ணும் பொருள்களில் அதிகப்படியானதை இன்றும், ஆண்டில் இளையவர்க்குத் தருதலே மரபாகும். எவ்வளவு தான் கைகேயியிடம் மன்னன் அதிகப் பற்று வைத்திருப்பினும், அதை இப்பொழுது காட்டவில்லை. ஆண்டால் இளையவள் என்ற ஒரே காரணத்திற்காகப் போலும் எஞ்சியதைக் கைகேயிக்குத் தாராமல் சுமித்திரைக்கே தந்துவிட்டான்! அவன் இருமுறை சுமித்திரைக்கு அளித்ததை இதோ கவிஞன் பாடுகிறான்.

> " 'நமித்திரர் நடுக்குறும் நலங்கொள் மொய்ம்புடை
> நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையின்
> சுமித்திரைக்கு அளித்தனன் ; சுரர்க்கு வேந்து, 'இனிச்
> சமித்ததுஎன் பகை!' எனத் தமரொடு ஆர்ப்பவே.
> "தன்னையும் சுமித்திரை தனக்கு நல்கினான்."
>
> (269.270)

(பகைவர்கள் நடுங்கும்படியான பலத்தையுடைய நிமி என்னும் அரசனது மரபில் பிறந்தவனாகிய தசரதன் சுமித்திரைக்குத் தந்தான். அவன் தந்தவுடன் தேவேந்திரன், 'என்பகை அழிந்தது!' என்று சுற்றத்தோடு மகிழ்ந்தான். மறுபடியும் சிதறியதைத் தசரதன் அவளுக்கே அளித்தான்.)

இவை இரண்டு பாடல்களின் மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியை அறிய முடிகிறதே தவிர, சுமித்திரையைப் பற்றி ஒன்றும் அறியக் கூட

வில்லை. மன்னன் மறுமுறை தந்ததைத் தடை கூறாமல் ஏற்றுக் கொண்டாள் என்றுமட்டும் அறிய முடிகிறது. மேலும், தான் இளை யாளாய் இருந்தும் மன்னன் தன்பால் ஒன்றும் தனிப்பட்ட முறையில் பரிவு காட்டவில்லையே என்று அவள் வருந்தவில்லை என்பது அறிய முடிகிறது. அன்றியும், ஆண்டில் மூத்தாளாய கோசலை முதலில் பெற்றதற்காக அவள் மாட்டுப் பொறாமை கொள்ளவில்லை என்றும் அறிகிறோம்.

இரண்டாம் சந்திப்பு

இனி அடுத்து நாம் சுமித்திரையைக் காண்பது அவள் கரு வுயிர்த்த காலத்திலாகும். அங்கு அவள் ஒன்றும் பேசக்கூடிய நிலையில் இல்லை. நாமும் அவள் பேசுவாள் என்று எதிர் பார்க்கவும் இல்லை. ஏனைய அரசியர் இருவரும் மைந்தரைப் பெற்றது போலவே அவளும் முதலில் ஒரு மைந்தனைப் பெற்றாள்.

“இளையவன் பயந்தனன் இளைய மென்கொடி” (284)

என்று கவிஞன் அதனைக் குறிக்கிறான். சுமித்திரை சிறிது நேரம் தாழ்த்து மீட்டும் ஒரு புதல்வனைப் பெற்றாள். முதலில் பிறந்த இலக்குவனுடைய பிறப்பைக் கூற வந்த கவிஞன் இந்திரன் மகிழும்படி பிறந்தான் என்றான்; ஆனால், சந்துருக்கனன் பிறப்பைக் கூறும் பொழுது இவ்வுலகத்தார் மகிழ அவன் பிறந்தான் என்கிறான்.

“படங்கிளர் பல்தலைப் பாந்தள் ஏந்துபார்
நடங்கிளர் தரமறை நவில நாடகம்
மடங்கலும் மகமுமே வாழ்வின் ஓங்கிட
விடங்கிளர் விழியினாள் மீட்டும் ஈன்றனள்.” (285)

(ஆதிசேடனாலே தாங்கப்பெற்ற இப்பூமி மகிழ்ச்சி அடையவும், வேதங்கள் மகிழ்ச்சி நடனம் புரியவும் சிம்ம ராசியிலே மக நாண் மீனில் தவறாகப் பார்க்கின்ற வர்களுக்கு விஷம் கக்கும் கூரிய விழியையுடைய சுமித்திரை மீட்டும் ஒரு மகனை ஈன்றாள்.)

ஏனையோர் போல ஒரு மகனை அல்லாமல் இரு மைந்தரைப் பெற்றதால் சுமித்திரை அதிகம் மகிழ்ந்தாளா, அன்றி வருந்தினாளா

என்பது பற்றிக் கவிஞன் ஒன்றும் கூறாமல் விட்டுவிட்டான். இப்பொழுதும் அவள் கூற்றாக ஒன்றும் பேச்சு இன்மையின், அவள் மனத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு நமக்குக்குக் கிட்டவில்லை.

சீற்றம் விளையாத நிலம்

சுமித்திரையை அனைவரும் மறந்துவிட்ட நேரம். தலைநகரம் அல்லோலகல்லோலப்படுகிறது. அரசன் கைகேயி கோயிலில் மயக்கமுற்ற நிலையில் இருக்கிறான். இராமனைக் காடு செல்ல உத்தரவிட்டுவிட்டாள் கைகேயி. இராமனும் கோசலை கோயில் புகுந்து அவள் வருத்தத்திற்கு ஆறுதல் கூறிவிட்டுப் புறப்பட்டு வருகிறான். வெளியே உயிரினும் இனிய தம்பி இலக்குவன் கடுஞ் சீற்றம் உற்றவனாய்ப் போருக்குத் தயாராகிறான். சுமித்திரையின் அடக்கம் எங்கே, அவள் அருமை மைந்தன் இலக்குவன் சீற்றமும் படபடப்பும் எங்கே! நினைக்கவும் முடியவில்லை இலக்குவன் சீற்றத்தின் எல்லையை!

"........................ யாவ ராலும்
மூட்டாத காலக் கடைத்தீஎன மூண்டு எழுந்தான்."

(1716)

அவன் நின்ற நிலை ஆதிசேடனை நினைவூட்டுகிறது.

"அண்ணல் பெரியோன் தனதுஆதியின் மூர்த்தி
ஒத்தான்." (1717)

இலக்குவனுடைய வில்லின் நாணொலி கேட்டு இராமன் ஓடோடியும் வருகிறான். தம்பியின் கோலத்தைக் காணத் தமையனுக்கு வியப்பே மேலிடுகிறது. இலக்குவன் கைகேயி மேலும் பரதன் மேலும் தீராத சினம் கொண்டுள்ளான் என்பதை அறிந்த இராமனுக்கு ஒரு கணம் சுமித்திரை நினைவு தோன்றுகிறது. அவளுடைய அடக்கமும், அன்பும், தியாக புத்தியும் நினைவுக்கு வருகின்றன. அமைதியே வடிவான சுமித்திரை மகனா இலக்குவன்

என்று அவன் வியப்படைந்துவிட்டான். தாய் தந்தையருடைய பண்பாடுகள் தாமே குழந்தைக்குப் படியும் என்று கூறுவார்கள்? அவ்வாறானால், இலக்குவனுக்கு இத்தகைய மனப்பான்மை எங்கிருந்து வந்தது? எங்கிருந்து வந்தாலும், அவன் தோன்றி வளர்ந்த அவ்வருமைத் தாயின் மனத்திலும் இத்தகைய சீற்றத்திற்கு இடமே இல்லை. இவ்வாறு நினைந்த இராமன் இலக்குவனை நோக்கி இதோ கேட்கிறான். "ஐயனே, நேர்மையான நீதிக்கு மாறாமல் உன் அறிவு அமைந்திருக்கும் அல்லவா? அழியாத அறம் கெடும்படியாகவும் நன்னெறிக்கு மாறாகவும் உள்ள கோபத்திற்குச் சற்றும் இடம் கொடாதவள் உன் தாய். அவள் வயிற்றில் வளர்ந்த உனக்கு இக்கோபம் எங்கே தோன்றியது?" என்னும் கருத்துப்பட இதோ பேசுகிறான்.

"இளையான் இதுகூற, இராமன், 'இயைந்த நீதி
வளையா வரும்நன் னெறிநின் அறிவுஆகும் அன்றே?
உளையா அறம்வற் றிடஊழ் வழுவுற்ற சீற்றம்
விளையா தநிலத் துஉனக்குஎங்ஙன் விளைந்தது?'
என்றான்." (1730)

'விளையாத நிலத்துத் 'தோன்றிய' அல்லது பிறந்த உனக்கு எவ்வாறு வந்தது?' என்று 'தோன்றிய' என ஒரு சொல் வருவித்து ஈற்றடிக்குப் பொருள் கொள்ளல் நலமோ என்று நினைக்க வேண்டியுளது. பிறர் இந்த அடிக்கு "விளையாத உன் மனத்தில் எங்ஙனம் இக்கோபம் தோன்றிற்று?" என்று பொருள் கூறுகின்றனர். 'நிலத்து' என்ற சொல்லுக்கு 'மனத்தில்' என்று அவர்கள் பொருள் கூறுகின்றார்கள். ஆனால், 'நிலத்து' என்ற சொல்லுக்கு (சுமித்திரை) 'வயிற்றில்' என்று பொருள் கொண்டு 'தோன்றிய' என்ற ஒரு சொல்லையும் வருவித்துக் கொண்டால் பொருள் சிறந்து விடுகிறது. 'விளையாத நிலத்துப் பிறந்த உனக்கு' என்று பொருள் கொள்வது, சுமித்திரையைப் பற்றி இராமன் கொண்டிருந்த கருத்தையும் அறிய இடம் தருகிறது.

இராமன் சுமித்திரையைச் சந்திக்கும் இடத்தில் அவள் நடந்து கொள்ளும் விதம் இவ்வாறு பொருள் கொள்வது சரியே என்று சான்று பகர்கிறது.

இராமன் பெருஞ்சீற்றத்துடன் இருந்த இலக்குவனை அமைதி யடையச் செய்தபின் இருவரும் சுமித்திரையிடம் செல்கின்றனர். இதற்குள் அப்பெருமாட்டிக்கு எவ்வாறோ செய்தி எட்டிவிட்டது. வருகின்ற மைந்தர் இருவரும் காடு செல்லும் உறுதியுடன் வருகின் றனர் என்ற கருத்துடன் அவர்களை அத்தாய் பார்க்கிறாள்.

"கண்டாள் மகனும் மகனும் தனகண்கள் போல்வார்
துண்டா வனம்சார் வதற்கே சமைந்தார்கள் தம்மை ;
புண்தாங்கு நெஞ்சத் தினளாய்ப் படிமேற்பு ரண்டாள்
உண்டாய துன்பக் கடற்குஎல் லைஉணர்ந்தி லாதாள்."

(1744)

(தன் இரு கண்கள் போல்வாராகிய பெற்ற மகனும் பெறாத மகனும் வனம் சேர்வதற்குத் தயாராக வருவதைக் கண்ட சுமித்திரை, புண் நிறைந்த நெஞ்சத்தை உடையவளாகி பூமிமேல் விழுந்து புரண்டாள்.)

இருவரும் வருவதைக் கண்டாள் அவள், ஆனால், இராமன் காடு செல்ல வேண்டும் என்றுதான் கைகேயி கட்டளை இட்டாளே தவிர, இலக்குவனைப் பற்றி அவள் ஒன்றும் பேசவில்லையே! அவனும் வனம் போகப் போகிறான் என்று சுமித்திரையிடம் யார் கூறினார்கள்? இலக்குவன் தானும் உடன் வருவதைக் குறித்து (இராமனிடம் கூட) ஒன்றும் கூறவில்லையே! அவ்வாறிருக்க, இருவரும் வனம் புகப் போகின்றனர் என்று சுமித்திரை நினைக்க என்ன நிகழ்ந்தது? ஒன்றும் இல்லை, என்றாலும், மகன் செல்லப் போகிறான் என்ற முடிவுடன் இருக்கிறாள் (அத்தாய்) என்றால், தான் பெற்ற மகன் என்ன செய்வான் என்பதை அறிந்திருந்தாள் என்பதே கருத்து.

தாயும் மைந்தரும்

இலக்குவனைக் கண்டு அத்தாய் ஒரு சொல் கூடச் சொல்லவில்லை. அவள் மைந்தன் என்ன செய்யக்கூடும் இத்தகைய சந்தருப்பத்தில் என்பதை நன்கு அறிந்தாள் எனில், அதற்குக் காரணம் யாதாய் இருத்தல் கூடும்? தன்னைத்தான் நன்கு அறிந்திருந்த சுமித்திரை, தன் வயிற்றில் பிறந்த மைந்தன் எவ்வாறு நினைப்பான் என்பதையும் அறிந்துள்ளதில் வியப்பொன்றும் இல்லை. 'தாயைத் தண்ணீர்த்துறையில் பார்த்தால் பிள்ளையை வீட்டிற் சென்று பார்க்க வேண்டா,' என்பது தமிழ் நாட்டு முதுமொழி. இராமன் மாட்டும், அவன் தாயாகிய கோசலை மாட்டும் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தாள் சுமித்திரை. இவள் காட்டிய அன்பைக் கோசலையும் பிரதிபலிக்கிறாள்.

இராமனுடைய முடி சூட்டலைத் தோழிகள் மூலமே முதலிற் கேள்விப்படுகிறாள் கோசலை ; எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறாள். ஆனால், இராமனை வளர்த்தவளாகிய கைகேயியிடம் தன் மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்று ஏனோ அவள் நினைக்கவில்லை? அதற்கு மறுதலையாகச் சுமித்திரையிடம் செல்கிறாள் அம்மாதரசி. இராமன் பொருட்டுக் குல தெய்வத்தை வணங்க வேண்டும் என்று கருதிய அவள், சுமித்திரையை உடன் அழைத்துக்கொண்டு செல்கிறாள். கோசலையின் இச்செயலைக் குறிக்க வந்த கவிஞன், ஓர் அடைமொழி தருகிறான் சுமித்திரைக்கு.

> 'துன்னு காதல் சுமித்திரை யோடும்போய்
> மின்னு நேமியான் மேவிடம் மேவினாள்.' (1404)

கோசலை தன் ஆசைக்குப் (காதல்) பாத்திரமான (துன்னு) சுமித்திரையோடும் திருமால் கோயிலுக்குச் சென்றாளாம் பூசனை புரிய. வயதால் முதிர்ந்த கோசலையின் ஆசைக்குப் பாத்திரமானவள் வயதால் இளைய சுமித்திரையா? முறைப்படி இருக்கவேண்டுமாயின்,

கோசலை தனக்கடுத்த கைகேயியிடம் அல்லவா அன்பு பாராட்ட வேண்டும்? மேலும், கைகேயி தானே இராமனைப் பரிவுடன் வளர்ப்பவள்? அவ்வாறிருந்தும், கோசலையின் காதல் சுமித்திரை யிடம் செல்லக் காரணம் யாது? விடை எளிதில் காணக் கூடியதே. ஆண்டால் இவர்கள் இருவரிடையேயும் வேறுபாடிருப்பினும், ஏனைய பல ஒற்றுமைகள் இலங்கக் காணலாம். அவற்றுள் தலையாய ஒன்று, இருவருமே தசரதனால் அதிகம் கவனிக்கப்படாதவர் என்பதுதான். கைகேயியிடம் அரசன் கொண்ட கழிபெருங்காதல் ஏனையோரைக் கவனியாதபடி செய்துவிட்டது. ஆண்டால் இளைய சுமித்திரையைக் கூட அவன் கவனியாமல் விட்டது வியப்பேயாகும். இந்த ஒரு காரணமே சுமித்திரையைக் கோசலைபால் செலுத்தி இருக்க வேண்டும். இருவரும் துன்புறுவது ஒரே காரணத்தாலாகலின், இரு வரும் அதிகம் நெருங்கி ஒருவர் மாட்டு ஒருவர் அன்பு கொள்ள லாயினர். யாவரினும் மூத்தவளும் யாவரினும் இளையவளும் ஒன்று கூட இதைத்தவிர வேறு காரணம் காண்டல் அரிதாகும். மகிழ்ச்சி, துயரம் என்ற இரண்டையும் பகிர்ந்துகொள்ள இவ்விருவரும் ஒருவர் மற்றவரை நாடலின் உட்கருத்தும் இதுவேயாம்.

இக்காரணத்தோடல்லாமலும் சுமித்திரையின் இயற்கையான நற்பண்புகள் யாவராலும் போற்றப்பட்டன. கோசலை; இராமன் ஆகிய இருவரும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் பண்புடையவளாய்ச் சுமித்திரை இருந்ததை நன்கு அறிகிறோம். எனவே, அவள் மைந்த னாகிய இலக்குவனும் அவளுடைய நற்பண்புகளைப் பெற்றிருப்பான் என்று எதிர்பார்ப்பதிலும் தவறில்லையல்லவா? இதனை மனத்துட் கொண்டுதான் போலும் இராகவன் இலக்குவன் சீற்றத்தைப் பார்த்துக் கூறுகையில்,

> “ ‘விளையாத நிலத்து உனக்கு எங்ஙனம் விளைந்தது?’
> என்றான்.”

தாய் துயரும் மகன் விடையும்

இந்த அடிப்படையில் சுமித்திரையைக் காணும் பொழுது அவள் செய்த செயலின் உட்கருத்தை நன்கு உணர முடிகிறது. மைந்தர்களைக் கண்ட மாத்திரையில் தரைமேல் வீழ்ந்து புரண்டு அழுத சுமித்திரையை மைந்தர் இருவரும் தேற்ற முற்படுகின்றனர். அவளுக்கு மன அமைதி கூற வந்த இராகவன் கூறிய வார்த்தைகள் ஆழ்ந்து நோக்கற்குரியன.

"சோர்வாளை ஒடித் தொழுதுஏத் தினன்துன்பம் என்னும்
ஈர்வாளை வாங்கி மனம்தேற் றுதற்குஏற்ற செய்வான்
'போர்வாள் அரசர்க்கு இறைபொய்த் தனன்ஆக்க
கில்லேன்
கார்வான் நெடுங்கான் இறைகண்டு இங்ஙனமீள்வன்,'
என்றான்." (1745)

(மனம் சோர்ந்து வீழ்ந்த சுமித்திரையின் திருவடிகளில் தொழுது அவள் மனத்தில் பதிந்த துன்பம் என்னும் வாளை எடுத்துவிட்டு மனந்தேற்றவந்த இராமன் கூறினான் : "சக்கரவர்த்தியைப் பொய்யனாக்க யான் விரும்பவில்லை. காட்டைச் சற்றுப் பார்த்துவிட்டு உடன் மீண்டு விடுகிறேன்.")

இப்பாடலின் மூன்றாவது அடி கவனித்தற்குரியது. 'அரசனைப் பொய்யனாக்க யான் விரும்பவில்லை,' என்று இராமன் ஏன் கூற வேண்டும்? அரசன் பெயரிலோ, கைகேயி பெயரிலோ சிறிதும் ஐயங்கொள்ளவில்லையே சுமித்திரை! கொண்டாலும் கொள்ளாவிட்டாலும், அவள் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் இன்னும் வெளி வரவில்லையே! அவ்வாறு இருக்க, இராமன் இதனை ஏன் கூற வேண்டும்? இதனை முதலிற்கூறிவிட்டு அடுத்த பாடலில், 'யான் எங்கிருப்பினும் அதுவே எனக்கு அயோத்தியாகும். எனக்கு யார் துன்பஞ் செய்யப்போகிறார்கள்? நீங்கள் என்பொருட்டுச் சிறிதும் வருந்த வேண்டா,' என்று கூறுகிறான். இது முறைதான். வருந்துகிறவர்களை 'வருந்த வேண்டா,' என்பதற்குக் காரணம் காட்டி,

'வருந்தற்க,' என்று கூறுவது முற்றிலும் பொருத்தமானதே! ஆனால், இதனைக்கூடக் கூறுவதற்கு முன்னர் அரசனைப் பற்றிய குறிப்பு ஏன் வர வேண்டும்? அறிவிற் சிறந்த இராமன் இதை எளிதிற்கண்டு கொண்டான். அவன் தன் தாயாகிய கோசலையிடம் சென்ற பொழுது அவள் ஒன்றும் அறியாதவளாய் நின்று கொண்டு அவனையே நோக்கி,

"'நினைந்ததுஎன்? இடையூறு உண்டோ நெடுமுடி
புனைதற்கு?' என்றாள்." (1607)

ஆனால், தன்னைக் கண்ட மாத்திரையில் கீழ் வீழ்ந்து அழுகிறாள் சுமித்திரை என்றால், அவள் முன்னரே இது பற்றி அறிந் துள்ளாள் என்பது தானே கருத்தாகும்?

நடைபெற்ற நிகழ்ச்சி ஓரளவு சுமித்திரைக்குத் தெரிந்து விட்டதென்பதை இராமன் அறிந்து கொண்டான், ஆனால், இது யாரால் நடைபெற்றது என்பதை அவள் அறிவாளா இல்லையா என்பதை அவன் அறியான். எனவே, அவள் கைகேயிமேல் ஐயப்பட்டு வீண் வருத்தம் கொள்வதைக்காட்டிலும் முதலிலேயே அவளுக்கு உண்மையை உணர்த்தி விடவேண்டும் என்று கருதினான். அவ் வாறாயின் உடனே அவள் வருத்தம் கணவனாகிய தசரதன் மேல் திரும்பிவிடலாமன்றோ? அதையும் இராகவன் விரும்பவில்லை. எனவே, மிகவும் ஆராய்ந்த சொற்களால் தசரதனும் வேறு வழி இல்லாமல் அகப்பட்டுக்கொண்டான் என்று கூறுவானைப் போலப் பேசுகிறான். "அரசனைப் பொய்யனாக்க யான் விரும்பவில்லை," என்று கூறுவதால், அரசன் முன்னரே வாக்குக் கொடுத்து அதில் அகப்பட்டுக்கொண்டான் என்ற கருத்தையும் தெரிவித்துவிட்டான். அறிவிற்சிறந்த சுமித்திரை ஒரு நொடிப் பொழுதில் இச்சொற்களின் உட்பொருளை உணர்ந்துகொண்டாள். இது தரும சங்கடமான நிலை என்பதும் அவளுக்கு விளங்கிவிட்டது. கணவன், மைந்தன் என்!

இருவருள் ஒருவரை இழந்துதான் மற்றவரைக் காக்க முடியும் என்பதை அவளுடைய கூர்த்த மதி உடன் கண்டுகொண்டது.

எனவே, அவள் அடுத்துச் செய்யப்படவேண்டுவதைப் பற்றி ஒரு வினாடி நினைந்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். இதுவரை இராமன் பேசும்பொழுது மிகவும் கவனத்துடன் தன்மை ஒருமையையே பயன் படுத்துகிறான். உடன் நிற்கும் இலக்குவனை அவன் உளப்படுத்தவே இல்லை.

'கான்இறை கண்டு இங்ஙன் மீள்வன்.'

'எனையார் நலிகிற்கும் ஈட்டார்?' (1745,1746)

இவ்வாறு இராமன் கூறினாலும், சுமித்திரை இலக்குவன் விஷயத்தில் முன்னரே ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள்.

இலக்குவன் குறிப்பு

இந்நிலையில் கைகேயியிடமிருந்து வந்த பணிப் பெண்கள் மரவுரியைத் தாங்கி வந்தார்கள். அவர்கள் மரவுரியை இராமனுக்காகவே கொணர்ந்தாலும் தான் முன்னே நின்றமையின், இலக்குவனே அதைப் பெற்றுக்கொண்டான். பெற்றுக்கொண்ட பிறகே இலக்குவனுக்கு ஓர் ஐயம் தோன்றிற்று. இராமனுடன் வனஞ் செல்ல வேண்டும் என்று விரும்பிய தன்னைத் தாய் மனவமைதியுடன் ஏற்றுக்கொள்வாளா என்பதே அவனது ஐயம். தந்தையிடம் உத்தரவு பெற அவன் விரும்பவில்லை. அவனைப் பொறுத்த வரையில் தசரதன் ஒரு பகைவனே ஆகிவிட்டான். எனவே, அவனைப்பற்றி இலக்குவன் கவலைப்படவில்லை. என்றாலும், சுமித்திரை யாது கூறு வாளோ என்ற ஐயம் மட்டிலும் அவனை வருத்துகிறது. இராமனையும் உடன் வைத்துக்கொண்டு தாயிடம் தன் கருத்தைக் கேட்பது நாகரிகம் அற்ற செயலாகும். கேளாவிட்டாலும், மிஞ்சிவிடும் நிலைமை ஏற்பட்டுவிடும். 'யாது செய்யலாம்?' என்று நினைந்த இலக்குவன், ஒரு முடிவுக்கு வந்தான்; தாயின் நுண்ணிய அறிவை

நன்கு அறிந்தவனாகலின், தன் முடிபைக் குறிப்பால் அவளுக்கு உணர்த்த முடிவு செய்தான்.

மரவுரி தந்தவர்களிடமிருந்து அதைப் பெற்றுக் கையில் வைத்துக் கொண்டு, உடனே விழுந்து தாயை வணங்கினான். மரவுரியைக் கையிலேந்தி வணங்கியதால் தாய் அக்குறிப்பை அறிந்துகொள்வாள் எனக் கருதினான் மைந்தன். ஆனால், சுமித்திரை முன்னமே இது பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை அவன் அறிந்து கொள்ள வில்லை. இவ்வாறு பின்வரும் பாடலுக்குப் பொருள் கூறாமல் அவன் வாய்விட்டுக் கேட்டான் என்று கூறுவதால் ஏற்படும் சுவைக் குறைவை அறிக.

"அன்னான் அவர்தந்தன ஆதரத் தோடும் ஏந்தி
இன்னா இடர்தீர்ந்து, 'உடன்ஏகு எனஎம்பி ராட்டி
சொன்னால் அதுவே துணையாம்' எனத்தூய நங்கை
பொன்னார் அடிமேல் பணிந்தான்; அவளும்
புகன்றாள்." (1750)

'அதுவே துணையாம் என' என்ற தொடருக்கு 'இவ்வாறு என் தாய் கூறினால் அதுவே நலமாகும் என்று நினைத்து' என்று பொருள் கொள்ளுதல் நேர்மையானது. 'என' என்ற சொல்லுக்கு 'என்று நினைத்து' என்று ஒரு சொல் வருவித்துப் பொருள் கொள்ளுதலி னால் தவறில்லை.

முதற்பேச்சு

இலக்குவன் இக்குறிப்பை மனத்தில் வைத்துக் கொண்டு வணங்கினவுடன் சுமித்திரை பேசுகிறாள். இராமாயண வரலாற்றில் இப்பொழுதுதான் வாய் திறந்து அம்மாதரசி பேசுகிறாள். இரண்டு பாடல்கள் அவள் கூற்றாய் அமைந்துள்ளன. "இராமன் செல்லும் அந்த வனம் உனக்கு மட்டும் செல்லத் தகாதது அன்று (உடன் செல்லலே உனக்குத் தகுதி); அந்த வனமே உனக்கு இனி அயோத்தியாகும். மிகுதியும் உன்பால் அன்பு கொண்ட இராமனே

மன்னனாவான். இவ்வுலகை இராமன் பரதனுக்கு ஈந்துவிட்டுக் காடு செல்கிறான் என்பதை அறிந்தும் உயிரை வைத்துக் கொண்டிருக்கும் நாங்கள் உன் தாயார் அல்லேம். சீதையே உன் தாயாவாள். உடனே புறப்படு. இனி நீ காலந் தாழ்த்தலும் முறையன்று,' என்னும் கருத்துப்பட,

"'ஆகாதது அன்றால் உனக்குஅவ் வனம்இவ்வ யோத்தி;
மாகாதல் இராமன் அம்மன் னவன்;'வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர் நம்பூங் குழற்சீதை' என்றே
ஏகாய்; இனிஇவ் வயின்நிற் றலும்ஏதம்,' என்றாள்."

(1751)

இலக்குவன் தன்னுடைய தாய் எங்கே உத்தரவு தர மறுத்துவிடுவாளோ என்று ஐயுற்றதற்கு நேர்மாறாக, இவ்வாறு சுமித்திரை கூறிவிட்டாள். இச்சொற்களில் எவ்வளவு தூரம் அவளுடைய உள்ளக் கிடக்கையை வெளியிட்டுவிட்டாள்! தான் பெற்ற மகன் காடு செல்வதை எந்தத் தாய்தான் விரும்புவாள்? ஆனாலும், இதோ ஒரு தாய் மகனைச் செல்க என்று ஏவுகிறாளே! இது முறையா? இலக்குவன் மன நிலையை நன்குணர்ந்த தாயா கலின், இவ்வாறு பேசுகிறாள். தாமரைப்பூ நீரில் வாழும் இயல்புடையது. கொடிய பனியாயினும், கடு வெயிலாயினும், அது நீரில் நின்றால் செழித்து வளரும். ஆனால், பஞ்சுப் படுக்கையாகவே இருப்பினும், தாமரைக்கு அது ஏற்றதன்று. தாமரை மலரிடத்து நாம் கொண்ட அன்பைத் தெரிவிப்பதற்காக அம் மலரை நீரிலிருந்து பறித்து மலர்ப் படுக்கையில் வைத்தாலும், அது வாடிவிடும். அதே போல, இராமன் உள்ள இடத்தில் செழித்து வாழக் கூடியவன் இலக்குவன். இராமன் அயோத்தியில் இருந்தாலும், வனத்திலி ருந்தாலும், அதுபற்றிக் கவலை இல்லை. இலக்குவனும் உடன் இருக்க வேண்டுபவனே தவிரத் தனித்து வாழக் கூடியவனல்லன். இதனை நன்கு அறிந்தமையின், சுமித்திரை, 'அவ்வனம் உனக்கு ஆகாததன்று,' என்று கூறினாள். இதுவரை இலக்குவன்

இராமனைத் தமையன் என்றே கருதிவந்தான். ஆனால், இனி அது கூடாதென்று அறிவிப்பாள் போல, 'இராமன் அம்மன்னவன்,' என்று குறிப்பிட்டாள். மன்னவன் ஏவல் ஏற்று நடப்பதே குடியின் கடமையும் இயல்புமாகும். அவ்வாணையை ஏன் என்று கேட்கவோ, அதன் நலந் தீங்குகளை ஆராயவோ குடிகட்கு உரிமை இல்லை. அதேபோல, இனி இராமன் கட்டளையைத் தலைமேல் தாங்கி நடப்பதே இலக்குவனுக்குக் கடமையாகும் என்பதைக் குறிப்பிட விரும்பிய அத் தாய், இராமனை 'மன்னவன்' என்று குறிப்பிட்டாள். மன்னன் பதவியை அப்பொழுது தான் துறந்துவிட்டு வந்த மகனை 'அம் மன்னவன்' என்று சுமித்திரை குறிக்கும்பொழுது அவளது மனத்திட் பத்தை நாம் வியவாமல் இருத்தல் இயலாது. தசரதனும், கைகேயியும்– ஏன்? – உலகத்தாரனைவருமே கூடிக்கூட முடியை இராம னிடமிருந்து பறித்துப் பரதனுக்கு நல்கலாம். ஆனால், சுமித்திரை அச்செயலை ஏற்றுக் கொள்வதாக இல்லை. அவளைப் பொறுத்த வரை இராமனே இன்னும் மன்னவன்; அவன் காடு சென்றாலும் கவலை இல்லை; அவனே மன்னன். பிறரைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறையாகவோ பழியாகவோ கூறாமல், தன் மனக் கருத்தைச் சந்தருப்பம் வந்தபொழுது அழுத்தமாகக் கூறும் இம்மாதரசியின் வன்மை சிந்திக்கத் தக்கது.

ஒப்புயர்வற்ற பேச்சு

இராமனை மன்னன் என்று மதித்து அவன் ஏவலின் வழி நிற்க எனக் கட்டளை இட்டுவிட்ட பிறகு என்ன தோன்றிற்றோ தெரிய வில்லை, சுமித்திரைக்கு! உடனே தன் சொற்களை மாற்றிவிட்டு, வேறு கூறுகிறாள்.

"மகனே, இவன் பின்னே செல்வாயாக. ஆனால், தம்பி என்ற கருத்துடன் செல்லாதே! அடியானைப் போல ஏவல் செய். இவன் இவ்வயோத்திக்கு வருவதுண்டாயின், பின்னே வா. அவ்வாறில்லை யாயின், இவன் முன்னம் முடிந்திடு," என்ற கருத்தில் இதோ பேசுகிறாள்.

"பின்னும் பகர்வாள்: 'மகனே! இவன்பின்செல்; தம்பி
என்னும் படியன்று; அடியா ரினின்ஏவல் செய்தி;
மன்னும் நகர்க்கே இவன்வந் திடில்வா;அது அன்றேல்
முன்னம் முடி,'என் றனள்வாள் விழிசோர நின்றாள்."
(1752)

அரசனிடத்துக் குடிமகன் போல நடந்து கொள்ள வேண்டும் என்று கூறினால், அதனால் வரும் இடர்ப்பாட்டை உடன் கண்டு கொண்டாள் அவ்வரசி. குடிமக்கள் நலத்திற்காகத்தான் அரசன் இருக்கிறானே தவிர, அவன் நலத்திற்காகக் குடிமக்கள் இல்லையே! முற்கூறியபடி கூறிவிட்டால், இலக்குவன் நலந்தீங்குகளுக்காக இராமன் பொறுப்பாளியாக நேரிடும். எனவே, அக்கருத்தை மாற்றி அமைத்துவிட்டாள் அரசியான சுமித்திரை.

'தம்பி என்று நினைத்துப் போதல் வேண்டா,' என்பதால், இலக்குவனைக் காக்கும் பொறுப்பு இராமனுக்கு இல்லையாதல் காண்க. அதே கருத்தை மேலும் வலியுறுத்தவும், கண்டதற்கெல்லாம் இராமன் கையை எதிர்பார்க்க வேண்டா என்பதை இலக்குவனுக்கு அறிவுறுத்தவும், 'அடியாரினின் ஏவல் செய்தி,' என்றாள். கொடுக்கப் பட்ட வேலையின் உயர்வு தாழ்வு கருதாமலும், அது தன்னால் இயலக் கூடியதா என்பதை ஆராயாமலும், உயிருள்ளவரை செய்து தீர்க்கும் கடப்பாடு ஏவலாளர்க்கே உண்டு. அதேபோல, இலக்குவன் நினைந்து வாழவேண்டும் என்பதற்காகவே இதனைக் கூறினாள் சுமித்திரை. 'குடிமகன்போல நடந்துகொள்,' என்று கூறும்பொழுதே இவ்வாறு ஆணை வழி நடத்தல் வேண்டும் என்ற குறிப்பும் பெறப்பட்டதேயாயினும், அதனால் வரும் இடையூற்றை அழகான முறையில் நீக்கிவிட்டது அறிந்து மகிழ்தற்குரியது. இனி அடி யானுக்கும் ஆண்டானுக்கும் உள்ள தொடர்பையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். குடிமகன் கடமையைச் செய்துகொண்டு கூட மன்னனிடத்தில் அன்பில்லாதவனாய் இருக்கலாம். மன்னனிடம் பகைமை பாராட்டாமலும் அன்பு பாராட்டாமலும் இருந்துவிட்டால்,

அதில் தவறு கூறுவதற்கு ஒன்றும் இல்லை. 'நொதுமலர்' என்ற முறையில் இலக்குவன் இருந்துவிடக்கூடாதென்பதை அறிவுறுத்தவே ஆண்டான் அடிமை உறவு முறையைக் குறித்தாள் மூவரினும் மேம்பட்ட அக்கற்பரசி. அடிமை ஆண்டானிடம் உயிரைக் கொடுக்கும் அளவுக்கு அன்பு பாராட்ட வேண்டும். தனக்கென ஒரு நிலை இல்லாதவனாய் இருத்தலே அடிமையின் இலக்கணம். ஆண்டானிடத்து முழு அன்பு பாராட்டி அவனுடைய நலம் தீங்குகளே தன்னுடைய நலம் தீங்குகளும் ஆகும் என்று நினைத்து வாழும் மன நிலையே அடிமையின் இயல்பாகும். இந்த மனநிலையுடன் இலக்குவன் காட்டில் வாழவேண்டும் என்றே சுமித்திரை குறிக்கிறாள்.

இந்த அளவோடும் விடாமல், இன்னும் ஒருபடி மேலே சென்றும் ஒரு கட்டளை இடுகிறாள் மூன்றாம் அடியில். எத்துணைச் சிறந்த அடிமையிடமும் இதனை எதிர்பார்த்தல் ஆகாது; அவ்வாறு எதிர் பார்த்தல் முறையும் அன்று. ஆண்டானிடம் அன்பு பூண்டு பணி புரியும் ஓர் ஏவலன் அவ்வாண்டான் இறக்க நேரிட்டால் தானும் இறந்துவிட வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. மிகச்சிறந்த அடிமையாயின், தன் உயிரைத் தந்தேனும் ஆண்டானுக்கு உண்டாகும் இடரைத் தீர்க்க முயல வேண்டும். ஆனால், ஆண்டான் விதியால் இறக்க நேரிட்டால், அதனை நீக்க அடிமை செய்யத்தக்கது யாதுமில்லை. இதனையும் மாற்றிச் சுமித்திரை ஏவுகிறாள். 'அடிமையாகச் செல்கிற நீ, உன் ஆண்டானாய இராமன் இவ்வூருக்கு மீண்டால், மீண்டு வா; அவ்வாறு இல்லையாயின், அவனுக்கு முன்னே முடிந்துவிடு,' என்னும் கருத்தில்,

> "'மன்னும் நகர்க்கே இவன்வந் திடில்வா;அது அன்றேல்,
> முன்னம் முடி.' என்றனள்."

இவ்வாறு மகனைக் கட்டளை இடும் தாயை இதுவரையிற் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அதுவும் மாற்றாள் மகனுக்காகத் தன் மகனை இவ்வாறு கட்டளை இடும் தாயை மானிடப் பிறவியில்

சேர்க்காமல் தெய்வப் பிறவியாகவே கொள்ளல் தகும். இவ்வாறு கூறுவதிலும் ஓர் அழகு பொருந்தக் கூறுவதையும் காண்டல் வேண்டும். 'மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா,' என்று கூறிய அத்தெய்வம், அதனையடுத்து யாது கூறியிருத்தல் வேண்டும்? 'அவ்வாறன்றி, அவனுக்கு ஏதேனும் தீங்கு நேருமாயின், அவன் முன்னரே நீ முடிந்துவிடு,' என்றுதானே கூறல் வேண்டும்? அவ்வாறு கூறினாலும் தவறு ஒன்றும் இல்லை.

ஆனால், 'இராமனுக்குத் தீங்கு நேர்ந்தால்' என்ற அமங் கலமான சொல்லை வாயாற் கூறக்கூட அம்மானிடத் தெய்வம் அஞ்சு கிறது. 'விராவரும் புவிக்கெலாம் வேதமே என' இராமனுக்குத் 'தீங்கு நேர்ந்தால்' என்று கூற எவ்வாறு நாத்துணியும்? எனவே, அதனைச் சொற்களாற் கூறாமல், குறிப்பால் பெற வைக்கிறாள்.

> " 'மன்னும் நகர்க்கே இவன்வந் திடில்வா;அது அன்றேல்,
> முன்னம் முடி.' என்றனள்."

'அது அன்றேல்' என்ற சொற்களாலேதான் அவள் அஞ்சிய அச்சத்தை வெளியிட முடிந்தது. ஆனால், தன் மகனைக் கூறும் பொழுது 'முன்னம் முடி,' என்கிறாள். 'இராமனுக்கு முன்னரே நீ இறந்துவிடு,' என்பதே இப்பகுதியின் பொருள். அயல் வீட்டிலிருந்து வந்து வாழ்க்கைப்பட்ட சீதைக்குக்கூட இச்சொற்களைக் கேட்டவுடன் ஒரு துணுக்கம் ஏற்படுகிறது.

சரியான நேரத்தில் சீதைக்கு இச்சொற்கள் நினைவுக்கு வருகின்றன. பிரமாத்திரத்தாலே கட்டுண்டு இறந்தவனை ஒப்பக் கிடக்கும் இலக்குவனைக் காண்கிறாள் பிராட்டி. தன்னால் நேர்ந்த இக்கொடும்பழியை நினைத்து ஆவி சோர்கிறாள் அக்கற்பரசி. காடு நோக்கிப் புறப்படுகையில் தன் மாமி கூறிய இச்சொற்கள் பிராட் டியின் நினைவுக்கு வருகின்றன. உயிர் துடிக்க, உள்ளந் துடிக்க, இதனைக் கூறுகிறாள். 'தீவினையின் பயனாய்க் கடுமையான

காட்டுவழியில் எங்கள் இருவரோடும் செல்லப் புறப்பட்டபொழுது 'இளையாய்! அறிவுடையோனே! உனக்கு மூத்தவனாகிய இராமன் விதியால் இறக்க நேரிட்டால் அவனுக்கு முன்னரே முடிந்துவிடு,' என்று கூறிய உன் தாயாரின் வார்த்தைகளைக் கடைப்பிடித்து விட்டாயோ!' என்ற கருத்தில்,

> "மேதா! இளையோய்! விதியார் விளைவால்
> போதா நெறிஎம் மொடுபோ துறுநாள்
> 'மூதான் அவன்முன் னம்முடிந் திடு' எனும்
> மாதா உரையின் வழிநின் றனையோ?" (8689)

என்றும் கூறியழக் கேட்கிறோம்.

இரண்டு பாடல்கள் அளவே வாய் திறந்து பேசும் சுமித் திரையை ஓரங்குல உயரத் தந்தத்தில் கடைந்து செய்யப்பட்ட ஒப்பற்ற சிற்பமாகச் செய்து விட்டான் கம்பநாடன்! அவள் கூற்றாகிய இரண் டாம் பாடலை நோக்க, அவள் கோசலையினும் மேம்பட்டவளாகவே காட்சியளிக்கிறாள்.

□

கங்கை

Printed By : BALAJI OFFSET PRINTERS
Chennai - 106. Ph: 4759094, 4751794.